
# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்:28

சுடர் 33 கதிர் 46 மார்கழி 27ஆம் நாள் வியாழக்கிழமை 11 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2048


## நாடாளுமன்றில் அடிதடி



- ஏட்டிக்குப் போட்டியாக கன்னங்களில் 'பளார்'
- மேலாடை கிழிய மோதிய எம்.பிக்கள்
- ரணில் மீது போத்தல் வீச்சு
- திருடன் கோசத்தால் அதிர்ந்தது நாடாளுமன்று

கொழும்பு, ஜனவரி 11
இந்த ஆண்டின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு பெரும் அடிதடியுடன் ஒத்திவைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிதடியில் ஈடுபட்டு சட்டைகளைக் கிழித்துக் கொண்டனர். ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்து விழுந்து புரண்டனர். நாடாளுமன்றம் போர்க்களம் போன்று காட்சியளித்தது. பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிர்ச்சியில் மலைத்துப் போய் நின்றனர்.
மோதல் உச்சக்கட்டத்தை அடைந்ததும் நாடாளுமன்ற அமர்வை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் சபாநாயகர்.
மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் விவாதிப்பதற் >> 06

## சட்டவாட்சியைப் புதைக்க ஒருபோதும் தயாரில்லை

### நாடாளுமன்றில் ரணில் உரை

கொழும்பு, ஜன.11
மகிந்த ஆட்சிக் காலத்தின் மோசடிகளை மூடி மறைத்து சட்டவாட்சியை குழிதோண்டி புதைப்பதற்கு நாம் தயாராக இல்லை. 2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிதிச் சபையின் அனுமதியின்றி இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முன்னாள் நிதி அமைச்சர் மகிந்த ராஜபக்ச நாடாளு >> 06

## ஆணைக்குழு அறிக்கை 17ஆம் திகதி மன்றுக்கு

### சபாநாயகர் கரு தகவல்

கொழும்பு, ஜன. 11
மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரச தலைவரின் செயலர் கடிதம் மூலம் உறுதியளித்துள்ளார். >> 06



## உண்மையான திருடரை மக்கள் நன்கறிவார்கள்

### அரச தலைவர் மைத்திரி சூசகம்

கொழும்பு, ஜன. 11
பணப் பையை திருடிக்கொண்டு ஓடும் கள்வனின் பின்னால் கூச்சலிடுவதைப்போல இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் உள்ள இரு சாராரும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் கொள்கின்றனர். ஆனால் உண்மையான திருடர்களை மக்கள் நன்கு அறிவார்கள்.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். >> 07

## விசாரணை அறிக்கையை வெளிப்படுத்துக

### எதிர்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 11
பிணைமுறி மோசடி விசாரணையின் முழுமையான அறிக்கை விரைந்து பகிரங்கப்படுத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார். >> 24

### வேட்பு மனு நிராகரிப்பு:


## ரிட் மனுக்கள் ஒரே தினத்தில் பரிசீலனை

கொழும்பு, ஜன. 11
உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு >> 07

## மதுபானம்: பெண்களுக்கான தடையை நீக்கியது அரசு!

கொழும்பு, ஜன. 11
மதுபான உற்பத்தி நிலையங்க ளிலும், விற்பனை நிலையங்களிலும் மதுபானம் கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் அந்த இடங்களில் வேலை செய்யவும் பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அரசு நீக்கியுள்ளது.
இது தொடர்பிலான அரசிதழில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுக் கைச்சாத்திட்டார் என்று அந்த அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.
மதுபான உற்பத்தி நிலையங்களிலும், விற்பனை நிலை >> 07

## மனிதம் மரித்ததோ?



பிறந்து சிலமணி நேரத்தில் கைவிடப்பட்ட சிசு ஒன்று கிளிநொச்சியில் நேற்று மீட்கப்பட்டது. இந்தச் சிசு கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது.
(விரிவான செய்தி பக். 13)

## தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பு பெயரைப் பயன்படுத்துவதற்குத் தடை

யாழ்ப்பாணம், ஜன. 11
உதய சூரியன் சின்னத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது கட்சியின் பெயரை தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்று பயன்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தடை விதித்துள்ளது.
தேர்தல்கள் ஆணைக் குழுவினருக்கும், கட்சிகளின் செயலர்களுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது.
உதய சூரியன் சின்னத்தில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளும் தரப்பினர், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்தி வருகின் >> 07

### தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல்

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 44 ஆவது நினைவு தின நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள நினைவுத் தூபியில் நடைபெற்றது. நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என்று பலரும் கலந்துகொண்டனர்.
1974 ஜனவரி 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் 9 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
(விரிவான செய்தி பக்.04)



### சமூக வலைத்தள

## தேர்தல் விதிமீறலை முறையிடலாம்

யாழ்., ஜன. 11
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் முறையிட முடியும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் தேர்தல் விதிமுறைக்கு அமையாத பரப்புரைகள் மற்றும் செய்திகள் தொடர்பில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம்.
மாவட்டச் செயலக குறைகேள் மையத்தின் 021 222 5000 >> 07

# வன்முறையற்ற தேர்தலாக மாற்றிட உதவிடுங்கள்

## திலிக விக்ரமரத்தின வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஜன.11

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அமைதியாகவும் சுமுகமான தாகவும் வன்முறையற்ற தேர்தலாக நடத்தி, சிறந்த முறையில் முடிவுகளைப் பெற்றுக்கொள்ள உதவுங்கள் என அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் திலிக விக்ரமரத்தின தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அக்கரைப்பற்று மாநகர சபை, பிரதேச சபை ஆகியவற்றின் அபேட்சர்கள் மற்றும் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் சம்மேளனம் ஆகியோருக்கு, தேர்தல் விதி முறை தொடர்பான விளக்க மளிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பெரிய பள்ளி வாசலில், நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"புதிய தேர்தல் விதிகளின்படி இடம்பெறும் கலப்புமுறை மற்றும் விகிதாசார தேர்தல் முறையின் கீழ், இலங்கையில் ஆகக்குறைந்த வட்டாரங்களைக் கொண்ட ஒரு பிரதேச சபையாக, அக்கரைப்பற்று பிரதேச சபை காணப்படுகின்றது.

இந்தப் புதிய தேர்தல் முறைமைகள் பற்றி அபேட்சகர்கள் முறையாக விளங்கிக் கொண்டு செயற்படும் போதே, மக்களுக்கு எதிர்காலத்திட்டங்கள், வரப்பிரசாதங்கள் மற்றும் பாதிப்புகள் பற்றி விளக்கமளிக்க முடியும்.

தேவையற்ற பதாகைகள், சுவரொட்டிகளை பொது இடங்களில் ஒட்டுதல், பொலித்தீன் பாவனை, ஒலிபெருக்கிப் பயன்பாடுகள் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும். தேர்தல் பரப்புரை அலுவலகங்கள் அமைப்பது பற்றி நன்கு அறிந்து கொண்டு, பொலிஸாரினதும் தேர்தல்கடமை அதிகாரிகளினதும் ஆலோசனையின் கீழ் கட்சிகள், அபேட்சகர்கள் செயற்படும் போது, நீதியானதும், வன்முறையற்றதுமான தேர்தலை நடத்த இலகுவாக அமையும்" என்றார். (ற-ரி5)

# பட்டிருப்பைக் கூட்டமைப்பு அனாதையாக விட்டுள்ளது

## ஐ.தே.க.வேட்பாளர் வாமதேவன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது பட்டிருப்புத் தொகுதியை ஒரு அனாதையாக விட்டு விட்டுச் சென்றுள்ளார்கள். இது ஒரு வேதனையான விடயம் என ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் களுவாஞ்சிகுடி வட்டாரத்தில் போட்டியிடும், முன்னாள் கிராமத் தலைவர் மு.வாமதேவன் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"கடந்த காலத்திலிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பட்டிருப்புத் தொகுதியில் ஒரு பிரதான கிளைக் காரியாலயம் அமைத்து அவற்றிலிருந்து இந்தத்தொகுதி மக்களின் தேவைகளையறிந்து செயற்பட வேண்டும் என நாம் அவர்களிடம் கோரியிருந்தோம். அதற்கு அவர்களும் சம்மதம் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது பட்டிருப்புத் தொகுதியை ஒரு அனாதையாக விட்டுவிட்டுச்சென்றுள்ளார்கள். இது இங்குள்ள மக்களின் மனத்தில் ஒரு வேதனை தரும் விடயமாக பதிவாகியுள்ளது - என்றார். (ற-ரி5)

# கட்சிச் செயலரின் படம் போடத் திராணியற்றவர் தலைமை பற்றிப் பேசுகிறார்

## சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா.ஜன.11

தங்களுடைய கட்சி பொதுச் செயலாளரின் படத்தைப் போடுவதற்கு திராணியற்றவர்கள் மாற்றுத் தலைமை பற்றி பேசுகிறார்கள் என வடமாகாண சபை உறுப்பினரும், முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா நகரசபையில் பண்டாரிக்குளம் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் க.சுமந்திரனின் அலுவலகத்தை நேற்று திறந்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்ற ஆனந்தசங்கரி அவர்களுடைய கட்சி வவுனியாவில் பல துண்டறிக்கைகளை வெளியிட்டு இருந்தது.

அந்த துண்டுப் பிரசுரத்தில் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள். புதிய தலைமை அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது இடைக்கால அறிக்கையை நிராகரிப்பதற்கு வாக்களிப்போம். ஆனந்த சங்கரி ஐயாவின் படத்தைப் போட்டால் தாங்கள் தோற்று போய்விடுவோம் என யோசிக்கிறார்கள். ஆனந்த சங்கரி ஐயா அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர். நீண்டகாலமாக அந்தக் கட்சியை வழிநடத்திய ஒருவருடைய படத்தைக் கூட போடுவதற்கு திராணியற்றவர்கள் உள்ளூர் தலைவர்களான மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் படங்களைப் போட்டு துண்டறிக்கைகளை வெளியிட்டுள்ளார்கள்" என்றார். (ற-ரி5)

# வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம்

முல்லைத்தீவு.ஜன.11

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மாந்தை மேற்கு பிரதேச சபை வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

வெள்ளாங்குளம் பாலியாற்றில் உள்ள தலைமைச் செயலகத்தில் இக் கூட்டம் நடைபெற்றது. அறிமுகக் கூட்டம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாந்தை மேற்கு பிரதேச அமைப்பாளர் இ.அரிச்சந்திராவின் ஒருங்கிணைப்பில் ஈ.ம.ஜ.கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி ஜீவரெட்ணம் தலைமையில் இடம்பெற்றது. (ரி2)



# அரசால் வழங்கப்படும் அபிவிருத்தியை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## ஸ்ரீஸ்கந்தராசா தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.11

அரசால் வழங்கப்படும் அபிவிருத்திகள் முடக்கப்படாமல் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட 14 ஆம் வட்டார வேட்பாளர் தியாகராசா ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார். எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக நேற்று பிரத்தியேக ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மாகாணசபை உறுப்பினர்களோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ இங்கு இல்லை ஆகையால் எமது கிராமங்களுக்கென ஒதுக்கப்படும் அபிவிருத்திகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவது குறைவாகவுள்ளது. இந்தமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வட்டார ரீதியிலான தொகுதிவாரி தேர்தல் முறையானது மிகவும் இலகுவானதும் சாதகமானதுமாக அமைகின்றது. தற்போது நான் மட்டக்களப்பு நகரசபைக்குட்பட்ட 14 ஆம் வட்டாரத்தில் போட்டியிடுகின்றேன் தேர்தலின் போது எமது பிரதேச மக்களின் வாக்குகள் மூலமாக வெற்றி பெற்றால் அரசால் வழங்கப்படும் அபிவிருத்திகளையும் செயற்றிட்டங்களையும் முடக்கப்படாமல் சரியான முறையில் நடைமுறைப்படுத்தவுள்ளேன் - என்றார். (ற-ரி5)

# பெண் வேட்பாளரை களமிறக்க கட்சிகள் இடம் கொடுக்கவில்லை

## ஐ.தே.க.வேட்பாளர் விஜயலெட்சுமி தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.11

கடந்த காலத்திலிருந்து இலங்கையில் 53 வீதம் வாக்காளர்களாக பெண்கள் இருந்தபோதும் பெண்களை வேட்பாளர்களாகக் களமிறக்குவதற்கு தமிழ் கட்சிகள் இடம் கொடுக்கவில்லை, எங்களை உதறித் தள்ளிவிட்டு அவர்கள் ஆசனங்களில் அமர்ந்துவிட்டார்கள். இவ்வாறு களுவாஞ்சிகுடி வட்டாரத்தில் ஐக்கிய தேசிக் கட்சியில் போட்டியிடும் விஜயலெட்சுமி இராமச்சந்திரன் தெரிவித்தார். களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் வாமதேவனின் இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"எமது வட்டர மக்கள் யானைச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் எமது பெண்களுக்கான அபிவிருத்தி, மற்றும் சுகாதார வசதிகள், உள்ளிட்ட பல நிறைவான முன்னேற்றத்துக்கு வழிவகுக்கலாம்.

எமது மக்களின் அடிமனதில் அடிஊன்றி இருக்கின்ற தமிழ் உணர்வு என்ற போலித்தனமான வார்த்தைகளைக் கண்டு ஏமாறாது, அற்ப ஆசைகளுக்காக விட்டுக் கொடுக்காமல், அறிவு பூர்வமாகச் சிந்தித்து, கிராமத்தின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு யானைச் சின்னத்துக்கு எமது மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றார். (ற-ரி5)

# தேர்தல் தொடர்பான சுவரொட்டியால் குழப்பம்

தென்மராட்சி ஜன. 11

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகியவற்றால் பெண்கள் தொடர்பான சுவரொட்டிகளை கிராம அலுவலரின் அலுவலகத்தில் காட்சிப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டு பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தச் சுவரொட்டிகள் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் இருந்ததால் கிராம சேவகர்கள் அவற்றை ஏற்க மறுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தல்கள் வேளையில் இந்த சுவரொட்டிகளை கிராம அலுவலர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தினால் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களை ஆதரிக்குமாறு வாக்காளர்களை கிராம அலுவலர் கோருவது போன்று அமைந்துவிடுமெனக் கூறி கிராம அலுவலர்கள் அவற்றைப் பொறுப்பேற்க முன்வரவில்லை யெனத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் காலத்தில் இவ்வாறான சுவரொட்டிகளை காட்சிப்படுத்துவது தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரானதாக இருக்குமெனவும் அவர்கள் தெரிவித்தனர். (ற.ரி5,9)

# மு.காங்கிரஸ் இப்போது தூக்கி எறியப்பட்டுள்ளது

## ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு

திருகோணமலை,ஜன.11

தியாகிகளால் உருவாக்கப்பட்ட கட்சியான சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று தியாகிகளாலேயே தூக்கி எறியப்பட்டுள்ளது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் வர்த்தக வாணிப கைத்தொழில் அமைச்சருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியா நகர சபை மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

"பெப்ரவரி 10ஆம்திகதி அதிகூடிய வாக்குகளால் திருகோண மலை மாவட்டத்தில் ஆறு உள்ளூராட்சி சபைகளை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றும்.

இந்தத் தேர்தல் சிறிய தேர்தல் எதையும் சாதிக்க முடியாது என்றெல்லாம் கூறுவார்கள் அதற்கு ஒருபோதும் விலைபோக வேண்டாம். எமது சமூகம் கடந்த காலங்களில் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்துள்ளது. எமது சமூகத்துக்காக சமூகத்தின் விடிவுக்காக குரல் கொடுக்கும் என்னைப்பற்றி இனவாதிகள் பொய்யான பரப்புரைகளைச் சொல்லித் திரிகிறார்கள். குரல் வளையை நசிக்கினாலும் தொடர்ந்தும் போராடுவேன். எல்லாக் கட்சிகளும் என்னை எதிரியாகப் பார்க்கின்றன. நாட்டில் யாருக்கும் அநியாயம் இடம்பெறாத வண்ணம் ஒற்றுமையாக சகோதரத்துவத்துடன் வாழ நினைக்கின்றேன். யாருக்கும் எதிரிகள் நாங்கள் அல்ல இன ஐக்கியத்தை சமூக உணர்வோடு வாழ்பவர்களாக நாங்கள் இருக்கிறோம்" - என்றார். (ற-ரி5)

# வவு.பேருந்து தரிப்பிட விவகாரத்தால் கிழக்கு மாகாண சேவைகளும் பாதிப்பு

## வடக்கு முதலமைச்சரின் தலையீட்டை நீக்குமாறும் கோரிக்கை

வவுனியா,ஜன.11

வவுனியாவில் பழைய இ.போ.ச பேருந்து நிலையத்தை தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததன் மூலம் கிழக்கு மாகாணத்திலிருந்து வடக்குக்கான சேவைகளை மேற்கொள்ளும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து சேவைகளும் பாதிப்படைந்துள்ளன என்று சிறிலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.இது தொடர்பில் அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் போக்குவரத்து அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று சங்கத்தின் உப தலைவர் எம்.ஐ. லாபீர் தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய மனு அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் போக்குவரத்து அமைச்சர் ஆகியோருக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா பழைய இ.போ.ச பேருந்து நிலைய விவகாரம் தொடர்பில் வடக்கு மாகாண இ.போ.ச குழுவினருடன், கிழக்கு மாகாண இ.போ.ச பேருந்து ஊழியர்களும் இணைந்து ஆதரவு தெரிவிக்கத் தீர்மானித்துள்ளோம்.

எமது சிறிலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது.

வவுனியா நகர மத்தியில் இதுவரை காலமும் இலங்கைப் போக்குவரத்துச் சபையால் பாவனைக்குட்படுத்தப்பட்டு வந்துள்ள எமது பழைய பேருந்து நிலையம் வடக்கு முதலமைச்சரின் தலையீட்டால் தனியார் வசமாகியுள்ளது.



1. இ.போ.ச பேருந்து சேவைகளை நம்பியிருக்கும் பயணிகள் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.
2. வடக்கு முதலமைச் சரின் தலையீட்டைத் தடுத்து நிறுத்தி பழைய பேருந்து நிலையத்தை இ.போ.ச குழுவினருக்கே மீளப் பெற்றுத் தர வேண்டும்.
3. அந்தப் பகுதியில் இ.போ.ச பேருந்து சாரதிகள், நடத்துநர்கள், பயணிகள் மற்றும் பேருந்துகள் மீது நடத்தப்படும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.
4. இ.போ.ச பஸ் சேவைகளை முடக்குவதற்காக பல சூட்சுமங்கள் கையாளப்படுகின்றன. அதில், குறைந்த கட்டணங்கள் அறிவிடப்படுவதும் இடம்பெறுகின்றது.
5. மண்ணெண்ணெய் கலந்து எரிபொருள் பாவிப்பதன் மூலம் எரிபொருள் செலவை மீதப்படுத்தி குறைந்த கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.
6. இது போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறும் செயலாகும். எனவே இவற்றைக் கவனத்தில் எடுத்து இ.போ.ச பேருந்து சேவைகளை மேம்படுத்தவும் இ.போ.ச பேருந்து சேவைகளை நம்பியிருக்கும் பயணிகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-ரி2,46)




## மாணவர்களின் மரதன் ஓட்ட நிகழ்வு

சாவகச்சேரி,ஜன.11

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை மையமாக வைத்து கல்லூரி மாணவர்களின் மரதன் ஓட்ட நிகழ்வுகள் நேற்றுக் காலை நடைபெற்றன. கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இருந்து ஆரம்பமான போட்டிகளை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரனும்,வீரசிங்கம் மத்திய கல்லூரி முன்பாக அதிபர் ந.ஜெயக்குமாரனும் ஆரம்பித்து வைத்தனர். போட்டியில் ஆண்கள் பிரிவில் முறையே இ.கஜவதனன் ப.கஜிவன், வ.ஹேமலக்ஸன் ஆகியோரும் பெண்கள் அணியில் முறையே ஜெ.சோபனா, க.கயூரி, தி.யுகந்திகா ஆகியோர் வீதி ஓட்ட நிகழ்வில் வெற்றி பெற்றனர். (ற-ரி2,9)





யாழ். உயரப் புலம் வித்தியாலயத்தின் சுகாதாரக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சுகாதார பரிசோதகரும் இணைந்து நேற்று பாடசாலையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். யாழ் செஞ்சிலுவை சங்க கிளைத் தலைவரால் கழிவகற்றல் தொட்டிகள் மற்றும் தொற்று நீக்கிகளும் வழங்கப்பட்டன. (ற-ரி5, 422)

## அனுமதியற்ற கேபிள் இணைப்புக்கள் துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்ப்பாணத்தில் அனுமதிப்பத்திரமின்றி முன்னெடுக்கப்பட்ட கேபிள் இணைப்புகள், நேற்று முதல் அகற்றப்பட்டு வருகின்றன.

கொழும்பிலிருந்து வந்த தொலைத்தொடர்பு ஆணைக்குழு அதிகாரிகளால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

அரசின் அனுமதிப் பத்திரமின்றி தொலைக்காட்சி அலைவரிசைகளின் கேபிள் இணைப்பை வழங்க முடியாது என, ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இவ்வாறான கேபிள்கள் அனைத்தும் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் அகற்றப்பட வேண்டும் என்று ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட போதும் அவை அகற்றப்படவில்லை.

இதையடுத்து சட்டவிரோதமாக இயங்கும் சேவை நிலையங்களை முற்றுகையிட்டு. அங்குள்ள தொழில்நுட்ப சாதனங்களை அரசுடைமையாக்கும் பணிகளை முன்னெடுத்தனர். (ற)

## விபத்தில் இருவர் படுகாயம்

அச்சுவேலி,ஜன.11

அச்சுவேலி ஆவரங்கால் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

கரவெட்டியைச் சேர்ந்த இராசேந்திரம் நதீபன் (வயது-32), நல்லதம்பி கார்த்திகேசு (வயது70) ஆகியோரே படுகாயமடைந்தனர். இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றோடொன்று மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. வடமராட்சியில் இருந்து யாழ்.நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஒன்று திடீரென அச்சுவேலிக்குச் செல்வதற்குத் திரும்பிய போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியது.படுகாயமடைந்தவர்கள், அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி2,11)

## பெண் தலைமைக் குடும்பத்துக்கு பொலிஸாரால் வீடு கையளிப்பு



வவுனியா,ஜன.11

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் பெண் தலைமைக் குடும்பம் ஒன்றுக்கு பொலிஸாரால் வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பூவரசன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமிந்த எதிரிசிங்க தலைமையில், செட்டிகுளம் மற்றும் பூவரசன்குளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகேவினால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டு வீடு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

பூவரசன்குளம், வாரிக்குட்டியூர் யுனிட் 6 இல் வசித்து வரும் சொலமான் மேரி சாலட் என்பவருக்கே, பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தினரின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட புதிய வீடு கையளிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு போரில் கணவனை இழந்து இந்தியா சென்று மீண்டும் 2011 ஆம் ஆண்டு இலங்கையில் குடியேறிய இரண்டு பிள்ளைகளைக் கொண்ட இந்தக் குடும்பம் வறுமை நிலையில காணப்பட்டது.

இதையடுத்து தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட கடனில் வீடு அமைத்துக் கொள்ள முயன்ற போதிலும் வீட்டைக்கட்டி முடிவுறுத்த முடியாத நிலையில் இருந்தனர்.

இந்த பெண் தலைமைக் குடும்பத்தின் நிலைமை பிரஜைகள் பொலிஸ் குழுவினரால் அறியப்பட்டது. பூவரசன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இலங்கை பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்திரவின் வழிகாட்டிலில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் முயற்சியில் பூவரசன்குளம் பொலிஸாரினால் உதவிகள் வழங்கப்பட்டு 15 இலட்சம் ரூபா செலவில் வீடு கட்டப்பட்டது. சர்வமதத்தலைவர்கள், கிராமசேவையாளர் திரு.சிவசுப்பிரமணியம், பிரஜைகள் பொலிஸ் குழுவின் தலைவர், கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் அபிவிருத்திச்ங்கம், பொதுமக்கள் எனப் பலரும் கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-ரி2)

## ரணவிரு சேவையின் கீழ் 58 வீடுகள் சீரமைப்பு

### கீர்திகா ஜயவர்தன தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.11



போர் இடம்பெற்ற காலப்பகுதியில் தாய் நாட்டுக்காக தமது உயிரைத் தியாகம் செய்த அல்லது சம்பவங்களின்போது அங்கவீனமடைந்த படையினர் மற்றும் பொலிஸாரின் குடும்பங்களுக்கு வீடுகள் சீரமைத்துக் கொடுக்கும் 'ரணவிரு சேவா' அதிகார சபையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 58 வீடுகள் சீரமைத்துக் கொடுக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என மாவட்ட அலுவலர் ரீ.எச். கீர்திகா ஜயவர்தன தெரிவித்தார். மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற ரணவிரு குடும்ப அங்கத்தவர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"போர் இடம்பெற்ற காலப்பகுதியில் உயிரிழந்த, காணாமற்போன, அல்லது சம்பவங்களின்போது அங்கவீனமடைந்த படையினர் மற்றும் பொலிஸாரில் தங்கி வாழ்ந்த 136 குடும்பங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது வரை இனங்காணப்பட்டுள்ளன.

இவர்களுக்கான சேமநலன்களை 'ரணவிரு சேவா' கவனித்து வருகின்றது.

இவற்றைத் தவிர ரணவிரு குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் குடும்பங்களிலுள்ள இளைஞர், பெண்களின் தொழில் வாய்ப்பையும் கருத்திற் கொண்டு பல்வேறு சுயதொழில் பயிற்சி நெறிகள் திட்டமிடப்பட்டுள்ளன - என்றார். இந்தநிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட ரணவிரு சேவா அமைப்பின் தலைவர் எஸ்.ஏ.சி. அப்துல் வஹாப், அதன் செயலாளர் எஸ்.கனகசபை, பொருளாளர் ஏ. லிங்கராஜா உட்பட ரணவிரு பயனாளிக் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ற-ரி5)



யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில்

# 2017இல் 905 பேர் டெங்கால் பாதிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.11

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் கடந்த ஆண்டில் 905 பேர் டெங்கின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்தது. இந்த டெங்கின் தாக்கம் கூடுதலாக கரையோர பிரதேசங்களில் அதிகரித்து காணப்பட்டது.

குறிப்பாக நாவாந்துறை, வண்ணார்பண்ணை, நல்லூர், குருநகர் போன்ற பிரதேசங்களில் இதன் தாக்கம் சற்று அதிகரித்துக் காணப்பட்டது.

ஜனவரியில் 153 பேரும், பெப்ரவரியில் 89பேரும், மார்ச் 72பேரும், ஏப்ரல் 73 பேரும், மே 56 பேரும், ஜீன் 39பேரும், ஜீலை 55 பேரும், ஓகஸ்ட் 31 பேரும், செப்ரெம்பர் 30 பேரும், ஒக்ரோபர் 101 பேரும், நவம்பர் 77 பேரும், டிசெம்பர் 129 பேரும் என 901 பேர் பாதிக்கப்பட்டனர்.

அதே சமயம் இந்த ஆண்டில் ஜனவரி மாதத்தில் இதுவரைக்கும் 45 பேர்வரையில் டெங்கால் பாதிக்கப்பட்டள்ளனர். (எ-17)

சாவகச்சேரி பேருந்து நிலையத்தின்

# திறப்பு விழா நினைவுக்கல் அடித்து நொறுக்கப்பட்டது

சாவகச்சேரி ஜன. 11

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த திறப்பு விழா நினைவுக்கல் நேற்றுமுன்தினம் இரவு உடைத்து நொருக்கப்பட்டுள்ளது.

போர் காரணமாக கடந்த 2000ஆம்ஆண்டுபேருந்து நிலையம் முழுமையாக சேதமடைந்ததால் தற்போதுள்ள பேருந்து நிலையக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு அப்போதைய அமைச்சராகவிருந்த கே.என்.டக்ளஸ் தேவானந்தாவால் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இதுவரை காலமும் பெயர்க்கல்லை விளம்பரப் பதாகைகள் மூடி மறைத்திருந்தன எனவும் கடந்தவாரம் நகரசபையினர் தேர்தல் சுவரொட்டிகள் அப்புறப்படுத்தும் நடவடிக்கையில்ஈடுபட்டவேளையில் பெயர்க்கல் காணப்பட்டது எனவும் அது நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# சீரற்ற மின்சார விநியோகத்தால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம் ஜன 11

வடமராட்சி பிர தேசத்தில் நேற்றுமுன்தினம் காணப்பட்ட சீரற்ற மின்சார விநியோகத்தால் மக்கள் பாதிப்படைந்தனர்.

நேற்றுமுன்தினம் 8 மணி முதல் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டும் வலுக்குறைந்த மின்சாரம் இடையிடையே வந்து நின்றதாலும் மின்சாரத்தடன் தொர்புபட்ட தொழில்கள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன.

குறிப்பாக இலத்திரனிய சாதனங்கள் இயக்குவதில் அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் பாதிப்படைந்ததுடன் சிரமங்களையும் எதிர் கொண்டனர்.

சீரற்ற மின்விநியோகம் குறித்து மின்சார சபைகளுடன் அலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்ற போதும் தொடர்புகொள்ள முடியாமல் போய்விட்டது. (எ-173)

# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் நினைவுதினம்

யாழ்ப்பாணம் ஜன 11

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 44 ஆவது நினைவு தினம் நேற்றையதினம் நடைபெற்றது. 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.



அங்கு அரசியல்வாதிகளும் உள்ளூராட்சி சபை வேட்பாளர்களும் புல் பிடுங்கும் பணியிலும் தூபியை துப்புரவு செய்யும் பணியிலும் ஈடுபட்டனர். கடந்த ஆண்டு இடம்பெற்ற படுகொலை நினைவு தினத்தின்போதும் இவ்வாறாக புற்கள் நிறைந்த தரையாகவே காணப்பட்டது. அப்போது அங்கிருந்தவர்கள் அடுத்த முறை நாம் எழுச்சியாகவும் உணர்வு பூர்வமாகவும் கடைப்பிடிக்க வேண்டும் என வீர வசனங்கள் பேசியிருந்தனர். எனினும் நேற்றைய தினம் நிகழ்வு நடப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னரே அங்கு அவர்கள் வருகை தந்ததுடன் அங்கு இருந்த புற்களை பிடுங்கி துப்புரவு செய்தனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட மாகாண சபை உறுப்பினர் ஒருவர் அங்கிருந்த உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர்களைப் பார்த்து இந்தத் துப்பரவுப் பணிகள் எல்லாம் யாழ்ப்பாணம் மாநகர சபை செய்ய வேண்டிய கடமை. இங்கும் யாழ்ப்பாண மாநகர சபையின் வேட்பாளர்கள் வருகை தந்துள்ளீர்கள். நீங்களாவது மாநகரசபை ஊடாக முன்னரே துப்புரவு செய்திருக்கலாம். அரசியலில் வந்துள்ள இளைய சமுதாயத்தால் இதனைக் கூட செய்ய முடியாதா? என கேள்வி எழுப்பினார். வெறுமனே ஊடகங்களில் பெயர்கள் வரவேண்டும், படங்கள் வரவேண்டும் என்பதற்காக மட்டும் நிகழ்வு நேரத்துக்கு வந்துவிட்டு ஓடிவிடுகின்ற சிலரையே காணக் கூடியதாக இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், கஜதீபன், பரஞ்சோதி உட்படப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4- 8)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனத்தால் 'அதிகார சமநிலை, உலகமயமாக்கல் மற்றும் தெற்காசிய நாடுகள்' பற்றிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடல் யாழ்ப்பாணம் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நிகழவுள்ளது.

அதில் வளவாளராக கனடாவின் மொன்ட்ரீல் மாகில் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரி.வி.போல் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சம்மேளன ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். (எ-4)

# யோக்கட்டை குளிரூட்டியில் உரியமுறையில் வைக்காத வர்த்தகருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.11

குழந்தைகள் விரும்பி உண்ணும் யோக்கட் பதார்த்தத்தை உரியமுறையில் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பராமரிக்காத வர்த்தகர் ஒருவரைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் அவருக்கு ரூபா 2 ஆயிரத்து 500 அபராதம் விதித்தார்.

வவுனியா பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரிகள் கந்தபுரம் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய மொன்றில் சோதனை மேற்கொண்டனர். அப்போது குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த யோக்கட் உரிய வெப்பநிலையில் வைக்கப்படாமை தெரியவந்தது.

அதனையடுத்து வர்த்தகருக்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வர்த்தகர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அவரைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் அவருக்கு ரூபா 2ஆயிரத்து 500 அபராதம்விதித்துள்ளார். (ய-115)

# வட்டுக்கோட்டையில் நேற்று மோட்டார் சைக்கிள் விபத்து

ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.11

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் ஒருவர் காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று 8.30 மணியளவில் இடம்பெற்றது. தொல்புரம் பத்தானைக் கேணியடியைச் சேர்ந்த சாரங்கதரன்(ராசப்பா) என்பவரே இவ்வாறு காயமடைந்தார்.

சித்தன் கேணியில் இருந்து வட்டுக் கோட்டை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த சாரங்கதரன் வட்டுக்கோட்டைச் சந்தியை அண்மித்த பகுதியில் வலது புறமாகத் திரும்ப முற்பட்ட போது விபத்து ஏற்பட்டது. அதே திசையில் வந்த மற்றுமொரு மோட்டார்சைக்கிள் சாரங்கதரனை மோதித் தள்ளியது. இதனால் அவர் விபத்துக்குள்ளாகி காயமடைந்தார். சம்பவ இடத்தில் நின்றவர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த வட்டுக்கோட்டைப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். விபத்துக்குள்ளான இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-21)

சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்துக்கு கிடைத்த

# லாபத்தின் ஒரு பகுதி அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது

சாவகச்சேரி.ஜன.11

கடந்த 2013ஆம் ஆண்டு சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கிடைத்த லாபத்தின் ஒரு பகுதி அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் வ.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் லாப நிதி வழங்கும் நிகழ்வு சங்க மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் எனவும் நிகழ்வில் அங்கத்தவர், பணியாளர்களுக்கு பொங்கல் பொருள்களும் வழங்கப்படும் எனவும் சங்கப் பொது முகாமையாளர் க.நாகசுபாசன் தெரிவித்தார். (எ-9)

# ஆள் இல்லாத வீட்டில் பட்டப்பகலில் திருட்டு

சாவகச்சேரி.ஜன.11

ஆட்கள் இல்லாத வீட்டினுள் பட்டப்பகலில் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள சண்முகம் சாலையில் இடம் பெற்றது.

வீட்டில் தனித்து வாழ்ந்த மூதாட்டி அருகில் உள்ள மருத்துவமனையில் கிளினிக்குக்குச்சென்று விட்டு வீடு திரும்பிய போது பூட்டி விட்டுச் சென்ற கதவு திறந்த நிலையில் காணப்பட்டது.

உள்ளே சென்று பார்த்தபோது அங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளதைக் கண்டுள்ளார்..

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

வீதியைக் கடக்க முற்பட்டபோது விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இணுவில் தெற்கு, இணுவிலைச் சேர்ந்த சுப்பையா நித்திய ராணி (வயது68) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த 29ஆம் திகதி முச்சந்திமடத்தில் விபத்து நடந்துள்ளது. பாதசாரிகள் கடவையால் வீதியைக் கடக்க முற்பட்டவரை ஹையேஸ் வாகனம் மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் மேற்கொண்டார். (எ-ற-21)

## நடுவர் சபை அமர்வுகளில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.11
பிரதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நல்லூர் நடுவர் சபை அமர்வு தைப்பொங்கலை முன்னிட்டு 14ஆம் திகதி நடைபெறமாட்டாது.
அதற்குப் பதிலாக நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 12.30 மணி வரை இடம்பெறும் என நடுவர் சபைத் தவிசாளர் நா.நித்தியான நந்தன் தெரிவித்துள்ளார். (எ-4)

*****************

பருத்தித்துறை நடுவர் சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் பிணக்கு விசாரணைகள் தைப் பொங்கல் தினத்தை யொட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது.
அன்றையதின அமர்வு நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறுமென பருத்தித்துறை நடுவர் சபை அறிவித்துள்ளது. (எ-4)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.11
நுட்பவியல் கல்லூரியின் டிப்ளோமா தரக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
தேசிய தொழில் தகைமையுடையவர்கள் (என்.வி.கியூ மட்டம் 3 அல்லது மட்டம் 4) அல்லது ஜி.சி.ஈ உயர்தரத்தில் உரிய துறையில் தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
நாளைமறுதினம் சனிக்கிழமைவரை விண்ணப்ப முடியும். மேலதிக விவரங்களுக்கு 0212212403 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என தொழில்நுட்பக் கல்லூரி தெரிவித்துள்ளது. (எ-4)

## திருவாசக முற்றோதல்


யாழ்ப்பாணம்,ஜன.11
வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார் )ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நாளை வெள்ளிக்கிழமைகாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.
அனைத்து அடியார்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

### சாவகச்சேரிப் பிரதேச சபையின்

# திண்மக்கழிவுகள் சேகரிப்பு நிலையத்துக்கு தீ வைப்பு

யாழ்ப்பாணம் ஜன 11
சாவகச்சேரி பிரதேச சபையின் திண்மக்கழிவுகள் சேகரிப்பு நிலையம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட உப அலுவலகங்களான நாவற்குழி, சரசாலை, மிருசுவில், கச்சாய் ஆகிய கிராமங்களில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுப் பொருள்கள் கோயிலாமனைப் பகுதியிலுள்ள சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

அங்கு சேகரிக்கும் பொருள்கள் பிரதேச சபையால் தரம்பிரிக்கக்கப்படுகின்றது. தரம் பிரிக்கப்படும் பொருள்களில் பிளாஸ்ரிக் பொருள்கள் சாவகச்சேரி நகர சபையின் மீள் சுழற்சி நடவடிக்கையின் பொருட்டு பிரதேச சபையால் நகர சபையிடம் கையளிக்கப்பட்டு வருகிறது.
மிகுதிப் பொருள்களான ரயர்கள், பீங்கான் போத்தல்கள், எலக்ரோனிக் கழிவுப்பொருள்கள் என்பன சாவகச்சேரி பிரதேச சபையின் கோயிலாமனையிலுள்ள திண்மக்கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் இடத்தில் சேகரிக்கப்படுகின்றன.
இந்த சேகரிப்பு நிலையம் சுமார் இரு தொகுதிகளைக்கொண்ட கட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் கழிவுப்பொருள்கள் மழைநனையாதவாறு வைக்கப்பட்டிருந்தன.
இந்த கட்டடமே விஷமிகளால் தீவைத்து அழிக்கப்பட்டுள்ளது.
இதனால் பிரதேச சபைக்கு சுமார் இரண்டு இலட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை. ஆரம்பித்துள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-131)



நாவலர் வீதி நல்லூரில் அமைந்துள்ள ஈழத்து சீரடி சாயி பாபாவின் நூறாவது சமாதி ஆண்டு நிறைவு நிகழ்வை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. அதில் பங்கேற்றவர்களுக்கான சன்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (4)

## விபத்தில் இருவர் படுகாயம்

அச்சுவேலி,ஜன.11
அச்சுவேலி ஆவரங்கால் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.
கரவெட்டியை சேர்ந்த இராசேந்திரம் நதீபன் (வயது-32), நல்லதம்பி கார்த்திகேசு (வயது-70) ஆகியோரே படுகாயமடைந்தனர்.
இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றோடொன்று மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஒன்று திடீரென அச்சுவேலிக்குச் செல்வதற்கு திரும்பியபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியது என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
படுகாயமடைந்தவர்கள், அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-ரி2,11)

## கோவிலில் மயங்கிய பூசகர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜன. 11
பூசைக்காக கோவில் மண்டபத்தைக் கழுவிய பூசகர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியில் நேற்று இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ப.திருலோகநாதன் (வயது - 61) என்பவரே உயிரிழந்தார்.
நெஞ்சுவலி என்றுகூறியபடி மயங்கி வீழ்ந்துள்ளார். வாகனம் அங்கு வரவழைக்கப்பட்டு அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது அவர் அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டமை தெரியவந்தது. சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்ட்டது. (4-9)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.11
புலோலி மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் சதாவதானி அறநெறிப் பாடசாலையும் இணைந்து ஆண்டுதோறும் நடத்திவரும் திருவாசக முற்றோதல் இந்த வருடமும் நடைபெற்று வருகின்றது.
நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலயத்திலும், நாளைமறுதினம் சனிக்கிழமை பருத்தித்துறை ஆலடி விநாயகர் ஆலயத்திலும் நடைபெறுமென மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி தமிழரசி தங்கராஜா அறிவித்துள்ளார். (எ-173)

## பாடசாலை மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11
மகளிர் விவகார அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாடாசாலை மாணவர்களுக்கு மிதிவண்டிகள் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாம வலய கல்விப் பணிமனை வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.
மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனின் 2017ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் இருந்து வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 17 மாணவர்களுக்கே மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம், சென் ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சங்கானை சைவப் பிரகாச வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாணவிகள் உள்ளிட்ட 13 மாணவர்களுக்கு ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் ரூபா ஒதுக்கீட்டில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.
இதே போன்று மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு மாணவி உள்ளிட்ட நான்கு மாணவர்களுக்கு அறுபதாயிரம் ரூபா ஒதுக்கீட்டில் 4 மிதி வண்டிகள் வழங்கப்பட்டன.
தென்மராட்சி வலயக் கல்வி பணிமனை வளாகத்தில் வலயக் கல்வி பணிமனை அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கடந்த திங்கட்கிழமை மாணவர்களிடம் மிதிவண்டிகள் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-10)

# வலி.கிழக்கு பிரதேச சபையின் பண்பாட்டுப் பெருவிழா





யாழ்ப்பாணம், ஜன.11
வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவின் பண்பாட்டு பேரவையால் நடத்தப்பட்ட பண்பாட்டுப் பெருவிழா பிரிவின் பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் தலைமையில் ஆவரங்கால் ஆதவன் மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது. விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். விழாவில் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்ட கலைஞர்கள் குழுவையும், விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (எ-11)

## நாடாளுமன்றில்...

காக கூட்டு எதிர்க்கட்சி, மக்கள் விடு தலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் கோரிக்கைக்கு அமைவாக சிறப்பு நாடாளுமன்ற அமர்வு நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் ஆரம்பமானது.

### ரணிலின் அறிவிப்பு

சபாநயகர் கரு ஜயசூரிய, பிணை முறிகள் சம்பந்தமான அறிக்கையானது ஒரு வாரத்துக்குள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புக்களைச் செய்தார். அதன்பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கோப் குழு அறிக்கை தொடர்பில் தமது அரசு முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் தொடர்பான கூற்றை முன்வைப்பதற்கு முனைந்தார்.

அதையடுத்து ஆளும், எதிர்த் தரப்பினிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமரா திசாநயக்க, தினேஸ் குணவர்தன, எம்.ஏ.சுமந்திரன், பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்கள் அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு உடன் சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நிலையியல் கட்டளையின் பிரகாரம் தனக்கு சிறப்புக் கூற்றை முன்வைக்க முடியும் என்றும் சபாநாயகர் அதற்கான அனுமதியையும் உறுதிமொழியையும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக வழங்கியுள்ளது என்றும் அதன்போது குறிப்பிட்டார்.

### கூட்டு எதிர்க்கட்சியினர் போராட்டம்

அந்தச் சந்தர்ப்பத்தில் தமது ஆசனங்களிலிருந்து எழுந்த கூட்டு எதிர்க்கட்சியினர் மேசைகளிலிருந்த பதாகைகளை கையில் தாங்கியவாறு கோசங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். அந்தப் பதாகைகளில் 'ஐ.தே.கவினர் திருடர்கள், நடவடிக்கை எடுங்கள்' என்று வலியுறுத்தும் வாசகங்கள் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் காணப்பட்டன.

அதைப் பொருட்படுத்தாது ரணில் உரையைத் தொடர்ந்தார். கூட்டு எதிர்க்கட்சியினர் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து சபாமண்டபத்துக்குள் பிரவேசித்தனர். பலத்த கோசங்களையும் எழுப்பினர். செங்கோலை நோக்கிக் கூட்டு எதிர்கட்சியினர் நகர்ந்தபோது படைக்கல சேவிதர்கள் சபாபீடத்தினுள் நுழைந்தனர்.

### ரணிலுக்கு பாதுகாப்பு வலயம்

ஐ.தே.கவின் பின்வரிசை இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபாபீடத்துக்குள் நுழைந்தனர். ரணிலுக்கு முன்பாக பாதுகாப்பு வலயத்தை அமைத்தனர். அந்தச் சமயத்தில் திடீரென சபா மண்டபத்திற்குள் வந்த ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயரட்ன கூட்டு எதிர்க்கட்சியினரின் பதாகையொன்றைப் பறித்துக் கிழித்தார். ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஆரம்பித்தது.

### முதலாவது அடி

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்காருடன், கெஹலிய ரம்புக்வெல தள்ளுமுள்ளுபட்டார். கெஹலியவின் பின்னாலிருந்து வந்த காமினி லொக்குகே, திடீரென ஏதோ கூறியவாறு மரிக்காருக்கு கன்னத்தில் அறைந்தார். கதிகலங்கிய மரிக்கார் சில நிமிடங்களில் சுதாகரித்தவாறு காமினி லொக்குகேயை தாக்கச் சென்றார். ஐ.தே.கவின் நவவி, சமிந்த விஜேசிறி உள்ளிட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரைத் தடுத்து நிறுத்தினார்கள்.

### மகிந்த திருடன், ரணி திருடன்

திருடன் திருடன் மகிந்த திருடன் என்று ஆளும் தரப்பு உறுப்பினர்கள் கோசம் எழுப்ப, திருடன் திருடன் ரணில் திருடன் என்று கூட்டு எதிர்க்கட்சியினர் பதிலுக்குக் கோசமிட்டனர். ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கோசம் எழுப்பினர். யார் திருடன் என்று ரணில் கோசம் போட, மகிந்த திருடன் என்று ஐ.தே. கவினர் பக்கப் பாட்டுப் பாடினர்.

### மயங்கி விழுந்தார் எம்.பி

மோதலைத் தவிர்க்க களமிறங்கிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்தன திடீரென மயங்கி வீழ்ந்தார். அவரை தூக்கிச் சென்ற பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா ஆசனத்தில் அமர்த்தி குடிப்பதற்கு தண்ணீர் கொடுத்தார். பின்னர் அவரைத் தோளில் சுமந்தவாறு சில உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர்.

### ரணில் அவதானம்

நாடாளுமன்றம் களேபரமாகியபோதும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது சிறப்புக் கூற்றை தொடர்ச்சியாக வழங்கியவாறே இருந்தார். ரணிலின் உரை நிறைவுக்கு வரவும் சபையில் அமைதியைக் கொண்டுவர சபாநாயகரால் முடியாது போனது. சபை நடவடிக்கைகளை உடனடியாக 11.05 மணி வரை ஒத்திவைத்து கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்படுகின்றது என்று சபாநாயகர் அறிவித்தார்.

### மரிக்காரின் பதிலடி

சபாநாயகர் ஆசனத்திலிருந்து எழுந்தபோது அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்றார்கள். எதிரணியின் பின் வாசல் ஊடாக பிரவேசித்த மரிக்கார், மெதுவாக நடந்து வந்து சபாபீடத்தைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்த காமினி லொக்குகேவைத் தாக்கிவிட்டு வெளியே ஓடினார். மரிக்காரின் பதுங்கல் தாக்குதலை கண்ட கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொதித்துக்கொண்டு ஆளும் தரப்பு உறுப்பினர்களை நோக்கி ஒன்று திரண்டனர் சிலர் மரிக்காரை துரத்திக்கொண்டு சபையை விட்டுச் சென்றனர்.

### கூட்டமைப்பு பாதுகாப்பு

ஒரு பக்கத்தில் ஆளும் தரப்பு பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும், மறுபக்கத்தில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சூழ்ந்து கொண்டு கோசம் எழுப்பி போராட்டம் நடந்த போது முன்வரிசையிலிருந்து சென்று மூன்றாவது வரிசையில் அமர்ந்திருந்த இரா.சம்பந்தன் மற்றும் மாவை.சோ.சேனாதிராசா ஆகியோரும் ஏனைய உறுப்பினர்களும் பாதுகாப்பாக வெளியேறிச் சென்றனர்.

### உக்கிரமடைந்த தாக்குதல்

பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டு எதிர்க்கட்சியினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்களின் மேசைகளில் இருந்த ஆவணங்களை எடுத்து ஆளும் தரப்பினரை நோக்கி எறிய ஆரம்பித்தனர்.

எதிர்த்தரப்பின் முதலாவது நிரலுக்கும் இரண்டாவது நிரலுக்கும் இடையில் நின்றுகொண்டிருந்த ஆளும் தரப்பு உறுப்பினர்கள் மீது கூட்டு எதிர்க்கட்சியினர் கடுமையாகத் தாக்கினர். அவர்களுக்கு நிகராக ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதில் தாக்குதல் நடத்தினர். நளின் பண்டார, ஹெக்டர் அப்புகாமி உள்ளிட்டவர்களும் களத்தில் குதித்தனர்.

### பிரசன்னவின் தாக்குதல்

பின்வரிசை உறுப்பினர்கள் நின்றிருந்த பகுதிக்குள் மெதுவாக வந்த பிரசன்ன ரணதுங்க, சமிந்த விஜேசிறியை இலக்கு வைத்து தாக்கிவிட்டு விரைவாக சபையிலிருந்து வெளியேறிச் சென்று மற்றொரு வாசல் ஊடாக மீண்டும் சபைக்குள் பிரவேசித்து நின்றார். அநுருத்த இந்திக்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அவர் மோதலில் ஈடுபட்டார். இந்த மோதல்களுக்கு நடுவில் நாடாளுமன்ற உறுப்பினர் ரோகிணி சிக்கிக்கொண்டார். ஹிருணிகா பிரேமசந்திர, துசித்தா விஜேமான்ன ஆகியோருடன் ஜோன்சன் பெர்னான்டோ ஆகியோர் ரோகிணியை மீட்டு அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்றினார்கள்.

### கிழிந்தது மேலாடை

தேசிய உடையில் வந்திருந்த பிரசன்ன ரணவீர ஆளும் தரப்பு உறுப்பினர்களுடன் கடுமையான மோதல்களில் ஈடுபட்டார். அதன் போது அவருடைய மேலாடை கிழிந்தது. அவரை ஏனைய உறுப்பினர்கள் மீட்டெடுத்தார்கள்.

### ஆளும் தரப்பும் முயற்சி

ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் சிலர் ஐ.தே.கவின் பின்வரிசை உறுப்பினர்களை தடுத்து நிறுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முனைந்தார்கள். நிலமை சுமுகமான போதும் ஆங்காங்கே உறுப்பினர்கள் கூட்டம் கூட்டமாக கூடி நின்றார்கள். மோதல்கள் நிறைவடைந்த பின்னர் எதிர்க்கட்சியினர் அமர்ந்திருந்த பகுதி குப்பை மேடாக காணப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆவணங்கள் எவையும் மேசைகளில் இருக்கவில்லை. கடதாசிகள் கிழித்தெறியப்பட்டுக் காணப்பட்டன.

### ஒதுங்கியிருந்த சு.க

இந்த அமர்வுக்கு சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களின் வருகை மிகக்குறைவாக இருந்தமை ஒருபுறமிருக்க வந்திருந்த ஒருசில உறுப்பினர்களில் எவரும் மோதல்களை தடுப்பதற்கு முயற்சிக்கவில்லை. நிலைமைகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தபின்னர் சமிந்த விஜேசிறி உள்ளிட்ட சில உறுப்பினர்கள் காலணியின்றி சபைக்குள் நடமாடினர். பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மூத்த உறுப்பினர்கள் இந்த மோதல் நிலமைகளை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். (ற-5)

## சட்டவாட்சியை...

மன்றத்துக்குப் பதில் கூற வேண்டும். இது தொடர்பாக துரித விசாரணை நடத்தி குற்றவாளிகளை நாம் தண்டிப்போம்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தனது உரையை இடையில் நிறுத்திவிட்டு யார் திருடன்? யார் திருடன்? என்றும் அவர் கோசம் எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான சிறப்பு அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

பிணைமுறி தொடர்பான வாதப் பிரதிவாதம் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்டது. அதை ஆராய சட்டத்தரணி காமினி பிட்டிபன தலைமையில் குழுவொன்றை நியமித்தேன். அவர்களின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைத்து விவாதம் நடத்தினோம். மேலதிக விசாரணைக்காக கோப் குழுவுக்கு வழங்கினோம். கோப்குழு தனது விரிவான விசாரணையை ஆரம்பித்து அறிக்கையை 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. விவாதமும் நடத்தப்பட்டது. கோப் குழுவின் அறிக்கையையும் அதனுடன் இணைந்த கணக்காய்வாளர் நாயகத்தின் சிறப்பு அறிக்கையையும் நான் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அனுப்பினேன்.

### விசாரணை தொடர்கிறது

பிணைமுறி கொடுக்கல் வாங்கலில் மோசடி நடந்துள்ளதா? அர்ஜுன் மகேந்திரன் பொறுப்பு கூற வேண்டுமா? அப்படியாயின் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா? என்று கடிதம் மூலம் சட்டமா அதிபரிடம் கோரினேன். சட்ட மா அதிபர் கோரும் அனைத்து ஆவணங்களை வழங்க வேண்டும் என்று நாடாளுமன்றச் செயலருக்கு அறிவித்தேன். சட்ட மா அதிபர் திணைக்களத்தால் சட்டத்தரணிகள் குழுவொன்று அமைக்கப்பட்டு தற்போதும் விசாரணைகள் நடக்கின்றன.

ஊழியர் சேமலாப நிதியத்திலும் மோசடி நடைபெற்றுள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் அப்போது கோரியதன் அடிப்படையில் சட்டமா அதிபரின் யோசனையைப் பெற்று விசாரணைகளை ஆரம்பிக்கலாம் என்று மத்திய வங்கி ஆளுநருக்கு உத்தரவிட்டேன். இது தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு அதன் அறிக்கை 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் கணக்காய்வாளர் நாயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### உதவி கோரல்

மத்திய வங்கியில் இழப்பீடு ஏற்பட்டுள்ளதா என்பதனை ஆராய்ந்து பார்க்குமாறு உலக வங்கியிடமும் பன்னாட்டு நாணய நிதியத்திடமும் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தேன். பிணைமுறி வழங்கலின் போது காணப்படும் சந்தை நிலவரத்தின் பிரகாரமே இலாபம் மற்றும் நட்டத்தை தீர்மானிக்க முடியும் என்றும் பிணைமுறி இழப்பை நிர்ணயிப்பதற்கான பன்னாட்டுச் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறை தம்மிடம் கிடையாது என்று மேற்குறித்த இரு நிறுவனங்களும் கூறின.

### கட்டுப்பாடு

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி நிதி சபையால் பெர்பச்சுவல் நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பாடு விதித்ததுடன் அந்த நிறுவனத்துக்கான நிதிப் பயன்பாட்டுக்கும் தடை விதிக்கப்பட்டது. அந்த நிறுவனத்தின் அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் தடை செய்தோம். அந்த நிறுவனத்தின் கணக்கில் உள்ள 12 பில்லியன் ரூபா மத்திய வங்கியின் சேமிப்பில் உள்ளது. ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் பிணைமுறி மோசடியால் 11 பில்லியன் இழப்பீடு அடைந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் இது தொடர்பாக தனது காரணங்களையும் ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் ஆற்றுப்படுத்தி வழக்குத் தாக்கல் செய்தால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்கு அந்தப் பணத்தை எமக்கு மீளபெற்றுக்கொள்ள முடியும்.

### வெற்றி

இலங்கை வரலாற்றில் பெரியளவிலான மோசடிகள் தொடர்பான விசாரணைகள் பக்கச்சார்பின்றியும் துரிதமாகவும் முன்னெடுக்கப்பட்டமை இதுவே முதற்தடவையாகும். இது நல்லாட்சி அரசின் பெரிய வெற்றியாகும். கடந்த காலங்களில் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் நாடாளுமன்றத்துக்கு வெளியிடப்படவில்லை. இதனை நாம் மாற்றியமைத்தோம்.

2008ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரைக்குமான பிணைமுறி வழங்கலின் மோசடிகள் குறித்தும் விசாரிக்குமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. அந்தக் காலப்பகுதியில் நடந்த மோசடிகளை துரித கதியில் விசாரணை செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை விடுத்துள்ளேன். இதன் ஊடாக துரித விசாரணைகள் நடத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குவோம்.

### வதந்தி

தற்போது பிணைமுறி மோசடி தொடர்பான வாதம் அரசியலாக மாற்றப்பட்டு வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. அதை நம்பிக்கை கொள்ளாமல் உண்மையை கண்டறிவோம். புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த நானும் அரச தலைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். இது கட்சி வாதம் புரிவோரால் புரிந்துகொள்ள முடியாத செயற்பாடாகும். தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. அதனை நாம் திருத்திக்கொள்ள வேண்டும். முன்னைய ஆட்சி காலத்தின் மோசடிகள் மூடி மறைத்து சட்டவாட்சியை குழிதோண்டி புதைப்பதற்கு நாம் தயாராக இல்லை. கடன் சுமையும் நீதி நிலைநாட்டப்படாத ஊழல் மோசடிமிக்க நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். தற்போது அந்தப் பாதையை நாம் மாற்றி. புதிய பாதைக்கு நாட்டை கொண்டு வந்துள்ளோம். நீதியான சமூகத்தை உருவாக்க நாம் பாடுபடுவோம் என்றார். (ற-5,61)

## ஆணைக்குழு...

பெரிய ஊழல் மோசடி தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் 34 அறிக்கையின் பிரதிகள் எம்மிடம் கிடையாது. அந்த அறிக்கை ஆணைக்குழுவுடன் பேசி பெற்றுத் தரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப் படாமையால் ஏற்பட்ட குழப்பத்தின் பின்னர், அரச தலைவரின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அனுப்பிய கடிதத்தை சபையில் வாசிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச தலைவரின் செயலர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், பிணைமுறி மோசடி தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பெரிய ஊழல் மோசடி தொடர்பான அறிக்கை ஆகியவற்றை நாடாளுமன்றத்துக்குப் பெற்றுத் தர வேண்டும் என்று சபாநாயகர் வாய்மூலமாகவும் கடிதம் மூலமாகவும் கோரியுள்ளார்.

பிணைமுறி தொடர்பான அறிக்கை மற்றும் பெரிய ஊழல் மோசடி தொடர்பான அறிக்கை ஆகியன தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து சட்டமா அதிபரிடம் அரச தலைவரின் செயலர் என்ற வகையில் கோரியிருந்தேன். அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்ட அதிகாரிகள் அல்லது நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறும் இது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கடிதம் மூலம் சட்டமா அதிபர் எனக்கு அறிவித்திருந்தார். சட்ட மா அதிபரின் கோரிக்கையின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திஜித் குமாரசுவாமிக்கும் லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவுக்கும் இரண்டு அறிக்கைகளையும் அனுப்பியுள்ளேன். அரச தலைவரின் ஆலோசனைக்கு அமைவாகவே நடவடிக்கையை நான் முன்னெடுத்தேன். எதிர்வரும் 17 ஆம் திகதி பிணைமுறி தொடர்பான ஆணைக்குழு அறிக்கையின் பிரதிகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன். பெரிய ஊழல் மோசடி தொடர்பான 34 அறிக்கைகளின் பிரதிகள் என்னிடம் கிடையாது. அந்தப் பிரதிகளை பெற்றுத்தர வேண்டும் என்று தொடர்புடைய ஆணைக்குழுவிடம் கோருகின்றேன் என்று அரச தலைவரின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்- என்றார். (ற-5)

# 6 ஆண்டுகள் மைத்திரியின் பதவிக் காலம்

## இது ராஜிதவின் கணிப்பு



கொழும்பு, ஜன. 11

அரச தலைவர் மைத்திரிபாலவின் பதவி ஆறு ஆண்டுகளுக்குரியது என்று நம்புகின்றோம். அடுத்த அரச தலைவரின் பதவிக் காலமே 5 ஆண்டுகளுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரச தலைவர் தேர்தலின் பின்னர் 19ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டு அதன் மூலமாக அரச தலைவரின் ஆட்சிக்காலம் ஐந்து ஆண்டுகளாக மட்டுப்படுத்தபட்டுள்ளது. 2020ஆம் ஆண்( அரச தலைவர் தேர்தல நடத்துவது குறித்து ஆராயப்பட்ட நிலையில் சில நிபுணர்கள் அதனை மறுத்துள்ளனர். அரச தலைவர் தேர்தல் 2021 ஆம் ஆண்டே நடத்தப்பட முடியும் என்று அரச தலைவருக்குத் தெரிவித்துள்ளனர். இது குறித்து அரச தலைவர் உயர் நீதிமன்றத்திடம் வினவியுள்ளார். இன்னும் நீதிமன்றம் தீர்மானம் தெரிவிக்கவில்லை.

எனினும் நீதிமன்ற தீர்மானமும் நாம் கூறுவதைப் போலவே அமையும் என்று நம்புகின்றோம். எவ்வாறு இருப்பினும் பொதுத் தேர்தல் 2020ஆம் ஆண்டும் அரச தலைவர் தேர்தல் 2021 ஆம் ஆண்டு தான் நடத்தப்பட வேண்டும். சட்டம் எப்போதும் முன்னோக்கியே பயணிக்கும் இப்போது செயற்படுத்த முடியாது - என்றார்.

'அரச தலைவர் தனது பதவிக் காலத்தை அடுத்த தடவைக்கும் நீடிக்கும் நோக்கத்தில் இதனைச் செய்கின்றாரா?' என்று கேள்வி எழுப்பப்பட்டதற்கு, அவ்வாறு அவர் தனது அடுத்த ஆட்சிக் காலத்தை நீடிப்பார் என்றால் இந்தளவு தூரம் சட்டத்தின் நுணுக்கங்களை ஆராய வேண்டிய அவசியம் இல்லை. அவர் தனது பதவிக் காலம் முடியும் வரையில் அமைதியாக இருந்து மீண்டும் போட்டியிட முடியுமே. அவர் அவ்வாறான நோக்கத்தில் இல்லை என்பதே இதன் அர்த்தம் என்று நாம் நம்புகின்றோம் - என்றார். (5.31)

## காணி மோசடி

# கிழக்கு முன்னாள் முதலமைச்சரிடம் விசாரணை நடத்த நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஜன. 11

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குச் சொந்தமான காணியை மோசடி செய்து உடைமையாக்கிய குற்றச்சாட்டுத் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டிடம் விசாரணை மேற்கொள்ளுமாறு கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கோட்டை நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருக்கு எதிராக கொழும்பு மோசடிப் தடுப்புப் பிரிவு தாக்கல் செய்திருந்த வழக்கு நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இதன்போது, முன்னாள் முதலமைச்சரின் முகவரியை கண்டுபிடிக்க முடியாதிருப்பதாகவும் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் கொழும்பு மோசடிப் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நீதிவானுக்கு தெரிவித்தனர். முதலாம் சந்தேக நபர் அறியப்படாத ஒரு நபரல்ல என்று தெரிவித்த நீதிவான் தராதரம் பார்க்காது யுனிட்டி பில்டர்ஸ் நிறுவனத்தோடு தொடர்புபட்ட அவரது சகல விடயங்களையும் உள்ளடக்கியதாக வாக்கு மூலத்தைப் பதிவு செய்து உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு கடும் தொனியில் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

வழக்கின் முறைப்பாட்டாளர் தரப்பில் நீதிமன்றில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், முஸ்லிம் காங்கிரஸுக்குச் சொந்தமான காணியை மோசடியான முறையில் அபகரித்தமை மட்டுமல்லாமல், அரசுக்குச் செலுத்த வேண்டிய முத்திரை வரியையும் செலுத்தாமல் மோசடி செய்திருப்பதால் தண்டனைச் சட்டக்கோவையில் 406 ஆவது உறுப்புரைக்கமைய 2 ஆண்டுகால சிறைத் தண்டனை வழங்கப்படக் கூடிய குற்றத்தை சந்தேகநபர் மேற்கொண்டுள்ளதால் அவரை கைது செய்ய உத்தர விட வேண்டும் என்று நீதிவானிடம் கோரிக்கை விடுத்தார்.

கார்சன் கம்பர்பர்ச் நிறுவனம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே மேற்படி காணியை விற்றதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கும் நிலையில் முதலாம் சந்தேக நபரான நஸீர் அஹமட்டை கைது செய்ய போதுமான சாட்சியங்களும் நியாயமான காரணங்களும் இருப்பதாக சுட்டிக் காட்டினார்.

முதலாம் சந்தேக நபரை கைது செய்ய உத்தரவிடுவதற்கு முன் முதலாம் சந்தேக நபரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட நீதிவான் லங்கா ஜயரத்ன அதன் பின் சகல சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களை ஆராய்ந்த பின்பே அவ்வாறான உத்தரவொன்றைப் பிறப்பிக்க முடியும் என்று சுட்டிக்காட்டியதோடு நவம்பர் 8ஆம் திகதி நடந்த வழக்கு விசாரணையிலிருந்து நேற்று வரை நஸீர் அஹமட்டிடம் இருந்து வாக்குமூலம் பெறப்படாமை குறித்து பொலிஸாரை எச்சரித்தார். (5.71)

# ரணிலுக்கு எதிரான பிரேரணை தயார்

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்றுக் கையெழுத்திட்டுள்ளனர். நாடாளுமன்றக் குழு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் கூடிய சந்தர்ப்பத்திலேயே அந்தப் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தலைமை அமைச்சர் ரணில் தொடர்புபட்டுள்ளதாகக் குறிப்பிட்டு அதனை அடிப்படையாக் கொண்டே நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று அதில் கையொப்பமிட்ட போதிலும் ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் எதிர்வரும் சில தினங்களில் கைச்சாத்திடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தலைமை அமைச்சர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் உறுப்பினர்கள் சிலர் இன்று (நேற்று) கையொப்பமிட்ட போதிலும் அது சமர்ப்பிக்கப்படவில்லை. ஏனைய உறுப்பினர்களும் ஒப்பமிட்ட பின்னர் விரைவில் அதனை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள முடியும். இந்த உறுப்பினர்கள் ஊழல் மோசடிகளுக்கு எதிரானவர்கள் என்று தற்போது குறிப்பிட்டு வருகின்றனர். அதன் உண்மைத் தன்மையை தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அறிந்து கொள்ள முடியும் - என்றார். (5,31)

## தொடர்ச்சிகள்...

### உண்மையான...

அநுராதபுரம் சல்காது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டை நேசிக்கும் ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய அரசியல் பயணத்தில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெற்றியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மக்கள் பிரதிநிதிகளுடன் அடியெடுத்து வைப்போம்.

அரசியலுக்குப் பிரவேசித்த பின்னர் பணம் சம்பாதித்து தமது பைகளை நிரப்பிக்கொண்டு மக்களின் மனச்சாட்சியை எட்டி உதைத்து செல்வந்தர் ஆகுவதற்கு எதிர்வரும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் எந்தவொரு பிரதிநிதிக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின் அப்போதைய அரசு தோல்வியடைவதற்கு ஏதுவான பல காரணங்கள் காணப்பட்டன. உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் மேற்கொண்ட ஊழல் மோசடி மற்றும் முறையற்ற செயற்பாடுகளே அதற்கு முக்கிய காரணம். பிரதேச சபைகளுக்கும், மாகாண சபைகளுக்கும், நாடாளுமன்றத்துக்கும், தலைமை அமைச்சர் பதவிக்கும், அரச தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டும் எந்தவொரு நபருக்கும் மக்களின் பணத்தை கையாடல் செய்வதற்கு உரிமையில்லை.

இராணுவத்தினர் பழிவாங்கப்படுகின்றனர் என்று இன்று அரசின் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் உண்மையான பழிவாங்கல்கள் இடம்பெற்றமை, கடந்த காலத்தில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா சிறை பிடிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலாகும். பன்னாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து இராணுவத்தினர், கடற்படை மற்றும் வான் படையினரை பாதுகாத்து அவர்களது மதிப்பையும் அபிமானத்தையும் பேணுவதற்காக கடமையை தற்போதைய அரசே நிறைவேற்றி வருகின்றதென்பதை நாட்டு மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள் - என்றார். (ற-5.31)

### ரிட் மனு...

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் அனைத்தையும் எதிர்வரும் 15ஆம் திகதியன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

சிறிலங்கா பொது மக்கள் முன்னணியால் மஹரகம நகர சபைக்குப் போட்டியிடுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை, கோரப்பட்டிருந்தமையை விடக் குறைவாக இருந்தமையால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அதைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு, நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்த அரச தலைவர் சட்டத்தரணி மனோகர டி சில்வா தாம் இன்னும் தயாராகவில்லை என்றும், தமக்கு அவகாசம் வழங்க வேண்டும் என்று கோரியதையடுத்து மனு நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் எல்.டி.பி.தெஹிதெனிய, நீதியரசர் சிரான் குணரத்ன ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த விடயம் தொடர்பில் சில ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் அவை அனைத்தும் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமையன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நீதியரசர்கள் குழாம் அறிவித்தது. (ற-5)

### தமிழ்த்தேசிய...

றனர். இது தமது கட்சியின் பெயரை ஒத்ததாக உள்ளது. தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதை ஆராய்ந்த தேர்தல்கள் ஆணைக் குழு, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதித்துள்ளது.

தேர்தல் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய முத்திரையைப் பயன்படுத்தி தேர்தல் பரப்புரை மேற்கொள்வதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழு தடை விதித்துள்ளது. (ற-5)

### மதுபானம்...

யங்களிலும் மதுபானம் கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் அந்த இடங்களில் சேவை செய்யவும் பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தன. நிதியமைச்சின் புதிய அரசிதழ் நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து அந்தத் தடை நீக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5.71)

### தேர்தல்...

என்ற இலக்கத்துக்கும் அறிவிக்க முடியும் என்று அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ற-4)



## ஜப்பானியரின் அவா ஒடாரி நடனம் பி.எம்.ஐ.சி.எச்சில்

கொழும்பு, ஜன. 11

இலங்கை சுதந்திரம் அடைந்த 70வது ஆண்டு பூர்த்தியைச் சிறப்பிக்கும் வகையில் இலங்கை மற்றும் ஜப்பான் எதிர்காலத்திற்கான புறப்பாடு என்ற தொனிப்பொருளில் ஜப்பானியர்களின் பாரம்பரிய நடன நிகழ்ச்சியான 'அவா ஒடாரி' கொழும்பு பண்டார நாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஜப்பானின் டொகுசிமா பிராந்தியத்தில் தோற்றம்பெற்ற அவா ஒடாரி நடனம் ஜப்பானின் பிரசித்தி பெற்ற விழாக்கால நடனமாகத் திகழ்கின்றது.

இந்த நிகழ்வு ஜப்பானின் கொன்கான்ஜி மன்றத்தாலும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகத்தினாலும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜப்பானிய பாரம்பரிய கலை கலாசாரத்தை நேசிக்கும் சுமார் 400 க்கு மேற்பட்ட பார்வையாளர்கள் அரங்கில் கூடி நிகழ்ச்சியைக் கண்டு ரசித்தனர். (5)

## தாக்குதல் நடத்தியதாலேயே பதில் தாக்குதல் நடத்தினோம்

### ஐ.தே.க. பின்வரிசை எம்.பி. விளக்கம்

*கொழும்பு, ஜன. 11*

*நாடாளுமன்றம் சண்டைபிடிக்கும் இடமில்லை என்பது எமக்குத் தெரியும். எம்மீது தாக்குதல் நடத்தியமையாலேயே பதிலுக்குத் தாக்குதல் நடத்தவேண்டிய நிலமை ஏற்பட்டது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்தார்.*

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிணைமுறி விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை குற்றவாளியாக்குவதற்கு சதித்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. நாடாளுமன்றத்தில் குழப்பம் ஏற்படுத்தப்பட்டதும் அதற்காகவே. நாடாளுமன்றம் சண்டையிட்டுக் கொள்வதற்கான இடமல்ல. எம்மீது தாக்குதல் நடத்தியதால் திருப்பித் தாக்கவேண்டி ஏற்பட்டது. பதில் தாக்குதல் நடத்துவதைவிட எமது பாதுகாப்புத் தொடர்பிலேயே நாம் கூடுதல் அக்கறை காண்பித்தோம் - என்றார்.

மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான மரிக்கார் தெரிவித்ததாவது, பிணைமுறி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஒரு வார காலம் அனுமதி கோரப்பட்டது. கூட்டு எதிர்கட்சியினர் நாடாளுமன்ற செயற்பாடுகளைக் குழப்பியதால் நிலமை மோசமடைந்தது.

2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற பிணைமுறி விநியோகத்தில் பெரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் காலப் பகுதியில் ஏற்பட்ட இழப்புக்களுக்கு யார் பொறுப்புக்கூறுவது. ஊழல் மோசடிகளுக்கு நாம் எதிரானவர்கள். திறைசேரி முறி விநியோகம் குறித்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுவதைப் போன்று பெரிய மோசடிகள் தொடர்பான ஆணைக்குழுவின் 34 அறிக்கைகளும் பகிரங்கப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் யார் என்பது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் - என்றார். (5,61)

## வேட்பாளர்களுக்கான அறிவூட்டல் செயலமர்வு

### *கபேயின் ஏற்பாட்டில் நாளை*

யாழ்ப்பாணம், ஜன. 11

நாட்டில் முதன்முறையாக கலப்புத் தேர்தல் முறையில் தேர்தல் நடைபெறுவதாலும், உள்ளூராட்சி தேர்தல் வாக்கெடுப்புச் சட்டம், பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பாக அறிவூட்டுவதற்காகவும், கபே அமைப்பின் ஏற்பாட்டில் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

## மைத்திரியின் பாதுகாப்பு பிரதானி திடீர் இடமாற்றம்

கொழும்பு, ஜன. 11

அரச தலைவர் பாதுகாப்பு மற்றும் சிறப்பு பாதுகாப்பு விவகாரங்களுக்கு பொறுப்பாக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம். விக்ரமசிங்க உடன் நடைமுறைக்கு வரும் வகையில் அந்தப் பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மத்திய, ஊவா மாகாணங்களுக்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பூஜித் ஜயசுந்தர பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட முன்னர், பொலிஸின் மூத்த அதிகாரியாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்கவே விளங்கியதுடன், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் இருந்து அரச தலைவர் மற்றும் சிறப்பு பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் அவரே பொறுப்பாகச் செயற்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே நேற்று முதல் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் மத்திய, ஊவா மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (5,71)

## தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்களில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 11

உள்ளூராட்சி தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள மூத்த தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு நாளை வெள்ளிக் கிழமை நடத்தப்பட இருந்த பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமைக்கும், நாளை மறுதினம் சனிக் கிழமை நடத்தப்பட இருந்த பயிற்சி வகுப்புக்கள், எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட் கிழமைக்கும் மாற்றப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

## நாடாளுமன்றைக் கூட்ட சொன்னவர்கள் எங்கே?

### *சபை முதல்வர் கேள்வி*



கொழும்பு, ஜன. 11

மத்திய வங்கி மோசடி தொடர்பாக நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டி விவாதத்தை நடத்துமாறு கோரிய கட்சிகள் ஒன்றும் சபாபீடத்தில் இல்லை. இவர்கள் அரசை சிரமத்திற்கு உள்ளாக்கவே விவாதம் கோரினர். இவர்கள் எவரும் விவாதத்திற்குத் தயாராகி வரவில்லை.

பிணைமுறி மற்றும் பெரிய ஊழல் மோசடி தொடர்பான ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் முதலில் நாடாளுமன்றத்துக்கே அனுப்பியிருக்கப்பட வேண்டும். நாடாளுமன்றமே மீயுயர் மன்றமாகும். நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டாம் என்று கூற சட்ட மா அதிபருக்கு அதிகாரம் கிடையாது. சட்டமா அதிபரின் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு சபைமுதல்வரும் அமைச்சருமான லக் ஷ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திர கட்சியும், கூட்டு எதிர்க்கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியுமே மத்திய வங்கி பிணைமுறி தொடர்பாக விவாதத்தை நடத்துவதற்கு நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரினர். இவர்கள் எவருமே விவாதத்திற்கு தயாராகி வரவில்லை. அரசு கேட்ட உடனே விவாதத்தை பெற்றுதரும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஊடக அலங்கார காட்சிக்காகவே அவசரமாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு வாய்விட்டனர். ஆளும் கட்சி இந்த விவாதத்திற்கு முழுமையாக தயாராகி வந்தது. ஆனால் எதிர்க் கட்சியினர் விவாதத்தை நடத்தவிடாமல் செயற்பட்டனர் - என்றார். (5,31)

## மைத்திரியின் செயலகமா? பைத்தியக்கார்களின் கூடாரமா?

### *அநுரகுமார ஆவேச கேள்வி*

கொழும்பு, ஜன. 11

மகிந்த காலத்து ஊழல் மோசடி தொடர்பான விசாரணைக் குழுவால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்பிக்கப்பட்ட அறிக்கை தம்மிடம் இல்லை என்று அரச தலைவரின் செயலர் கூறியுள்ளார். அப்படியாயின் அது அரச தலைவர் செயலகம் கிடையாது. பைத்தியக்காரர்கள் இருக்கும் கூடாராமாகும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,



கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பிணைமுறி மற்றும் பெரிய ஊழல் மோசடி தொடர்பான இரு அறிக்கைகளையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்க வேண்டும். அதன்பின்னரே தலைமை அமைச்சருக்கு உரை நிகழ்த்த இடமளித்திருக்க வேண்டும். அறிக்கைகள் தொடர்பான விடயம் தீர்வின்றி இருக்கையில் சபாநாயகர் அதனை முடிக்காமல் இரண்டாவது நிகழ்ச்சி நிரலான தலைமை அமைச்சர் உரைக்கு சென்றமை பெரும் தவறாகும்.

அமர்வுக்கான அறிக்கைகள் இரண்டையும் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரிகளை அழைத்து விசாரித்து இருக்க வேண்டும். எனினும் தீர்க்க வேண்டிய பிரச்சினையை தட்டிக்கழித்து ரணிலின் உரைக்கு சென்றது பெரும் தவறாகும். இதன் ஊடாக சபை தவறாக வழி நடத்தப்பட்டுள்ளது.

எப்படியாவது பிணைமுறி தொடர்பான அறிக்கையை 17 ஆம் திகதி சமர்ப்பிப்பது போன்று முன்னைய ஆட்சியின் பெரிய ஊழல் மோசடி தொடர்பான அறிக்கையையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்-என்றார். (5,31)

## டெங்கு நுளம்பை ஒழிக்க பக்டீரியா

வொல்பச்சிலா எனும் பக்டீரியாவின் மூலம் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான வேலைத் திட்டத்தை ஆஸ்திரேலியா அரசின் நிதியுதவியில் கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களில் செயற்படுத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (5)

# மைத்திரிக்கு இன்னும் 696 நாள்களே மிச்சம்

### சட்டமா அதிபர் திணைக்களத்தை அதிரடி காட்டக் கோருகிறது 'கபே' அமைப்பு

*கொழும்பு, ஜன. 11*
*அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இன்னும் 696 நாள்கள் மாத்திரமே (11.1.2018 - 08.12.2019) அரச தலைவர் பதவியை வகிக்கமுடியும். அதன் பின்னர் கட்டாயம் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.*

தமது பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது என்று 14 நாட்களுக்குள் விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்றத்தை நாடியுள்ளார். அரச தலைவரின் இந்தக் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், இன்று முற்பகல் 11 மணிக்கு உயர்நீதிமன்றம் திறந்த வாதமொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்த விவாதத்தில் பங்கேற்று தமது அமைப்பு கருத்தை முன்வைக்கும் என்று கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

'2019ஆம் ஆண்டு டிசெம்பர் 8ஆம் திகதிவரையே அரச தலைவர் பதவியை மைத்திரிபால சிறிசேன வகிக்கமுடியும். அதுவே சட்டரீதியான தர்க்கமாக இருக்கின்றது. அதன்பின்னர் தேர்தலொன்றுக்கு அழைப்பு விடுக்கப்படவேண்டும். இது தொடர்பான எமது அமைப்பின் கருத்து நாளை (இன்று) வெளியிடப்படும். சுருக்கமாகச் சொல்லப்போனால் அரச தலைவரால் இன்னும் 696 நாட்கள் வரை (இன்றிலிருந்து 2019 டிசெம்பர் 8 வரை) பதவி வகிக்கமுடியும்.

பதவிக்காலம் குறித்து சிந்திக்காது, எஞ்சியுள்ள நாள்களிலாவது காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தைத் தன்வசப்படுத்தியாவது தீவிர செயற்பாட்டில் இறங்கவேண்டும், என்றும் அவர் கூறினார். (5)



## விடுதலைப் புலிகளின் வழியில் தென்னிலங்கை இளைஞர்கள்

கொழும்பு, ஜன. 11
தமிழீழ விடுதலைப் புலிகளின் தொழில்நுட்ப வழிமுறைகளை பயன்படுத்தி, தென்னிலங்கை இளைஞர்கள் சிலர் படகைத் தயாரித்துள்ளனர். முச்சக்கரவண்டியை பயன்படுத்தி கடலில் செல்லக் கூடியவாறான படகை இளைஞர்கள் சிலர் கண்டுபிடித்துள்ளனர். முச்சக்கர வண்டிக்கு சில இயந்திரங்களை பயன்படுத்தி அதில் வெற்றிகரமாக கடலில் பயணிப்பதற்கான முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களுக்குத் தேவையான இயந்திரங்களை, அங்குள்ள வளங்களை கொண்டு தயாரித்து வெற்றி கண்டிருந்தனர். இவ்வாறு தயாரிக்கப்பட்டவையில் கடற்கரும்புலிகளுக்கு தேவையான படகுகள் சிறப்பு வாய்ந்ததாகும். விடுதலைப் புலிகளின் தொழில்நுட்ப உத்திகள் பன்னாட்டுச் சமூகத்தை மிரளச் செய்திருந்தது. இந்த நிலையில் அதேபாணியில் தென்னிலங்கை இளைஞர்களும் கடலில் சவாரி செய்யும் முச்சக்கரவண்டி படகைத் தயாரித்துள்ளார்கள். (5)

## மைத்திரியின் திடீர்க் கோரிக்கை
# கொழும்பு அரசியலில் பரபரப்பு

### முடிவு இன்று தெரியும்



கொழும்பு, ஜன. 11
அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று கடந்த நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமையுடன் மூன்று ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது பதவிக் காலம் தொடர்பில் உயர் நீதிமன்றில் விளக்கத்தைக் கோரியுள்ளமை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரச தலைவரின் கோரிக்கைக்குப் பதிலளிப்பதற்காக உயர் நீதிமன்றில் இன்று காலை 11 மணிக்கு திறந்த விவாதம் நடைபெறவுள்ளது. இது பற்றி விவாதம் நடத்தி முடிவை அறிவிப்பதற்காக 5 நீதியரசர்களைக் கொண்ட அமர்வு அமைக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தாம் பதவியேற்ற 32(1) அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு அமைய, ஆறு ஆண்டுகள் அதாவது 2021ஆம் ஆண்டு வரை பதவியில் நீடிக்க முடியுமா அல்லது தற்போது நடைமுறையில் உள்ள 19ஆவது அரசமைப்புத் திருத்தத் துக்கு அமைய 2020ஆம் ஆண்டு வரை மாத்திரம் பதவியில் இருக்க முடியுமா என்று விளக்கமளிக்குமாறு உயர் நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

அரச தலைவர் மைத்திரியின் இந்தத் திடீர் கோரிக்கை கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரு தடவை மாத்திரமே அரச தலைவராகப் பதவி வகிப்பேன் என்று வாக்குறுதி வழங்கி அரச தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, திடீரென தனது பதவிக் காலம் எத்தனை ஆண்டுகள் என்று கேள்வி எழுப்பியமை கொழும்பு அரசியலில் பரபரப்பையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (5)

## புர்காவுக்குத் தடையில்லை

### தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 11
தேர்தலில் வாக்களிப்பதற்கு முழுமையாக முகத்தை மறைக்கும் புர்காவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை தேர்தல் திணைக்களம் நிராகரித்துள்ளது.


கோப்புப் படம்

வாக்களிப்பதற்கு முன்னதாக வாக்களிப்பு நிலைய பெண் அதிகாரிக்கு தனது அடையாளத்தை உறுதி செய்வதற்கு மாத்திரம் முகத்தை காண்பித்தால் போதும் என்று தேர்தல்கள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. வாக்களிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் தொடர்பில் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ள விடயங்களை சிலர் தவறாக பரப்புரை செய்கின்றனர்.

வாக்களிப்பதற்கு கருப்புக் கண்ணாடி அணிந்து வரவும் தலைக்கவசம் அணிந்துவரவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதனை மீறுவோர் வாக்களிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

வானூர்தி நிலையத்தில் அடையாளத்தை உறுதி செய்ய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளுக்கு முகத்தை காண்பிப்பது கட்டாயம். அதே போன்று அடையாள அட்டை பெறவும் முகத்தை காண்பிக்க வேண்டும். இதே போன்று தான் வாக்களிப்பின் போதும் புர்கா அணிந்துள்ள பெண்கள் முகத்தை காண்பிக்க வேண்டும். இந்த விதியை சிலர் இனவாத ரீதியில் சித்திரித்து தேர்தலில் புர்க்காவுக்கு தடை என்று காண்பிக்க முயல்வதாக தேர்தல்கள் திணைக்களம் குற்றம் சுமத்தியுள்ளது. (5)

## அட! அப்படியே சங்கதி!!

### பிரதித் தலைவருக்கு வெட்டு!

*ஐக்கிய தேசியக் கட்சியின் சிறப்பு மாநாடு அண்மையில் நடைபெற்றதல்லவா? அதில் கட்சிக்குள் வளர்ந்துவரும் பிரதித் தலைவர் ஒருவருக்கு உரிய இடம் கிடைக்கவில்லையாம். பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய ஒரு முக்கியஸ்தருக்கு அருகில் ஆசனம் போடப்பட்டமை, உரையாற்றும் ஒழுங்குகளில் மாற்றம் செய்து இறுதியாக உரையாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டமை போன்ற விடயங்களால் தாம் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மேற்படி பிரதித் தலைவர் தனக்கு நெருக்கமான நண்பர்களிடம் தெரிவித்துக் கவலைப்பட்டாராம்.*
*கட்சியின் மேலிடத்து உத்தரவின் பிரகாரமே இப்படி நடந்ததாகக் கேள்வி...*

# போர்க்குற்றங்கள் இராணுவ அதிகாரியிடம் பிரிட்டன் விசாரணையாம்

### சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, ஜன. 11
இராணுவ அதிகாரியிடம் போர்க்குற்றங்கள் தொடர்பாக பிரிட்டன் விசாரணை நடத்தியிருப்பதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொண்ட இராணுவ அதிகாரியிடமே, போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக கேள்விகள் எழுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. எப்போது இந்த விசாரணை நடத்தப்பட்டது, விசாரணைக்குள்ளாக்கப்பட்ட இராணுவ அதிகாரி யார் என்ற விவரங்கள் எதையும் சிங்கள ஊடகம் வெளியிடவில்லை.

புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கைக்கு அமையவே பிரிட்டன் இந்த விசாரணையை நடத்தியிருப்பதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (5)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 79 ஆம் ஆண்டு சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**தொடர்புகளுக்கு : 077 905 8615**

(CS 12810)(16,17)

## தவறிவிட்டது

கோப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் **சந்தனகுமார் சுலக்சன்** என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் வாகன காப்புறுதி என்பன தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு : 077 657 5907, 076 8712788**

(CS 12811,16)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

மயிலிட்டி தெற்கு வயாவிளானை பிறப்பிடமாகவும், அம்பாள் ளவு குமாரபுரம், பரந்தனை வசிப்பிடமாகவும், ஓமந்தை அரச ஊழியர் வீட்டு திட்டத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

### சின்னத்தம்பி ஆறுமுகம்

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கரைச்சி பிரதேச சபை – கிளிநொச்சி)



ஐயா நீங்கள் எமை விட்டு பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் இன் முகம் இன்னும் எம் மனதை விட்டு மறையவில்லை. ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகள் இருந்தாலும் வேர் போல் நின்று எம் குடும்பத்தை தாங்கினீர்கள். அந்த மரம் இப்போ அடியோடு சாய்ந்துவிட்டது. "ஐயா" எனும் அன்பொலி அமைதியாகி விட்டது. "பிள்ளை" என்னும் பொன் மொழி மாங்கி விட்டது. "சரணம் ஐயப்பா" எனும் கோசம் நிசப்தமாகி விட்டது. எமது குடும்ப ஒளிவிளக்கு அணைந்து விட்டது. நீங்கள் ஐயனிடம் கொண்ட அபார பக்தியால் அவர் உங்களை தன்னுடன் சேர்த்து கொண்டாரா. ஹரி ஹர சுதன் ஐயப்பன் திருவடி நிழலில் இருந்து உங்கள் ஆசி எமக்கு கிடைக்கவும், ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல சபரிமலை சாஸ்தா மகரத்தில் ஜோதியாய் அருள்புரிய வேண்டுகின்றோம்.

அன்னை மடியில் 16.07.1938

ஐயன் அடியில் 04.01.2016


திதி :- 11.01.2018

"சுவாமியே சரணம் ஐயப்பா"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

குடும்பத்தினர். (CS 12794)(12,17)

## வெளிநாட்டில் பட்டப்படிப்பு



China, Russia, Bangladesh, Malaysia, India, Malaysia, Canada, Australia

Medicine / Engineering / Business Management / Psychology & other Subjects

- Scholarships
- Loan Facilities
- Easy Payment Scheme
- Free Immigration Advice
- On-campus Accommodation

**புலமைப்பரிசில்**
10% முதல்
50% வரை

**நேர்முகத்தேர்வு** | **அனுமதியும் ஆலோசனையும் இலவசம்**

**ஜனவரி - 12**
வவுனியா - 7am to 10am / Sinhala Language Academy
யாழ்ப்பாணம் - 2pm to 5pm / Hotel Green Grass - Auditorium
No. 33, Asservatham Lane, Hospital Road, Jaffna

**ஜனவரி 17**
பண்டாரவளை - 2pm to 5pm / பரின்சிபியா

**ஜனவரி 15**
மட்டக்களப்பு
கல்முனை மஹா விஹாரை 2pm to 5pm

Hotline: 077 324 4209 / 077 552 7099

வெளிநாட்டில் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்புபவர்கள் அதைபற்றிய இலவச ஆலோசனைகளையும் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்துகொள்ள கலாநிதி. விஜிதா மல்லிகா சேனானாயக அவர்களை நேரில் சந்திக்க ஓர் அறிய சந்தர்ப்பம் அதற்கு உங்கள் பெயர், முகவரி, தொ.பே இல ஆகியவற்றை 0777 444 500 என்ற இலக்கத்திற்கு SMS செய்து நேரத்தை ஒதுக்கிக்கொள்ளவும்.

தொடர்புக்கு:- Hony. Prof. Vijitha Mallika Senanayake

**Institute of Vocational Studies (Pvt) Ltd.**

Head Office : No. 476, Dalugama, Kelaniya.
Tel: 0777 444 500 | 0112 910323 Fax: 0114 810829
E-mail: ivsltd@hotmail.com Web : www.ivsedu.net

## மரண அறிவித்தல்

### திருமதி விக்கினேஸ்வரி சுப்பிரமணியம்



தோற்றம் 18.03.1933 | மறைவு 09.01.2018

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மாருதோட்டம் தாவடி வடக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்கினேஸ்வரி சுப்பிரமணியம் 09.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சிவசுதனின்(சுவிஸ்) பாசமிகு தாயாரும் துளசியின் மாமியாரும் வானதி, இலக்கியன், கவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2018) வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(AJA 9056) (14,17) **தகவல்: குடும்பத்தினர்.**

## யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்குண்டு

**காணி அமைவிடம்**

**121 – 123, 1ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

**காணியின் அளவு : 30 பரப்பு**

**மேலதிக தொடர்புகளுக்கு : 077 7396 136**

(அனுமதி பெற்றுப் பார்வையிடலாம்)

(cs 31688)(17,8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தென்மராட்சி கல்வி வலய நாவற்குழி மகா வித்தியாலயத்தில் உடற்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்திபெற்று கடந்த 26.09.2017 தொடக்கம் வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்ற எமது சக ஆசிரியர்

### திரு. பொ.சகிலன்

அவர்களை தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்கள் சார்பில் வாழ்த்திநிற்கின்றோம். அத்துடன் இவருடன் இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தி பெற்று பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள உடற்கல்வி ஆசிரியர்களான

திரு.பா.வாசுதேவன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர் – கல்வி முகாமைத்துவம், கிளிநொச்சி வலயம்.
திரு.ப.பார்த்தீபன் – உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி), வலிகாமம் வலயம்
திரு.இ.இராஜசீலன் – உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி), வவுனியா தெற்கு வலயம்.
திரு.வே.சாரங்கன் – உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி), முல்லைத்தீவு வலயம்.
திரு.மு.காந்தச்செல்வன் – உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி), கிளிநொச்சி வலயம்.
திருமதி த.தர்சினி – உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி), துணுக்காய் வலயம்.

ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

**உடற்கல்வி ஆசிரியர்கள் - தென்மராட்சி வலயம்.**

## வேலைவாய்ப்பு – ட்ரேட் பினான்ஸ்

TFI நிறுவனத்துடன் இணைந்து நிதித்துறையின் முன்னேற்றப்பாதையில் நீங்களும் பயணியுங்கள்

முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant)
பெண் (யாழ்ப்பாணம்)
தங்கக்கடன் அடகு உத்தியோகத்தர் (Pawning Officer)
ஆண் / பெண் (யாழ்ப்பாணம்)
நிதி வசூலிப்பு உத்தியோகத்தர் (Recovery Officer)
ஆண் (லீசிங்) (வவுனியா மாவட்டம் யாழ்ப்பாணம்)
நிதி வசூலிப்பு தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

வருமானம் நிரந்தர வருமானம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்

**தகைமைகள் :**

கல்வித்தகைமைகள் : உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவை 3 பாடங்களில் சித்தி

- வயதெல்லை : 19 வயதிற்கு மேல்
- நிதி மதிப்பீடு தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்
- செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்

**விண்ணப்பதாரி**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, நிதி சம்பந்தமான பல்வேறுபட்ட செயற்பாடுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும். தேவையேற்படின் நீண்ட தூரங்களுக்கு பயணம் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நீங்கள் தகுதியுடையவராயின் உறவினர் அல்லாத இரண்டு நபர்களின் விவரங்களுடன் சுயவிவரக்கோவையை இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 தினங்களுக்குள் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மனிதவளப்பிரிவு
ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ஸ் பி.எல்.சி
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(cs 3480)(17,8)

## உடனடி வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கிவரும் பிரபல விற்பனை நிலையத்திற்கு ஆண் பணியாளர்கள் தேவை. (கிளிநொச்சியை வதிவிடமாக உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**கணக்காளர் (02) நபர்**
**காசாளர் (02) நபர்**
**களஞ்சிய காப்பாளர் (03) நபர்**

- கல்வித்தகைமை க.பொ.த (உ/த)/க.பொ.த(சா/த) எதுவாகிலும்
- கணினி அறிவு விரும்பத்தக்கது.
- மோட்டார் சைக்கிள் பாட்ஸ் அனுபவம் உள்ளவர்களுக்கு சிறப்புச் சலுகைகள்.

குறிப்பு: சம்பளம் தகைமைக்கு ஏற்ப வழங்கப்படும்.

**தொடர்பு :077 772 2305**

**முடிவுதிகதி .14/01/2018 (நிர்வாகி)**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

தேசிய ரீதியில்

# டெங்கு நோய்த் தாக்கத்தில் குடாநாட்டுக்கு 2ஆவது இடம்

## டெங்குவை விரட்ட மாற்றுவியூகம் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.11

இலங்கையில் டெங்குநோய் தாக்கத்தில் மாவட்ட ரீதியில் இரண்டாவது இடத்தை யாழ்ப்பாணம் பிடித்துள்ளது. வடக்கு மாகாணத்தில் முதல் நிலையில் உள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் இந்த நிலை அனைவரிடத்திலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. கட்டுப்பாட்டு வாரம், டெங்கு ஒழிப்புச் செயல்திட்டம் என்று பல நடவடிக்கைகள் எடுக்கும் சுகாதர அதிகாரிகள் மாற்று வியூகங்களை அமைத்து டெங்கு நுளம்பை மாநாட்டில் இருந்து விரட்ட வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டனர்.

சுகாதார அமைச்சின் தோற்று நோய் விஞ்ஞானப் பகுதியினரால் டெங்கு நோய்த் தொற்று தொடர்பான புள்ளிவிவரங்கள் வாராந்தம் வெளியிடப்படுகின்றன. அந்தப்புள்ளிவிவரங்களின்படி நடப்பாண்டில் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இலங்கை முழுவதும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களுடைய புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டள்ளன. அந்த விவரங்களின்படி டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் அதிகமுள்ள இரண்டாவது மாவட்டமாக யாழ்ப்பாணம் இனம் காணப்பட்டுள்ளது. முதலாவது மாவட்டமாக கொழும்பு உள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் முழுதும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 625 பேரே டெங்கு நோய்க்கு இலக்ககாகியிருந்தனர். நடப்பாண்டில் முதல் வாரத்திலேயே 113பேர் யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர். யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகள், சாவகச்சேரி, சங்கானை, போன்ற பகுதிகளில் அதிகமானவர்கள் டெங்குவுக்கு இலக்காகியுள்ளனர். வடக்கு மாகணத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள மாவட்டங்களில் மொத்தமாகவே 17 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். அவற்றுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்தின் டெங்கு நோய்ப் பரவல் பல மடங்கு அதிகரித்ததாகவே காணப்படுகிறது. கிளிநொச்சியில் 9 பேரும், முல்லைத்தீவில் 4 பேரும், வவுனியாவில் 4 பேரும் டெங்குவுக்கு இலக்காகியுள்ளனர்.

மன்னாரில் எவரும் பாதிக்கப்படவில்லை என்று அந்தப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாடும் கொழும்பு போன்ற ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுவிடக் கூடாது என்று இங்குள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் செயற்படும் போதும், டெங்கு நோய் குறைந்ததாக இல்லை. சனத்தொகைப் பரம்பல் அதிகரித்துக் காணப்படுவது காரணம் என்று கூறப்படுகின்றது.

(எ-21)

## மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பிக்கப்படவுள்ளது

### வடமாகாண தொழில்துறை அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.11

வடக்கு மாகாணத்தில், மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்கப்படவுள்ளது என மாகாண தொழில் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்தில் தொழில்துறையினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கான நியதிச்சட்டம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாகாணத்தில் தொழில் துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் பலருக்கு வாழ்வாதாரத்துக்கான தொழில் வாய்ப்புக்கள் குறிப்பாக சுய தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும். அனுபவமும்தேர்ச்சியும் உள்ளவர்கள் இங்கே உள்ளார்கள். ஆனால் அவர்களுக்கான உந்து சக்தியை வழங்குவதற்கு நிர்வாக கட்டமைப்பு கொண்ட சபை இல்லை. இதனால் தொழித்துறை வளர்ச்சி வெற்றிகரமாக இல்லை.

2018ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் தொழில்துறையை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடுகள் அதிகளவில் உள்ளன. ஏனைய மாகாணங்களில் இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு கைத் தொழில் அதிகார சபைகள் உள்ளன. ஆகவே தொழில் தேடுவோர், முனைவோர் ஆகியவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு ஏனைய மாகாணங்களில் உள்ளதைப்போன்று வடக்கிலும் இந்த சபையை ஆரம்பிப்பது அவசியம். இதன் மூலம் நிலைபேறான தொழில்துறை அபிவிருத்தி அடையும் என்று துறை சார்ந்த நிபுணர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதற்கிணங்க 20 உத்தியோகத்தர்களை கொண்ட மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்கப்படவுள்ளது. நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டதும் மாகாண சபையில் அனுமதிக்காக சமர்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## சமூக சேவைகள் திணைக்களத்துக்கான நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது

வடக்கு மாகாணத்தில் சமூகசேவைகள்திணைக்களத்தின் சேவைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு அதன் அதிகாரங்களை பலப்படுத்தும் நோக்கில் நியதிச் சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என மாகாணத் துறைசார்ந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

சமூகசேவைகள், தொழில் துறை, கூட்டுறவு ஆகிய திணைக்களங்கள் மகளிர் விவகார அமைச்சின் கீழ் செயற்படுகின்றன. இவற்றில் சில திணைக்களங்கள் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக சேவைகளை ஆற்றி வருகின்றன. இதனால்மாகாண அமைச்சின் கீழே உள்ள சமூகசேவைகள்திணைக்களத்தின் அதிகாரங்கள் சற்றுக் குறைவாகவே காணப்படுகின்றன. இந்தச் சேவைகளை அரச சார்பற்ற பல்வேறு அமைப்புக்கள், நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன. இவை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் கீழ் செயற்படுகின்றன. இவற்றின் சேவைகளை ஒன்றிணைத்து குறித்த அமைச்சு சேவை மேற்கொள்ளுமாயின் மக்களுக்கு சேவைகள் சிறப்பாக சென்றடையும்.

நியதிச்சட்டத்தின் மூலமே இவற்றினை ஒன்றிணைக்க முடியும். ஆகவே இதற்கான நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் அது சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)



## நாணயத் தாள்களால் ஐயப்பனுக்கு அலங்காரம்

யாழ்ப்பாணம்.ஜன.11

யாழ்ப்பாணத்தில் உள்ள இடம் ஒன்றில் ஐயப்பன் சாமிக்கு இலங்கை நாணயத் தாள்களைப் பயன்படுத்தி அலங்காரம் செய்து வழிபாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அது பற்றிய புகைப்படங்கள் முகப்புத்தங்களில் நேற்றுமுன்தினம் தொடக்கம் தரவேற்றப்பட்டு வருகின்றது. நாணயத் தாள்களைச் சேதமாக்குதல், உருமாற்றம் செய்தல் தண்டனைக்கு உரிய குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சேதமாக்கப்பட்ட நாணயத் தாளின் முகப்பு பெறுமதி அற்றுப்போகும் எனவும் மத்திய வங்கி அறிவித்திருக்கும் நிலையில் மேற்படி நாணயத்தாள்களால் அலங்காரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 100, 50, 20 ரூபா நாணயத்தாள்களால் குறித்த இடம் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (எ-37)

ஆவணக் காப்பகத்துக்கு

## கலைஞர்களின் விவரம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.11

கலைஞர்கள் ஆவணக் காப்பகம் தயாரிக்கப்படவுள்ளதால் கலைஞர்கள் தமது விவரங்களை அனுப்பி வைக்குமாறு அகில உலக கலைஞர் சங்கத்தின் இலங்கைக்கான செயலாளர் எம்.கே.முருகானந்தம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

அகில உலக கலைஞர் சங்கமானது உலகெங்கும் வாழ்கின்ற கலைஞர்களில் விவரங்களை பதிவு செய்து ஆவணமாக்கி வெளியீடு செய்யவுள்ளது. அதற்காக இலங்கையில் வாழ்கின்ற தமிழ் கலைஞர்கள் தங்களது பெயர், முகவரி, அலைபேசி இலக்கம், துறை போன்றவற்றை குறிப்பிட்டு 'அகில உலக கலைஞர் சங்கத் தலைவர் பண்டிதர் பொன். சுகந்தன், அகில உலக கலைஞர் சங்கம், மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி, கரவெட்டி' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-21)

# பாதுகாப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

## வடமாகாண சுகாதார அமைச்சர் குற்றச்சாட்டு

மன்னார்.ஜன.11

மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனக்கு வழங்கப்பட்டுள்ள தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு கடந்த 4 வருடங்களாக எனக்கும் வழங்கப்பட்டிருந்தது. மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடந்த 4 வருடங்களாக எனது மெய்ப்பாதுகாவலர்களாக கடமையாற்றி வந்தனர்.

இந்த நிலையில் தற்போது மாகாண சுகாதார அமைச்சராக நான் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிலையப் பொறுப்பதிகாரி அவர்களது கடமையை மட்டுப்படுத்தியுள்ளார்.

குறித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் மன்னார் பொலிஸ் நிலைய பிரிவைத் தவிர வேறு எங்கும் செல்ல வேண்டாம் என அவர் உத்தரவிட்டுள்ளார். இதனால் அவர்கள் மீள பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சுகாதார அமைச்சர் என்ற வகையில் நான் வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டியுள்ளது. அங்கு செல்லும் போது எனது மெய்ப்பாதுகாவலர்கள் என்னுடன் கூட வர வேண்டிய நிலை உள்ளது. ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்களுக்கு பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ள பொலிஸார் கூடவே செல்லுகின்றனர். கடந்த காலங்களில் எந்தவித பிரச்சினைகளும் ஏற்படவில்லை.

மன்னாரைச் சேர்ந்த மேலும் ஒரு மாகாண சபை உறுப்பினருக்கு மன்னார் பொலிஸ் நிலையத்தினுடாக வழங்கப்பட்டிருந்த தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அறிகின்றேன்.

இந்தவிடயம் தொடர்பில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோணின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன். பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டு செல்ல உள்ளேன்- என்றார். (எ-56)

# பல்கலைக்கு தெரிவாகாத மாணவர்களுள் பலர் விழிப்புணர்வின்றி முடங்கியுள்ளனர்

## அறிவூட்டுமாறு வலியுறுத்துகிறார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம்,ஜன.11

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகாத பல நூற்றுக்கணக்கான மாணவர்களில் ஒரு சிலரைத்தவிர ஏனைய மாணவர்கள் எதிர்காலம் பற்றிய எந்தவித ஆக்க பூர்வமான வழிமுறைகளும் தெரியாத நிலையில் வீட்டில் முடங்கிக் கிடக்கின்றார்கள். அவர்களுக்கான விழிப்புணர்வுகள் இல்லாமையே இதற்குக் காரணம். இந்த நிலை மாறவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்துவிட்ட நிலையில் வடபகுதி மாணவர்களில் குறிப்பிட்ட பகுதியினர் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்நிலை வகிப்பது வாழ்த்துக்குரியது. அதேபோன்று கணிதத்துறையில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற தமிழ் மாணவனின் அயரா உழைப்பும் புத்திக் கூர்மையும் பாராட்டுக்குரியது. நாம் எமது பழைய நிலைக்குச் செல்ல ஆயத்தமாகி வருகின்றோம் என்பது புலனாகின்றது.

விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்தவர்களில் முதன்மை நிலைகளை வகிக்கக்கூடிய ஒரு தொகுதி மாணவர்கள் மருத்துவத்துறை, பல் வைத்தியத்துறை, மிருக வைத்தியத்துறை மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழகங்களுக்குச் செல்கின்றனர். அதேநேரம் 3 பாடங்களில் சித்தி பெற்றும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகாத மாணவர்களுள் ஒரு சிலரே இரண்டாவது தடவை பரீட்சைக்காகத் தம்மைத் தயார் செய்கின்னர். இதனை நான் புதன்கிழமைகளில் மக்களைச் சந்திக்கும்போது அவதானித்து வருகின்றேன். மிகச் சொற்ப மாணவ மாணவியர் தவறான முடிவுகளுக்குக்கூட சென்றுவிடுவது வேதனையளிக்கின்றது.

விஞ்ஞானத் துறையில் 3 பாடங்களில் சித்தியடைந்த மாணவ மாணவியர்க்கு தாதியர் சேவை, மருந்தாளர் சேவை, கதிரியக்கவியலாளர் சேவை, கண் காது தொழில்நுட்பவியலாளர் சேவை, ஆய்வுகூடப் பரிசோதகர் சேவை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சேவை எனப் பல்வேறு பட்ட தொழில் வாய்ப்புக்கள் அதிகூடிய ஆரம்பச் சம்பளத்துடன் இருக்கின்றபோதும் அவற்றில் ஆர்வம் காட்டாது சோம்பி இருக்கின்றமை தவிர்க்கப்படவேண்டும். பலருக்கு இவ்வாறான இடைவெளிகள் இருப்பது பற்றித் தெரியாதுள்ளது.

அதே போன்று உயிரியல் துறையில் இரு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் கூட குண்டசாலை விவசாயக் கல்லூரி, வவுனியா விவசாயக் கல்லூரி, அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் இணைந்துகொண்டு சிறப்புத் தேர்ச்சிகளைப் பெறலாம். எதிர்பார்க்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்களுக்கு மேலதிகமாக ஊதியங்களைப்பெறவும்தொழில்முயற்சிகளை மேற்கொள்ளவும் வழிவகைகள் காணப்படுகின்ற போதும் அவை பற்றிய விழிப்புணர்வுகள் இல்லாததால்அவை பற்றி அறியாது அல்லது அதிக ளவுநாட்டம்காட்டாமல்இருந்து விடுகின்றார்கள்.

வர்த்தகத் துறையில் அல்லது முகாமைத்துவத் துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்கள் தமது பல்கலைக்கழக பட்டப் படிப்பை நிறைவுசெய்த பின்னர் வங்கிகளிலோ அல்லது அரச துறைகளிலோ குறிப்பிட்ட சில தொழில் முயற்சிகளில் தம்மை இணைத்துக் கொள்ள முடியும்.

ஜி.சி.ஈ. உயர்தரத்தில் 80 வீதத்துக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்கள் ஒரு மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ, கணக்காளராகவோ, ஆசிரியராகவோ, வங்கி ஊழியராகவோ நியமனத்தைப் பெறமுடியும். ஆனால் ஜி.சி.ஈ. உயர்தரத்தில் 60 வீதத்துக்கும் 80 வீதத்துக்கும் இடையே புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்கள் மேலே குறிப்பிட்ட மாணவர்களின் நேரடி அதிகாரிகளாக அவர்களின் கடமைகளைக் கண்காணிப்பவர்களாக அமர்ந்திருக்க வாய்ப்புண்டு. அதேபோன்று 50 வீதத்துக்கு மேற்பட்டதும் 60 வீதத்துக்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களில் சிலர் அனைவருக்கும் மேலாக முதன்மைத்தர முகாமையாளர் பதவிகளை அலங்கரிப்பது பல வேளைகளில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே மாணவர்கள், ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் 80 வீத புள்ளிகளுக்கு மேல் பெறுகின்ற மாணவர்களே தப்பிப் பிழைப்பர், ஏனைய மாணவர்கள் வேலைவாய்ப்பை இழந்தவர்களாக மாற்றப்படுவார்கள் என்ற தவறான கருத்தை தங்கள் மனதில் இருந்து அகற்றிக் கொள்ள வேண்டும். எந்தத்துறை மீது ஆர்வம் இருக்கின்றதோ அந்தத் துறையில் தொடர்ந்து கற்பதற்கும் முன்னோக்கிப் பயணிப்பதற்கும் உயர்ந்த பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வழிவகுக்கக்கூடிய கல்வித் துறைகளைதட தேர்ந்தெடுக்க முன்வர வேண்டும். எமது மாணவர்களின் எதிர்காலமும் சிறப்புற விளங்க ஆசீர்வதிக்கின்றேன்-என்றுள்ளது. (எ-4)

---

உருமாற்றம் செய்யப்பட்டவை தடைசெய்யப்பட்ட நிலையில்

## ஏ.ரி.எம் இயந்திரங்களில்; பெறப்படும் நாணயத்தாள்களில் அடையாளங்கள்

மக்கள் விசனம்

அச்சுவேலி.ஜன.10

நாணயத்தாள்களில் மேலதிக அடையாளங்கள் குறிப்புக்கள் குறியீடுகள் இடப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் வங்கிகளின் ஏ.ரி.எம் இயந்திரங்களில் பெற்றுக்கொள்ளும் நாணயத்தாள்கள் உருச்சிதைக்கப்பட்டு அதாவது அடையாளங்கள் குறியீடுகள் உள்ளதாக இருக்கின்றன எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

பழுதடைந்த மற்றும் மேலதிக அடையாளங்கள் குறிப்புக்கள் இருக்கும் நாணயத்தாள்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி மார்ச் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளது. எனினும் வங்கிகளின் அறிவிப்புக்கு அமைய உள்ளூர் பணப்பரிமாற்றத்தில் நாணயத்தாள்கள் இரண்டு பாகங்களும் பரீசிலனைக்கு உள்ளாக்கப்பட்டே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன மேலதிக அடையாளம் இருக்கும் நாணயத்தாள்கள் உடனுக்குடன் நிராகரிக்கப்படு கின்றன. பொதுமக்கள் மற்றும் கடைகளில் இது மிக கண்டிப்பான முறையில் பின்பற்றப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த நிலையில் ஏ.ரி.எம் இயந்திரங்களில் உருமாற்றம் செய்யப்பட்ட பணத்தாள்கள் இருப்பது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ.11)

---

வடமாகாணப் பாடசாலைகள்

## காணி நடவடிக்கைகள் பற்றி சபை உறுப்பினர்களுக்குக் கூறவேண்டும்

யாழ்ப்பாணம்.ஜன.11

வடக்கு மாகாணப் பாடசாலைகள் தமது தேவையின் நிமித்தம் காணிகளை சுவீகரித்தல், வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயின் அது தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்என்றகோரிக்கை சபை உறுப்பினர்களால் கல்வி ஆலோசனைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது என மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் தமது அபிவிருத்தியின் நிமித்தம் காணிகளை கொள்வனவு செய்கின்றன. அதேநேரம் மேலதிகமாக உள்ள காணிகளை குத்தகை மற்றும் ஒப்பந்த அடிப்படையிலும் வழங்குகின்றன. இதனால் காலப்போக்கில் அந்தக் காணிகள் பறிபோகும் அல்லது அதன் உரிமம் இல்லாமல் போகும் நிலை ஏற்படும்.

ஆகவே காணிகள் பெறுதல் அல்லது வழங்குவது தொடர்பில் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர், வலய கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலக காணி உத்தயோகத்தர், மாகாண காணி உத்தியோகத்தர் உள்ளடங்கலாக அரச சட்டத் தரணியுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி காணிகளின் உண்மைத் தன்மை தொடர்பில் விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் கலந்துரையாடல் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்களுக்கு விளக்கமளித்து அவர்களின் கருத்துக்களை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்என்றுதெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தொடர்பு கொண்ட கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் சபை உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தோம். அதன்போது பாடசாலைக் காணிகளை குத்தைக்கு வழங்கல் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. காணிகள் குத்தைக்கு வழங்கப்படும் கால எல்லைகள் 30 வருடத்தை தாண்டியுள்ளது. அவ்வாறு காணிகளை வழங்கும் போது குத்தகைக் காலம் நிறைவடையும்போது நாம் இருப்போம் என்பது முடிவில்லை.

அதன் பின்னர் அந்தக் காணிகளை அவர்களே உடமையாக்க நேரிடலாம். ஆகவே காணிகள் வழங்கல் பெறுதல் தொடர்பில் துறை சார்ந்த அதிகாரிகளின் கலந்துரையாடலின் பின்னர்சபைஉறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது என்றார். (எ-ரி)

---

## செய்திப் பணிப்பாளர் மீதான தாக்குதலை கண்டிக்கிறேன்

### வடக்கு மாகாண அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்ப்பணத்தில் இயங்குகின்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

குறித்த தொலைக்காட்சி நிறுவனத்துக்குள் கடந்த 8ஆம் திகதியன்று அன்று அத்துமீறி புகுந்த நபர் ஒருவர் அந்த நிறுவனத்தின் செய்தி பணிப்பாளர் தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி மீது தாக்குதல் மேற்கொண்டார்.

இந்தச் சம்பவம் ஊடக சுகந்திரத்துக்கு விடுக்கப்பட்டுள்ள மிகப்பெரும் அச்சுறுத்தலாகும். சம்பவத்தின் பின்னணிகள் குறித்து முழுமையான விசாரணைகள் செய்யப்பட்டு குற்ற வாளிகள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்-என்றார். (எ-8)

---

சிதம்பரத்துக்குச் செல்ல

## கப்பல் சேவையை ஏற்படுத்தித் தந்த இலங்கை இந்திய அரசுகளுக்கு நன்றி

### யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தெரிவித்துள்ளது

யாழ்ப்பாணம்,ஜன.11

ஈழம் வாழ் தமிழ் மக்கள் தமிழ்நாடு சிதம்பர நடராஜப் பெருமாளைத் தரிசிப்பதற்கு ஏற்ற வகையில் கப்பல் மூலம் அழைத்துச் செல்ல ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொண்ட இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவன் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் உள்ளதாவது:

எமது நாட்டில் உள்ளோர் சிதம்பர நடராஜர் மீது கொண்டுள்ள அளவற்ற பக்தியால் தாம் இறக்கும் போது தமது சொத்துக்கள் அனைத்தையும் சிதம்பர நடராஜருக்கு அர்ப்பணித்துள்ளனர். அதனால் இன்று சிதம்பர நடராஜர் ஆலயத்துக்கு பெருந்தொகையான காணிகள் காணப்படுகின்றன. இதனை அனைவரும் அறிவர்.

இத்தகைய ஆத்மீக தொடர்பு கொண்ட முன்னோர் சிதம்பரத்தில் நடைபெறும் உற்சவங்களுக்கு வள்ளங்களில் சென்று வந்தனர். சிலர் தமது இறுதி நாளை சிதம்பரத்தில் கழித்து அங்கேயே வாழ்க்கையை நிறைவு செய்துள்ளனர். எமது பேரவையின் பெருந்தலைவராக சிதம்பர சேத்திர பூஜாஸ்தாரிகர் சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீஷிதர் இன்றும் இருந்து வருகிறார்.

இத்தகைய தொடர்புபட்ட திருத்தலத்துக்குச் செல்வதற்கு கப்பல் சேவையைத் தொடக்கியிருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சியையும் மனநிறைவையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கப்பல் சேவை குறைந்தது ஒரு வாரமாவது நடைபெற பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்புனித பணி நிறைவுற உதவிய வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல் கூரே, அவரது செயலாளர் இளங்கோவன் ஆகியோருக்கும் இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜனுக்கும் இந்து கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கும் இப்பணி நிறைவேற அயராது உழைத்த சிவசேனை அமைப்பைச் சேர்ந்த மறவன்புலவு சச்சிதானந்தனுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் -என்றுள்ளது. (எ-21)



# சைட்டத்தை தடைசெய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஜன.11

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியின் பெயரை மாற்றிப் பதிவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளைக் கண்டித்தும் சைட்டத்தை உடனடியாக மூடிவிட வேண்டும் என்று வலியுறுத்தி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





மாணவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவண்ணம் விடுதி பகுதியிலிருந்து புறப்பட்டு ஊர்வலமாக வந்து, பிரதான வீதியோரம் நின்று, தமது கோஷங்களை எழுப்பினர்.

"மருத்துவப் படிப்பை பணத்துக்கு விற்பனை செய்தால், பணம் படைத்தவர்களுக்கு வழங்கும் சலுகையாகவே அமையும். ஏழைகளைக் காப்பற்றுவதற்கும் எமது பெற்றோர், மாணவர்களைக் காப்பாற்றுவதற்கும் சைட்டத்தை உடனடியாக தடை செய்யுங்கள்" என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாக முன்றிலில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் பெருமளவான மாணவர்கள் கலந்து கொண்டனர். (ற-ரி5)

## களனி, வத்தளை வீதி: நேற்று முதல் தடை

கொழும்பு,ஜன.11

புதிய களனிப் பாலத்தின் சீரமைப்புவேலைகள் காரணமாக கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் புதிய களனி பாலத்துக்கு அருகில் களனி மற்றும் வத்தளை திசைக்கு நுழையும் சாலை நேற்று முதல் மூடப்பட்டது. களனி பாலத்துக்கு அருகில் உள்ள வெளியேறும் சாலையைப் பயன்படுத்தும் சாரதிகள், மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

மாற்று வீதிகளாக களனி மற்றும் பேலியகொட திசை நோக்கி வெளியேறுவதற்காக பெலியகொட வெளியேறும் சாலையில் கொழும்பு - கண்டி வீதிக்கும், வத்தளை - மற்றும் பேலியகொட திசை நோக்கி வெளியேறுவதற்காக நீர்கொழும்பு வீதியையும் பயன்படுத்த முடியும் என பொலிஸார் சாரதிகளுக்கு அறிவித்துள்ளனர். (ற-ரி5)

## பொது ஜன முன்னணி வேட்பாளர் கைது

வவுனியா,ஜன.11

வவுனியா செட்டிக்குளம் மீடியாபாம் பகுதியில் அரிய வகை மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

செட்டிக்குளம் பிரதேச சபை பொது ஜன முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டன.

இவரால் வெட்டப்பட்டது எனத் தெரிவிக்கப்படும் 21 மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## மருத்துவமனைக்கு அருகில் சிசு மீட்பு

கிளிநொச்சி,ஜன.11

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அருகில் சிசுவொன்று மீட்கப்பட்டது.

மருத்துவமனைக்கு அருகில் நேற்று சிசுவைக் கண்ட மக்கள், பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சிப் பொலிஸார், சிசுவை மீட்டு மருத்துவனையில் ஒப்படைத்த னர்.

தற்போது சி[illegible]லமுடன் உள்ளது என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

கைவிடப்பட்ட சிசுவின் தாயைக் கண்டறியும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ற-ரி5)

## மட்டு.நகர சபை ஊழியர் சேவைப்புறக்கணிப்பு

மட்டக்களப்பு,ஜன.11

மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபைச் சிற்றூழியர்கள் நேற்று ஏறாவூர் நகர சபைக்கு முன்பாக சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட சிற்றூழியர்கள் 68 பேருக்கு கடந்த நவம்பர் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ள கொடுப்பனவை வழங்கக்கோரியே புறக்கணிப்பு நடத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. இந்தச்சிற்றூழியர்களுக்கு கடந்த வருடம் மார்ச் மாதம் தொடக்கம் ஒரு வருடகாலத்துக்கு பணியாற்றுவற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளபோதிலும் கடந்த நவம்பர் மாதம் முதல் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சிற்றூழியர்களது புறக்கணிப்பால் குப்பை அகற்றும் பணி தொடக்கம் பல்வேறு பிரிவு நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளது. சம்பவ இடத்துக்கு சென்ற சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எம்எல். றெபுபாசம் சிற்றூழியர்களது கோரிக்கை தொடர்பாக கலந்துரையாடினார். (ற-ரி5)



## கட்டடங்கள் அமைக்க எதிர்த்து விவசாய அமைப்பு கவனவீர்ப்பு



மட்டக்களப்பு,ஜன.11

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட திருப்பெருந்துறை, கொத்துக்குளம் மாரியம்மன் ஆலய சூழலுள்ள வயல்காணிகள் நிரப்பப்பட்டு, கட்டடங்கள் அமைக்கும் பணிகளை நிறுத்த வேண்டும் எனக் கோரி, ஆலய நிர்வாகத்தினரும் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து, ஆலய முன்றிலில், நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வயல்காணிகளை மூடுவதற்கு அரசு தடைகளை விதித்துள்ள போதிலும் அவற்றையும் மீறி, வயல்காணிகள் மூடப்பட்டு கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டது என ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் தெரிவித்தனர்.

2000ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் அடிப்படையில், விவசாயக் காணிகள், விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த, ஏனைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தமுடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இது தொடர்பான மனுவை மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் எம்.உதயகுமாரிடம் ஒப்படைத்தனர். (ற-ரி5)

## தபால் திணைக்களத்தின் சேவைகள் விரிவாக்கப்படும்

தபால் சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.11

தபால்த் திணைக்களத்தின் சேவையை விரிவாக்கி, மக்களுக்குப் பயனுள்ள சேவைகளை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது எனத் தபால் சேவைகள் மற்றும் இஸ்லாமிய மத விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.டி.பி.மீகஸ்முல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

'தலைமை அமைச்சர் தலைமையில் செயற்படும் பொருளாதார விவகாரம் தொடர்பான குழுவின் பணிப்புரைக்கு அமைவாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் தபால் திணைக்களத்தில் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, இலாபம் பெறக்கூடிய நிறுவன்மாக அதனை மாற்ற எதிர்பார்த்துள்ளோம்.

தபால் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில், தபால்மா அதிபர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடித் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றார். (ற-ரி5)

## ஆணொருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,ஜன.11

நாவலடி வாவிக்கரையோரப் பகுதியில் 70 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலம், நேற்றுக் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டது.

பொதுமக்கள், பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சடலம், இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகிறது எனவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

# இராணுவ முகாம்களை தாக்குகிறது இஸ்ரேல்

## சிரியா குற்றச்சாட்டு



டமஸ்கஸ், ஜன. 11

ஏவுகணைகள் மூலம் தமது இராணுவ முகாம்களை இஸ்ரேல் தாக்குகிறது என்று சிரியா குற்றம் சுமத்தியுள்ளது.


இதுகுறித்து சிரிய இராணுவத்தின் தரப்பில், 'இஸ்ரேல் நாட்டு ஏவுகணைகள் சிரியாவின் டமஸ்கஸ் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை தாக்கியுள்ளன. லெபனானில் இருந்தும் இஸ்ரேலின் வடபகுதியில் இருந்தும் இந்த ஏவுகணைகள் விசப்பட்டுள்ளன' என்று சிரிய இராணுவம் குறிப்பிட்டது. சிரியாவின் இந்தக் குற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்துள்ளது. (ம)

# ஹொண்டுராஸில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை விடுப்பு

மத்திய அமெரிக்க நாடான ஹொண்டுராஸில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

ஹொண்டுராஸ் - கேமேன் தீவுகளுக்கு இடையே உருவான இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.6 அலகாகப் பதிவானது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ஹொண்டுராசின் பாரா பட்டுகா நகரில் இருந்து 202 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்தது. சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டனர். (ம)





வடகொரிய - தென்கொரிய ஒப்பந்தத்துக்கு

# குவியும் பாராட்டு

சியோல், ஜன. 11

வடகொரியா, தென்கொரியா நாடுகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள குளிர்கால ஒலிம்பிக் தொடர் தொடர்பான ஒப்பந்தத்துக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. தென்கொரியாவில் அடுத்த மாதம் குளிர்கால ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்கேற்க தென்கொரியாவின் எதிரிநாடான வடகொரியாவும் விருப்பம் தெரிவித்தது.

இதையடுத்து இது தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்று வந்தன. தற்போது இந்த விடயம் தொடர்பில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன்படி இரண்டு நாடுகளுக்கும் இடையிலும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதற்கு பல தரப்புக்களிடம் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

"இரண்டு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம், கொரியத் தீபகற்பத்தில் நிலவிய பதற்றமான சூழ்நிலையைத் தணிக்க உதவும். இது அமைதி திரும்புவதற்கான முதல்படியாகவே பார்க்கப்படுகிறது" என்று ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் குத்தேரஸ் தெரிவித்தார்.

"இருநாடுகளுக்கும் இடையேயான இந்த பேச்சை ரஷ்யா வரவேற்கிறது.

மாற்றத்துக்கான முதல்படியாக இந்த பேச்சு இருக்கும். இரண்டு நாடுகளுக்கும் இடையே கடைசியாக கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உயர்மட்ட அதிகாரிகள் அளவிலான பேச்சு நடந்தது. பெட்ரோல், டீசல் மற்றும் நிலக்கரி என பல்வேறு தடைகளுக்கு வடகொரியா உள்ளாகியுள்ள நிலையில், வடகொரிய அதிபரின் இந்த முடிவு அவர் கீழே இறங்கி வரத் தயாராக உள்ளார் என்பதையே காட்டுகிறது" என்று ரஷ்யாவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சூரியனை போன்றதான நட்சத்திரம் கண்டுபிடிப்பு

சூரியனைப் போன்று கடுமையான வெப்பத்துடன் கூடிய புதிய நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நட்சத்திரம் பூமியின் மேற்பரப்பில் இருந்து 120 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.

இந்த நட்சத்திரம் சூரியனைப் போன்றே கடுமையான வெப்பத்தை வெளியிடுகிறது. ஆனால் அதில் உள்ள இரசாயனப் பொருள்களின் அளவுகள் மட்டும் வேறுபடுகின்றன.

இதன்படி சூரியனில் ஹைதரசன் மற்றும் ஹீலியம் போன்ற இரசாயனங்கள் உள்ள அளவை விட புதிதாகக் கண்டபிடிக்கப்பட்டுள்ள நட்சத்திரத்தில் இரண்டு மடங்கு உள்ளது என்று அறியப்படுகிறது. (ம)



# கலிபோர்னியாவில் வெள்ளப்பெருக்கு 8 பேர் உயிரிழப்பு

வொஷிங்டன், ஜன. 11

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 8 பேர் உயிரிழந்தனர்.

கலிபோர்னியாவில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதையடுத்து அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, கலிபோர்னியா மாகாணத்தின் பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலச்சரிவில் சிக்கி இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (ம)



# ஆறு மாதங்களில் புதிய காங்கிரஸ்

## ராகுல்காந்தியின் கணிப்பு



புதுடெல்லி, ஜன. 11

"அடுத்த ஆறு மாதங்களில் காங்கிரஸ் கட்சியில் அதிரடியான மாற்றங்கள் ஏற்படும்" என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பக்ரைனில் தற்போது சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார் ராகுல் காந்தி. அங்குள்ள இந்தியர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பாரதிய ஜனதா அரசு எல்லா வகையிலும் தோல்வியைச் சந்தித்து உள்ளது. நாட்டில் வேலை வாய்ப்பின்மை மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. இதற்குத் தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் பாரதிய ஜனதா ஈடுபட்டுள்ளது. மக்கள் மத்தியில் கலவரத்தையும் தூண்டுகிறது. ஜாதி ரீதியாக, மத ரீதியாக மக்களை பிரித்து அதன் மூலம் ஆதாயம் தேடப் பார்க்கிறது.

இப்போது நாடு அமைதியாக இருப்பது போன்ற ஒரு தோற்றம் இருக்கலாம். ஆனால் பாரதிய ஜனதாக் கட்சி பல்வேறு சிக்கல்களையும், மோதல் போக்குகளையும் உருவாக்கி வைத்துள்ளது. இது பிற்காலத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையில் மாறலாம். அடுத்த 6 மாதங்களில் காங்கிரசில் புதிய மாற்றங்கள் ஏற்படும்.

அமைப்பு ரீதியில் பல்வேறு அதிரடியாக மாற்றங்கள் செய்யப்படும். இனி புதிய காங்கிரசாக ஒளிரப் போவதை பார்ப்பீர்கள்" என ராகுல் காந்தி மேலும் தெரிவித்தார். (ம)


விலை 60/=
பொங்கல் மலர்
அரசியல்
சிறுகதைகள்
கவிதைகள்
கட்டுரைகள்
ஆய்வுகள்
போன்ற இன்னும் பல அம்சங்களை உள்ளடக்கி
132 பக்கங்களுடன் 100 இற்கும் மேற்பட்ட எழுத்தாளர்களை உள்ளடக்கியதாகத் தயாராகி விட்டது.
வாசகர்கள் அருகிலுள்ள முகவர்களிடம் தமது பிரதியை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வடக்கு எனும் பகடைக்காய்

உள்ளூராட்சித்தேர்தல்களுக்கானபரப்புரைகள்சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. வழக்கம்போல் போர் வெற்றி, அது தொடர்பான உரிமை கோரல், புலிப் புராணம் என்று வடக்குப் பகுதியை தத்தமது தேர்தல் தந்திரோபாயமாகப் பயன்படுத்தி வருகின்றனர் கொழும்பு அரசியல் பிரதிநிதிகள். தமது அரசியல் இருப்பும், அதன் எதிர்காலமும் புலிப் புராணத்திலும், இனவாதத் துவேஷங்களிலுமே தங்கியுள்ளன என்று அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் ஆழமான வெளிப்பாடாகவே இந்தஉள்ளூராட்சித்தேர்தலையும் பார்க்க முடிகிறது. யதார்த்தமும் அதுவே.

முன்னாள் அரச தலைவர் மகிந்த, தனது வாக்கு வங்கியைத்தக்கவைப்பதற்காகதெற்கைஉசுப்பிவிடும் வகையில் பரப்புரையொன்றை அண்மையில் மேற்கொண்டார். 'தமிழீழமா?, ஒற்றையாட்சியா? என்று முடிவு காணும் தேர்தல் இது' என்று அவர் முழங்கியிருந்தார். இதுதொடர்பில்இந்தப்பத்தியில்ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க, 'புலிகளின் பிடியில் இருந்து யாழ்ப்பாணத்தை மீட்டது நான்தான்' என்று உரிமைகோரியுள்ளார்மற்றொருமுன்னாள்அரச தலைவரான சந்திரிகா.

வெயாங்கொடவில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் சந்திரிகா. 'எனது அரசு ஆட்சியைப் பொறுப்பேற்று ஓராண்டு காலத்துக்குள் யாழ்ப்பாணத்தை மீட்டோம். வடக்கில் மூன்றில் இரண்டு பகுதியில் இருந்து புலிகள் விரட்டியடிக்கப்பட்டனர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவையே ராஜபக்ச அரசு கைப்பற்றியது. நான் செய்த தவறு என்னவென்றால், கோடி ரூபா செலவளித்து வானளவு உயரத்துக்குகட்டவுட்டுகள்வைத்துப்போர் வெற்றியைப் பரப்புரை செய்யாமல் விட்டமையே' என்று அவர் அங்கு வைத்துத் தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் இந்தக் கருத்து, மகிந்தவுக்கான பதிலடி என்றும் நாம் எடுத்துக் கொள்ளலாம். இந்த வாதங்கள் இத்துடன்நிற்கப்போவதில்லை. மகிந்தவே கதி என்ற நிலைப்பாட்டில்உள்ளஅரசியல்வாதிகள், அடுத்தடுத்து விஷப் பேச்சுக்களை வெளிப்படுத்தத்தான் போகிறார்கள். அதற்குமறுபக்கத்தில்இருந்தும்பதிலடி கொடுக்கப்படத்தான் போகிறது. மொத்தத்தில் பெப்ரவரி 10ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் வரையில், அதற்கு அப்பாலும் கூட இனவாதம் தெற்கில் ஓங்கி ஒலிக்கத்தான் போகிறது.

இந்த இனவாதப் பரப்புரைகள் புதிதாக அமையவுள்ள அரசமைப்புக்குநிச்சயம்இமாலயப்பின்னடைவையே உண்டாக்கும். 'அரசமைப்பில்குறிப்பிடப்பட்டுள்ளது கூட்டாட்சியே. இந்தஅரசமைப்புஉருவாக்கல்முயற்சி சாத்தியமானால் கொழும்பை விடவும் மாகாணங்கள் அதிக அதிகாரங்களைப் பெற்றுத் திகழும். அது தமிழர் தாயகம் உருவாக வழிவகுக்கும்' என்று மகிந்தவும் அவரது சகாக்களும் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளனர். இத்தகைய கருத்துத்தான் தென்னிலங்கை மக்களிடையே இந்தத் தேர்தல் பரப்புரையின்மூலம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு ஆழமாக வேரூன்றச் செய்யப்படப்போகிறது. எனவே இந்தப்பரப்புரைகள் அரசமைப்பை உருவாக்கும் முயற்சிக்குப் பெரும் பின்னடைவையே கொடுக்கும். அவ்வாறு ஏற்படுத்தப்படும் பின்னடைவு, அரசமைப்பு உருவாக்கல் முயற்சிகளை கிடப்பில் போடுவதற்கும் வழிவகுத்துவிடலாம்.

புலிப்பூச்சாண்டிகளைக்கைவிட்டுபுதிதாகஎதையாவது சாதிப்பதற்குதெற்கில்இணக்கம்ஏற்பட்டால்மட்டுமே, அது நாட்டில் நல்லிணக்கத்துக்கு வழிசமைக்கும்.

# பொய்யும் புரட்டும் கலந்த பரப்புரைகள் இலங்கைத் தேர்தல்களில் வழக்கமானவையே

சிங்கள மூலம்: பேராசிரியர் நாலககொடஹேவா (மவ்பிம)
தமிழில்: வீ.எஸ்.ரீ

அரசியல்பொய்வாக்குறுதிகளும், பொய்யான பரப்புரைகளும் இலங்கையைப் பொறுத்தவரை புதிய விடயங்களல்ல. ஆனால் கடந்த அரச தலைவர் தேர்தல் சமயத்தில் இந்த வழக்கம் பெரிய அளவில் தலையெடுத்திருந்ததாகக்கருதப்பட்டது. பொய்யான வாக்குறுதிகள், பொய்யான வாயடிப்புக்கள், பொய்யான குற்றச்சாட்டுக்கள் போன்றே பொய்யான விசாரணைகளும் கூட முன்னெடுக்கப்பட்டமைகுறித்தஅனுபவங்கள் வாக்காளர்களுக்குக் கிட்டியிருந்தன. இவற்றால் எந்த அளவுக்கு நாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பினும், கடைசியில் இவற்றின்மூலம்நாட்டுமக்கள் பாடம் கற்றுக் கொண்டிருந்திருப்பார்களானால்எதிர்காலத்திலாவது இத்தகைய பொய்களால் ஏமாறாதிருக்க அவர்களுக்கு வாய்ப்பு அமையக்கூடும்.

அந்த வகையில் கடந்த 2015 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத்தேர்தல்வேளைகளில்நாம் கேட்க நேர்ந்த கதைகள் சிலவற்றை ஞாபகப்படுத்திப் பார்ப்போமே!

**முன்னைய ராஜபக்ச அரசு மீது, மைத்திரி தரப்பு முன்வைத்த குற்றச்சாட்டுகள்**

வெளிநாட்டு வங்கிகளில் பெருந்தொகைப்பணம் அரச தரப்பினரால் வைப்பில் இடப்பட்டுள்ளதாகத்தலையில்அடித்துச் சத்தியம் செய்யாத குறையாக விமர்சனம் முன்வைத்தவர்களதுகுற்றச்சாட்டுக்குறித்து ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? யாழ்ப்பாணத்திலிருந்து தப்பித்த நகைகள் அடங்கிய வாகனம் குறித்து கதை கட்டப்பட்டதே. அதுகுறித்துஏதாவது கண்டு பிடிக்கப்பட்டதா? லம்போகினிகார்கொண்டுவரப்பட்டதாக பக்கிங்காமிலிருந்து குதிரை கொண்டு வரப்பட்டதென்றகதையளத்தல் குறித்து எதாவது கண்டு பிடிக்கப்பட்டதா? தாஜுதீன், லசந்த மற்றும் என்னொலிகொட படுகொலைகள் குறித்து ஏதாவது தகவல்கள்வெளிப்படுத்தப்பட்டனவா? நெடுஞ்சாலைகள்புனரமைப்பு, அனல்மின் நிலையம், துறைமுகம், விமான நிலையங்கள் போன்ற மிகப்பெரும் திட்டங்கள் தொடர்பான கையாள்கையில் தரகுப்பணம் பெறப்பட்டதாகவழக்கேதும்தொடுக்கப்பட்டதுண்டா? பொது மக்களது அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலைகள் உண்மையில் குறைக்கப் பட்டுள்ளனவா? தனியார் துறை ஊழியர்களுக்கான சம்பளங்கள்உயர்த்தப்பட்டுள்ளனவா? கல்வித்துறைக்கு, அரசின் தேசியஉற்பத்தியில்ஆறுவீதம் ஒதுக்கப்பட்டுள்ளமை உண்மைதானா? இளைஞர் யுவதிகளுக்குஇலவச'வைபை'வழங்கப்பட்டனவா? 'கசினோ' சூதாட்டநடைமுறைமுடக்கப்பட்டுள்ளதா?



பவுணால் செய்யப்பட்டதா எனக் கேள்வி எழுப்பட்ட அதிவேகநெடுஞ்சாலைஅமைப்புக்கான செலவினங்கள் குறைவடைந்தனவா?

தேயிலை, இறப்பர்உற்பத்தியாளர்களுக்கு அவற்றின் விலைகள்உறுதிப்படுத்தப்பட்டனவா? விவசாயிகளுக்கானஉரமானியம்தொடர்ச்சியாகக்கிட்டினவா? க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்குஇலவசமாக கணினிகள், டப்வசதிகள்வழங்கப்பட்டனவா? நாட்டில் போதைப்பொருள் பாவனை கட்டுப்படுத்தப்பட்டதா?

இவற்றைப் போன்ற ஏராளமாகக் கேள்விகளை எழுப்ப வேண்டி நேர்ந்தமைக்கான காரணம், அந்தஅளவுக்குஇன்றைய ஆட்சியாளர்கள், தாம் பதவியேற்ற நாளிலிருந்து நாட்டு மக்களுக்கு வழங்கி வந்த வாக்குறுதிகள் மற்றும் கூறிவந்த நம்பிக்கையூட்டும் கதைகள் அத்தனையும் பச்சைப்பொய்களே என்றாகியுள்ள காரணத்தினாலாகும். அந்த அளவுக்கு ஆட்சியாளர்கள் இந்த நாட்டு மக்களை ஏமாற்றிவந்துள்ளனர்என்பது இன்று கண்முன்னாலேயே நிரூபணமாகியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக வாக்காளர்களது வாக்களிக்கும் உரிமையை தேர்தல்கள் நடத்துவதைப்பிற்போட்டுஒத்திவைத்து வந்ததன் மூலம் மீறி, நாட்டு மக்களை மடையர்களாக்கி வந்த இன்றைய ஆட்சியாளர்கள், கடைசியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தலை எதிர்வரும்பெப்ரவரிமாதம்10 ஆம் திகதியன்று நடத்த ஒழுங்கு செய்ததையடுத்து, மீண்டும் நாட்டில் அரசியல் பொய்வாக்குறுதிகளும்பொய்யான பரப்புரைகளும், தலைதூக்கியுள்ளமையைத் தெட்டத்தெளிவாக உணரமுடிகிறது.

அது சரி, இந்தத்தடவை இந்த அரசியல்வாதிகளுக்கெல்லாம் நாட்டு மக்கள் எந்த விதத்தில் தமது பலத்தை தமது வாக்குகளின் மூலம் வெளிப்படுத்தப் போகின்றனர் என ஒரு கணம் சிந்திக்க வேண்டியுள்ளது.

கடந்தசிலநாள்களின்முன்னர் இலங்கை மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விடயம் தொடர்பாகதாம்நியமித்தவிசாரணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், அத்தகைய ஊழல் இடம் பெற்றமையைஅரசதலைவர்அதிகாரபூர்வமாக ஒப்புக் கொண்டமைஅரசியலரங்கில்முக்கிய சம்பவமொன்றாகக் கருதப்பட்டது. அத்தகையஊழல்காரணமானநட்டம்தவறிழைத்தோரிடமிருந்து அறவிடப்படுமென அரசதலைவர் தெரிவித்தமையையடுத்து, சில தரப்பினர் அத்தகைய தவறை மூடி மறைக்க மற்றவர்களை நோக்கி விரல் நீட்டிக் குற்றம் சாட்டியமையையும் எம்மால் உணர முடிந்தது.

**பிணைமுறி ஊழல் காரணமான நட்டம் எவரிடமிருந்து அறவிடப்படவுள்ளது என்பதில் தெளிவில்லை**

மத்திய வங்கி பிணை முறி வழங்கலில் ஊழல் இடம்பெற்றதாக அரச தலைவரே ஒப்புக் கொண்டமை பாராட்டத்தக்க தொன்றேயாயினும், இந்த விடயத்தில்வேறுசிலஅம்சங்களும்குறைபாடுகளாகக்கொள்ளப்படவேண்டியிருக்கின்றன.



குறித்த ஊழல் மோசடி காரணமாக மொத்தநட்டம் என்ற வகையில் கோடிக்கணக்கான ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிகிறது. இத்தகைய பெருந்தொகை நிதி மோசடி நாட்டு மக்களைப் பெருமளவில் பாதிக்குமொன்று. அத்தகைய பெருந்தொகை எவரிடமிருந்து எந்த விதத்தில்அறவிடப்படும்என்பதுகுறித்துத் தெளிவுபடுத்தப்படாமை நாட்டு மக்கள் மனதில் பெரும் சந்தேகங்களையே தோற்றுவித்துள்ளது.

உள்ளூராட்சிச்சபைகளுக்கானதேர்தலுக்கான தினம் தீர்மானிக்கப்பட்ட சமயத்திலேயேஅரசதலைவர்மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தொடர்பான விசாரணை அறிக்கை குறித்த தமது கருத்தை வெளியிட்டிருந்தார். இது தேர்தலுக்கு எந்த வகையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது குழப்பத்தைத் தருமொன்றே. ஏனெனில் இந்தத் தேர்தல் அரசின் இரு முக்கிய தரப்புக்களுக்கும், கூட்டு எதிரணித் தரப்புக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்று என்பதனாலாகும்.

கடந்த அரசதலைவர் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டமைத்திரிபாலசிறிசேனஅன்னப்பட்சிச் சின்னத்தில் போட்டியிட்டார். அந்தக்கூட்டணியில்ஐ.தே.க.தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு.ஜே.வி.பி.முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயகக் கட்சி உட்பட்டபலகட்சிகளுக்குஆதரவான வாக்குகளும், மைத்திரிபாலவுக்குத் தனிப்பட்ட மறையிலான ஆதரவு வாக்குகளும் அடங்கியிருந்தன. அந்த அரசதலைவருக்கான தேர்தலில் மைத்திரிபாலவுக்கு 62 லட்சத்து 17,162 வாக்குகளும், மகிந்த ராஜபக்சவுக்கு 57 லட்சத்து 68,090 வாக்குகளும் பதிவாகியிருந்தன. 4 லட்சத்து 49,072 மேலதிக வாக்குகள் பெற்று மைத்திரிபாலசிறிசேன அரசதலைவராகத் தேர்வானார். ஆனால் 2015 நாடளுமன்றத்தேர்தலில் மைத்திரிபால தரப்பும், மகிந்த தரப்பும் ஐ.ம.சு. கூட்டணியில் போட்டியிட்டதால், மைத்திரிபாலவுக்கு தனிப்பட்ட ஆதரவு வாக்குகள் இருந்திருப்பின் அது அந்தக்கூட்டணிக்கான ஆதரவுவாக்குகளை உயர்த்தியிருந்திருக்க வேண்டும். ஆனால்நடந்ததென்ன? ஐ.ம.சு.கூட்டணியால் 47லட்சத்து 32,664வாக்குகளையே அந்தநாடாளுமன்றத் தேர்தலில் பெற முடிந்தது. ஐ.தே.க,தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, ஜே.வி.பி. முஸ்லீம் காங்கிரஸ், ஜனநாயகக்கட்சி ஆகியவை தனித்தனியே பெற வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 62 லட்சத்து 31, 653 ஆகும். அந்த வகையில் அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்குதனிப்பட்டஆதரவுவாக்குகள் என்றுசொல்லிக்கொள்ளுமளவுக்குப் வாக்குகள்கிட்டியிருக்கவில்லைஎன்பது இதன்மூலம் நிரூபணமாகிறது.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.ம.சு.கூட்டணி மைத்திரிபாலவின் தலைமையின் கீழ் போட்டியிட்டதன் மூலம்மகிந்தவின்ஆதரவாளர்களது தைரியம் வீழ்ச்சி கண்டமையே கண்ட பலனாகும். அந்தத் தேர்தல் தொடர்பாக மைத்திரிபால சிறிசேன கூறியவற்றையும், மேற்கொண்ட நடவடிக்கைகளையும்நினைவுபடுத்திப்பார்ப்பதுஇவ்வேளையில்பொருத்தமாக அமையும்.

**முன்னர்மகிந்தவுக்குஆதரவாகஅரசதலைவர்தேர்தலில் கிட்டிய 58லட்சம் வாக்குகளில் பெருமளவானவை இம்முறைதாமரைமொட்டுச்சின்னத்துக்கேகிட்டஇடமுண்டு எனக் கருதவேண்டியுள்ளது. அதேசமயம், இன்று அரச தலைவர் மைத்திரிபால தரப்பிலுள்ள அரசியல்வாதிகளில்பலர்2015ஆம்ஆண்டின்நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவியவர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.**

ஐ.ம.சு.கூட்டணியின்தலைவரென்ற வகையில் ஆரம்பத்தில் மகிந்தவுக்கு தேர்தல்வேட்பாளர்நியமனம்வழங்க மைத்திரிபால மறுத்தார். பின்னர் மகிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கிய போதிலும், மகிந்தவைத் தவிர்த்துவேறொருவரைத்தலைமை அமைச்சர் பதவிக்குப் பெயர் குறித்தொதுக்குமாறுதெரிவித்தார். ஐ.ம.சு. கூட்டணி பொதுத் தேர்தலில் வெற்றி பெறுமானால்மகிந்தவுக்குதலைமை அமைச்சர் பதவி வழங்கப்போவதில்லையெனப் பகிரங்கமாக அறிவித்தார். இவையாவும் அரச தலைவர் என்றரீதியிலும்,ஐ.ம.சு.கூட்டணியின் தலைவர் என்ற ரீதியிலும் மகிந்தராஜபக்சவை திட்டமிட்டுப் புறமொதுக்கும் விதத்தில் மைத்திரிபால செயற்பட்டிருந்தார் என்பதை நிரூபிக்கப் போதுமான சான்றுகளாகும்.

### உள்ளூராட்சித் தேர்தலுக்கும் ஏனைய தேர்தல்களுக்கும் மக்கள் ஆதரவில் நிறையவே வேறுபாடு உண்டு

தற்போதுநாம்மீண்டும்நாடாளுமன்றத்தேர்தல்முடிவுகள்குறித்துகவனம் செலுத்தினால்மகிந்தவின்பெருந்தொகையான ஆதரவாளர்கள்தமதுவாக்குகளால் மைத்திரிபாலவுக்கு வாய்ப்புக்கிட்டுவதை விரும்பாது அந்தப் பொதுத்தேர்தலில்வாக்களிப்பதையே தவிர்த்திருந்தனர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அந்தவகையில்நாடாளுமன்றத்தேர்தல் வேளையில் மகிந்தவுக்கான வாக்கு ஆதரவு 58 இலட்சமாகவும் அவருக்கு எதிரான வாக்குகள் 62இலட்சமாகவும் அமைந்ததாகக் கொள்ளஇயலும். இதன்அடிப்படையிலேயேநாம்எதிர்வரும்தேர்தலையும் நோக்க வேண்டியுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில்புதிதாகவாக்களிக்கத்தகுதி பெற்ற இளம்பரம்பரையினரது வாக்குக்கள் பெரும்பாலும் அரச தரப்புக்கு ஆதரவாக அளிக்கப்படப் போவதில்லை. ஏனெனில் அந்த் இளம்பரம்பரையினர் அரசுக்கு எதிரான மனநிலையையே கொண்டுள்ளனர்.

முன்னர்மகிந்தவுக்குஆதரவாகஅரச தலைவர்தேர்தலில்கிட்டிய58லட்சம் வாக்குகளில்பெருமளமானவைஇம்முறை தாமரை மொட்டுச் சின்னத்துக்கே கிட்ட இடமுண்டு எனக் கருத வேண்டியுள்ளது.அதேசமயம்இன்று அரச தலைவர் மைத்திரிபால தரப்பிலுள்ள அரசியல்வாதிகளில் பலர் 2015ஆம்ஆண்டின்நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியைத்தழுவியவர்கள்என்பதைநாம் மறந்து விடக்கூடாது.

எதிர்வரும் தேர்தலில் வெவ்வேறு தரப்புக்களாக உடையப்போவது அரசுக்கு ஆதரவாகச்செயற்படும்தரப்புக்களே. அவர்களதுவாக்குகள்ஐ.தே.க., தமிழ்தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகக் கட்சிபோன்ற தரப்புக்களுக்கு பிரிவடைந்துசெல்லப்போகிறது. மகிந்தவின் தலைமையிலான தாமரைமொட்டுதரப்பு58இலட்சம்வாக்குகளைத் தன்வசம் கொண்டே போட்டியை ஆரம்பிக்கப்போகிறது என்ற நம்பிக்கை சரியானதாயின், ஐ.தே.கட்சி 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்து நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற51லட்சம்வாக்குகள்எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தாமரை மொட்டுச் சின்னத் தரப்பைத் தோற்கடிக்கப்போதுமானதாகஅமையப்போவதில்லை.

இத்தகைய கணிப்பு பிழையாக அமையவும் இடமுண்டு. ஏனெனில் இடம்பெறப்போவது உள்ளூராட்சி மன்றங்ளுக்கான தேர்தலேயன்றி நாடாளுமன்றத் தேர்தல்ல. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் வாக்காளர்கள் கட்சிகளுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படுவதைவிட தமக்கு அறிமுகமாக வேட்பாளர்களுக்கு வாக்களிக்கவே அதிக வாய்ப்புண்டு என்பது சகலராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு விடயமாகும். இந்தத் தேர்தலை தனிநபர்களுக்கு ஆதரவளிப்பதாகப் பயன்படுத்தாது அரசுக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதத்தில் பயன்டுத்துமாறு மகிந்தவின் தாமரைமொட்டு தரப்பு மீண்டும் மீண்டும் கோரிவருவது மேற்குறிப்பிட்ட அடிப்படையைக் கருத்தில்கொண்டேயாகுமெனக்கருதமுடியும். ஆயினும் அத்தகைய கோரிக்கைக்கு எந்த அளவுக்கு வாக்காளர்களிடமிருந்து ஆதரவு கிட்டுமெனஅனுமானிப்பதற்குஇன்னமும் காலம் கனியவில்லை என்றே கூற வேண்டியுள்ளது.



## ஆசிரியருக்கான கடிதம்

### பாராட்டும் மதிப்பும் ஊக்க மருந்தேயாகும்

உதயன் 33ஆம் அகவை ஆரம்பத்தை முன்னிட்டு உதயன் நிர்வாகம் உதயன் பத்திரிகையைத்திறம்பட வெளிவர உழைத்த சிற்பிகளுக்கு விருது வழங்கிக் கௌரவித்த காட்சிகளைப் பத்திரிகையில் கண்டு மகிழ்ந்தேன். இத்தகைய விழாவை கொழும்பில் வேறு ஊடக நிறுவனங்கள் முன்னர் நடத்தியதை வாய் பிளந்து பார்த்ததே எங்கள் வரலாறு. வரலாற்றில் முதல் தடவையாக எமது பிள்ளைகளுக்கு இவ்வாறான மதிப்பை உதயன் நிர்வாகம் வழங்கியமை பெருமைக்குரியது. அரசோ அல்லது ஊடகத்துறை தொடர்பான பொது அமைப்புக்களோ முன்னின்று செய்யவேண்டிய காரியத்தை உதயன் நிர்வாகம் சிறப்பாக நடத்திக்காட்டியுள்ளது. உண்மையில் ஊடகத்தறையில் சவால்களை வடக்கு ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களுமே பெரிய அளவில் எதிர்கொண்டமை வரலாற்றுப் பதிவுகள் வசதி வாய்ப்புகள் உள்ள, அச்சுறுத்தல் இல்லாத தென்னிலங்கை ஊடகங்களைவிட வடக்கு ஊடகங்கள் தான் விருதுகளுக்கும் மதிப்புக்கும் தகுதி கொண்டவை. அதிலும் உயிர் இழப்புக்களை, உடமைச்சேதங்களை எதிர்கொண்ட உதயனின் சேவை மகத்தானது. அந்தவகையில் உதயனின் இந்தக் கைங்கரியம் எமது ஊடகத்துறை உந்து சக்தியாக, ஊக்கியாக அமையும். ஒவ்வொரு துறையிலும் சாதனையாளர்களை வெளிக்கொணர்ந்த சிந்தனையாளருக்கும், நிர்வாக இயக்குநர்க்கும்,துணைபுரிந்தோருக்கும் பாராட்டுகள்; நன்றிகள்.

தென்மராட்சி மைந்தன்

# விபத்து எனும் வினையின் பற்று

பழனித்துரை தர்மகுமாரன்

இலங்கை என்னும் திருநாட்டில், இயற்கை வளங்கள் செழித்துக் கொழிக்கும் உன்னதமான புனித பூமியில் அன்றாடம் விபத்து அசம்பாவிதங்கள் அதிகரித்து வருகின்றன. இதற்கு செயற்கை வளத்தின் ஆக்கிரமிப்பு அதிகரித்து காணப்படுகின்ற தன்மையே காரணமாக விளங்குகிறது.

**இளையோர் அபிவிருத்தியின் பங்காளர்**

நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்காற்ற வேண்டிய இளைஞர் மற்றும் யுவதிகள் விபத்து அசம்பாவிதங்களில் சிக்கி உடல் உறுப்புக்களை இழப்பதும், உயிரிழந்து போவதும் அந்தந்த பிரதேசம் சார்ந்த அபிவிருத்தியை மறைமுகமாகப் பாதிக்கிறது. பொருளாதார பின்னடைவையும் ஏற்படுத்துகின்றது.

**அதிகரித்த வாகனப் பயன்பாடு**

இன்றைய கால ஓட்டத்தில் இடம்பெறுகின்ற வீதி விபத்து அசம்பாவிதங்களுக்கான முக்கிய காரணத்தை எடுத்து நோக்கின், வாகன நெரிசல் முதன்மை இடத்தைப் பெற்று விளங்குகிறது. இந்தத் தகவல்தரலை இலங்கை போக்குவரத்து பொலிஸ் பிரிவு வெளியிட்டுள்ளது. இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கியதாக 64 இலட்சம்தொகை மதிப்பீடுடைய வாகனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 33 இலட்சம் மோட்டார் வாகனங்கள் உள்ளன. இவற்றின் மூலமே அதிகளவான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

> உள அமைதியுடனும், உடல் ஆரோக்கியத்துடனும் இருத்தல், பயணத் தூரத்துக்கு ஏற்ப எம்மை முற்கூட்டியே தயார்படுத்தல், நிதானத்தை தொலைத்துவிடாது நிம்மதியாக பயணித்தல், அந்தரத்தில் அநாகரீகமாக, அநீதியான முறையில் அவசரமாக வீதியில் பயணிப்பதை தவிர்த்தல் போன்ற செயல் வெளிகளை பொருத்தமுற கடைப்பிடிப்பின் விபத்துக்களும், விபரீதங்களும் குறைவடையும். சட்டங்கள் மதிக்கப்படும். விதிகள் பேணப்படும். இதனால் ஆரோக்கியமான சமூக அமைப்பு உருவாகும்.

**பொருத்தமற்ற வீதிக் கட்டமைவு**

அதுமட்டுமன்றி வாகன அதிகரிப்புக்கு ஏற்ப வீதிக் கட்டமைப்புக்கள் அதிகரிக்கப்படவில்லை. அத்தோடு காணப்படுகின்ற வீதிகளின் பயன்படுதன்மை என்பது அபிவிருத்தியடையவில்லை. இதன் காரணமாக வேக கட்டுப்பாட்டினை பின்பற்றாது நடந்துகொள்கின்ற வாகனச் சாரதிகள் அதிக வேகத்தை கட்டுப்படுத்த முடியாது தத்தளிக்கின்றனர். வேறு வாகனங்களுடனே, உயிரினங்களுடனோ மோதுண்டு தமது உயிரையும், பிறர் உயிரையும் மற்றும் அவர்தம் உடமைகளையும் காவுகொள்கின்றனர்.



**மனித நியதிச் சட்டங்களை பின்பற்றுவோம்**

சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவை மனித குலத்தின் செயற்பாடுகளைப் பிழையான வழியில் செல்லவிடாது தடுத்து, மனித நேயத்தை கடைப்பிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. அவ்வை எமது உயிர்களை பாதுகாக்க உதவிபுரிகின்ற போதும், எம்மை முற்று முழுதாக காப்பாற்றிவிடாது.

மனிதர்களாகிய நாம் மனித நேயம், மனிதாபிமானம், நேர்மை, பிற உயிர் மீது பாசம், பரிதாபம், அனுதாபம் என்பவற்றை பேண வேண்டும். உயிர்களின் பெறுமதியை அறிந்து கொள்ள வேண்டும்.

## உயிர்களைவை பொருத்தமுற தடுப்பதற்கான விழிப்பூட்டல்

அதற்குரித்தான மனித நியதிச் சட்டங்களை நாம் பின்பற்ற வேண்டும். ஏனெனில் சட்டங்கள் நடவடிக்கையாகவும், விதிகள் எழுத்துக்களாகவுமே உள்ளன. அதனை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டியது எமது தார்மீக கடமையாகும். அதாவது, மனிதன் தனது அறிவின் முதிர்ச்சியாலும், தொழில்நுட்ப செறிவின் உள்ளடக்கங்களாலும் உந்துதல் பெற்று புதிய வாகனப் பரிணாமங்களை உருவாக்கிக் கொள்கிறான். இன்றைய போட்டி உலகில் தனது ஆக்கத்தையும், புதிய கண்டுபிடிப்பையும் வினைத்திறனாக்கி செயற்படுகின்றான். ஆனால் அவை தருகின்ற ஆபத்தை உணராமலும், அதனை தடுத்துவிட மாற்று வழிகளை கண்டுகொள்ளாதும் பயணிக்கிறான்.

இங்கு, ஆபத்துக்களை தடுக்க முடியாது என்பதற்காக ஆக்கங்களை நிறுத்திவிட முடியாது. ஏனெனில் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, நேரத்தை மீதப்படுத்தி வேலையை இலகுவாக்குவதற்கு இவை உதவிபுரிகின்றன. அதனைப் பயன்படுத்தும் போது மனித சக்திக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைய பயன்படுத்த முன்வரவேண்டும்.

**பாதசாரிகளுக்குரிய நடைமுறை**

வீதியிலே பயணிக்கின்ற பயணிகளும் பாதசாரிகளும் வீதி நடைமுறைகளை கடைப்பிடித்தால் மட்டுமே போதாது. அவதானமும், பொறுமையும், வீதியின் தன்மைக்கு ஏற்ப பயணத்தை அமைத்துக்கொள்ளும் பக்குவத்தையும் பெற்றிருக்க வேண்டும். வீதியில் உள்ள மஞ்சள் கடவையை அவதானிக்கும் போது பாதசாரிகள் பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

- முதலில் வீதி கடவையின் அருகில் நிற்றல்.
- வலது பக்கம் பார்த்தல்.
- பின்னர் இடதுபக்கம் பார்த்தல்.
- மீண்டும் வலதுபக்கம் பார்த்தல்.
- பின்னர் கைகளை உயர்த்திய வண்ணம் வீதியைக் கடத்தல்.

உண்மையில், "இந்த வீதி நடைமுறைகளைத் தவிர்த்து, வீதிக்கடவை எனக்கு சொந்தமானது. அதிலே விபத்து ஏற்படாது. விபத்து ஏற்பட்டாலும் வாகனச் சாரதியிலேயே தவறு." என்ற விதண்டாவாதக் கருத்துக்களை முன் வைக்காது, புத்தி சாதுரியமாக நடந்து கொண்டு எமது விலைமதிக்க முடியாத உயிர்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

**வாகனச் செலுத்துநர்கள் பின்பற்ற வேண்டிய கடமை**

இதனைக் கருத்தில்கொண்டு போக்குவரத்து பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைய, மோட்டார் வாகனத்தில் இருவர் மட்டுமே பயணிக்க வேண்டும். பயணிக்கும் இருவரும் தலைக்கவசம் அணிய வேண்டும். அத்துடன் மோட்டார் வாகனத்தின் முன்பாக சிறுவர்களை அமர்த்துதல் கூடாது. முச்சக்கர வண்டியில் பெரியவர்களாக இருந்தால் மூன்றுபேரும், சிறியவர்களாக இருந்தால் ஐந்துபேரும் பயணிக்க முடியும். முச்சக்கர வண்டி சாரதியின் ஆசனத்தில் சாரதியை தவிர எவரும் அமர்ந்து கொள்ள முடியாது. அத்தகு செயற்பாடுகளைத் தவிர்க்கும் போது விபத்து அசம்பாவிதங்கள் இடம்பெறுவதை தவிர்த்திருக்க முடியும்.

இவை தவிர தலைக்கவசம் அணிவது முக்கியமானது. அதாவது, காதுகளை நன்கு முடியும், தலையின் பின்பகுதியை மூடியும் அதிர்வுகளில் இருந்து பாதுகாக்கக் கூடிய வகையிலான தலைக்கவசத்தை அணியவேண்டும். தலைக் கவசத்தின் நாடா நாடிப்பகுதியில் இறுக்கமான முறையில் இணைப்புப் பெற்றிருக்க வேண்டும்.



**செயற்பாடுகளில் மாற்றம் வேண்டும்**

வீதி விபத்து அசம்பாவிதங்களை தடுப்பதற்கு வீதிப்போக்குவரத்து பொலிஸார் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டாலும் எம்மவர்களின் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுவதாகத் தெரியவில்லை. கவனக் குறைவு இதற்குரிய முக்கியகாரணமாக கருதப்படுகிறது. குறிப்பாக, சட்டங்கள் விதிகளை நன்கு அறிந்திருந்தும் தமது நேரத்தை மீதப்படுத்துவதற்காக வேகக் கட்டுப்பாட்டை மீறி வேகமாகப் பயணிக்கின்றனர். அதுமட்டுமன்றி வெள்ளைக் கோடுகளில் ஏனைய வாகனங்களை முந்தி செல்ல முனைதல், தலைக்கவசம் அணியாது செல்லல், இரண்டு நபருக்கு மேற்பட்டு மோட்டார் வாகனங்களில் பயணித்தல், கன ரக வாகனங்களின் பின்னால் வேகமாக செல்லல் போன்ற செயல் வேகங்களை தவிர்த்தல் வேண்டும்.


இதைவிட குடும்ப முரண்பாடு, அலுவலகங்களில் வேலைப்பளு, பொருளாதார அழுத்தம், நேரமுகாமைத்துவத்தை கடைப்பிடிக்காமை, அடுத்தநாள் வேலைகளை திட்டமிடல் செய்யாமை, எழுந்தமானமான செயற்பாடுகளை மேற்கொள்ள முனைதல் போன்ற செயற்காரியங்களும் விபத்துக்களை ஏற்படுத்தி விடுகின்றன.

**அவதானத்துடன் செயற்படுவோம்**

ஆகவும், மேலே கூறப்பட்ட விடயங்களை நடைமுறை வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும் சந்தர்ப்பத்திலே 90 வீதமான விபத்து அசம்பாவிதங்களில் இருந்து நாம் விடுபடலாம். விபத்துக்கள் என்பது திட்டமிடப்பட்ட நிகழ்வல்ல. அது அறியாமை, கவனக்குறைவு என்பவற்றால் ஏற்படுகிறது. எனவே வீதியில் பயணிப்பவர்கள் ஒவ்வொருவரும் வீதிவிதிகளையும், நடைமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். வீதிகளின் தன்மைக்கும், போக்குவரத்து செயற்பாட்டின் பரம்பலுக்கு ஏற்பவும் பயணிப்பதற்கு எம்மை நாமே தயார்நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதாவது உள அமைதியுடனும், உடல் ஆரோக்கியத்துடனும் இருத்தல், பயணத்தூரத்துக்கு ஏற்ப எம்மை முற்கூட்டியே தயார்ப்படுத்தல், நிதானத்தை தொலைத்துவிடாது நிம்மதியாக பயணித்தல், அந்தரத்தில் அநாகரீகமாக, அநீதியான முறையில் அவசரமாக வீதியில் பயணிப்பதை தவிர்த்தல் போன்ற செயல்வெளிகளை பொருத்தமுற கடைப்பிடிப்பின் விபத்துக்களும், விபரீதங்களும் குறைவடையும். சட்டங்கள் மதிக்கப்படும். விதிகள் பேணப்படும். இதனால் ஆரோக்கியமான சமூக அமைப்பு உருவாகும்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
12 . 06 . 1925

மறைவு
23 . 12 . 2016

## அமரர் தம்பையா சங்கரப்பிள்ளை

(பாண் விற்பனையாளர்)

ஏன் பிரிந்து சென்றீர்கள் தாத்தா
என்னை ஏன் பிரிந்து சென்றீர்கள் தாத்தா?
என் கண்கள் வானத்தை அங்குலம்
விடாமல் தேடி ஓய்ந்துவிட்டன!
வானத்தில் இருக்கும் நட்சத்திரம் போல்
என் கைகள் காற்றையும் அளைந்து
துழாவி பார்த்து சோர்ந்துவிட்டன!

என்னை வளர்த்த தாத்தாவே
என்றாவது கட்டாயம் காணவேண்டும்
என்றாவது கைப்பிடித்து நடக்கவேண்டும்
நன்றாக நாமிருவர்
பேசி சிரிக்க வேண்டுமே!
என்றும் அன்புடன்
தங்கள் பாசமுள்ள - **பேரப்பிள்ளைகள்**

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.
076 684 2555 (cs 12783) (13.17)

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



மண்ணில்
04 . 05 . 1932

விண்ணில்
07 . 01 . 2018

## திருமதி செல்லம்மா தாமு

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா தாமு 07.01.2018 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகளும் இளையதம்பி - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் தாமு இன் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் நாகலிங்கம், சுப்பிரமணியம், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணிதேவி(சுவிஸ்), சகுந்தலாதேவி(இலங்கை), பத்மநாதன்(இலங்கை), லோகநாதன்(ஜேர்மனி), சர்வலோகன்(கனடா), ஜெகநாதன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திராவதி(கண்டி)இன் பெரியதாயாரும் சிவசுப்பிரமணியம்(சுவிஸ்), யோகநாதன்(இலங்கை), இராஜேஸ்வரி(இலங்கை), சர்மினி(ஜேர்மனி), ரகனிதேவி(கனடா), மாலினி (லண்டன்), தம்பித்துரை(கண்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கோபிதா, அனுராஜ், காயத்திரி, சரண்ராஜ், ஜெகதர்சன், துஷாந்தினி, கார்த்திகாஜினி, விதுசன், வானுஜன், மீனுஜா, சுவேரி, விதுர்சன், சாருஜன், சர்மிலன், செந்தூர்யா, சமீதா, கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பூமிகா, ஜாகவி, அட்சயா, சாயனா, தேனகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் உல்லிவிராயர் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 12804) (14, 17)

**077 373 1898**

09.01.2018 அன்று உதயன் பத்திரிகையில் பிரசுரமான சனிக்கிழமை அதிர்ஷ்டம் விளம்பரத்தில் ஆங்கில இலக்கம் O என்பதற்கு பதிலாக G என்று வாசிக்கவும். தவறுதலாக O என பிரசுரமாகியுள்ளது.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2979 திகதி 08.01.2018

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 27 38 63 65 G
போனஸ் இல.: 66
புதன் கிழமை ஜக்பொட்: 39, 400,550/=

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

2018.01.10 ஆம் திகதி புதன் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு,
advt@uthayan.com,
021 493 1111

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
12 . 09 . 2003

விண்ணில்
12 . 12 . 2017


## நவீனதாஸ் அபிஷேக்

இத்தாலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவீனதாஸ் அபிஷேக் கடந்த 12.12.2017 அன்று காலமானார். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இத்தாலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

34, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். (CS 12759)(12.17)

சிறிய தகப்பன்
மகேந்திரம் பிரசாத்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
20 . 03 . 1934

மறைவு
12 . 12 . 2017

## செல்லையா சரவணமுத்து (JP)

(ஓய்வூதிய பொலிஸ் சாஜன் உத்தியோகத்தரும் முன்னை நாள் கொடிகாமம் வல்லி கந்தசாமி கோவில் தர்மகர்த்தா சபை தலைவரும் முன்னை நாள் தென்மராட்சி கிழக்கு **Lions Club** தலைவரும்)



கடந்த 12.12.2017 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.01.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் அனைவரும் கலந்து கொண்டு அவரின் ஆத்ம ஈடேற்றத்துக்காய் பிரார்த்திப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் வீதி, கொடிகாமம்.
**021 2050 386** (CS/1250)(12-17)

து.பாலசுப்பிரமணியம்
குடும்பத்தினர்.

## பகிரங்க ஏல விற்பனை

கேன் காப்பகத்தினால் பாவிக்கப்பட்ட ஒருதொகை பொருள்கள் விற்பனைக்கு உள்ளன. இப்பொருள்களை 25.01.2018 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணி வரை பார்வையிடலாம். ஏல விற்பனை அன்று பிற்பகல் 4.30 மணிக்கு இல.05 சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம் என்னும் விலாசத்திலுள்ள கேன் காப்பகத்தில் நடைபெறும். பொருள்களை பெற்றுக் கொள்வோர் பணம் செலுத்திப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**கேன் காப்பகம், உடுவில், சுன்னாகம்.** (C 12790)(04.17)

## தவறவிடப்பட்டுள்ளது

கடந்த 03.01.2018 அன்று வவுனியாவிற்கும் பரந்தனுக்கும் இடையில் தனியார் பேரூந்தில் கோகுலராஜா தயாளினி N 6865638, கோகுலராஜா விதுஷன் N 6680636, கோகுலராஜா சந்தோஸ் N 6680556 ஆகியோரின் கடவுச்சீட்டுக்கள் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். **077 516 2873/ 077 288 0925** (C 12788)(04.17)

## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

Experts in English Training

சிறந்த வேலைவாய்ப்பிற்கு...
உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்விக்கு...

**Spoken English**

புதிய பிரிவுகளுக்கான பதிவுகளினை DMI இன் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம், கிளிநொச்சி கிளைகளில் மேற்கொள்ளலாம்

## ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

Reading Writing Speaking Listening

**O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**பல்கலைக்கழகம் செல்லவிருப்பவர்களுக்கான விசேட புதிய பிரிவுகள்**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m | Tue, Thu 3.30 p.m. | Tue, Thu 08.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m | Sat, Sun 8.00a.m |
| Mon,Wed,Fri 3:30 p.m | Wed,Fri 9:30 a.m. | Sat, Sun 10.30 a.m. | Sat, Sun 3.30 p.m. | Sat, Sun 10.00a.m |
| Sat, Sun 3.30 p.m. | Sat, Sun 3.30 p.m. | | Tue,Thu 9:00 a.m | |

கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

Certificate in English

Foundation ENGLISH — For beginners who want to read and write English

DIPLOMA IN FLUENT ENGLISH

Diploma in Fluent English Part - I — For people who are doubtful about their English and want to speak English fluently

Diploma in Fluent English Part - II — For speakers who want to master diction and style.

- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம்
- கணினி மூலமான Online Listening பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது .
- அன்றாட நடைமுறை வாழ்க்கைக்கான ஆங்கிலமொழியை பிரதிபலிக்க் கூடிய பாடத்திட்டம்.

**DMI,** British Council இன் அங்கீகரிக்கப்பட்ட **IELTS பரீட்சை பதிவு மையமாகும்.**

**IELTS** •Unique Test Tips •Latest course Materials

**IELTS Life Skills** திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

## DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

## அறுபதில்

Best Wishes

### அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



இன்றைய தினம்
அறுபதாவது பிறந்த
தினத்தில் கால் பதிக்கும்
எமது ஆசான்

**இராமலிங்கம்**
**அருணகிரிவாசன்**
(யா/கோண்டாவில்
இந்துக்கல்லூரி
உப அதிபர்)

அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
பாடசாலை நேரங்களில் மட்டுமன்றி மேலதிக நேர கணித வகுப்புகளை எடுத்து
எம்மை உயர் நிலைக்கு கொண்டு வருவதில் குறியாக இருந்தவர்.
கல்லூரியின் வளர்ச்சியிலும் முதல் நிலை உழைப்பைக் கொடுத்தவர்.
மாணவர்கள் அனைவரையும் சமநிலைக் கண்ணோட்டத்துடன் நேசித்தவர்
எமது ஆசான் அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் ஆரோக்கியமாக வாழ்ந்து
கல்லூரிக்கும் சமூகத்துக்கும் வலுவூட்ட வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

உங்கள் மாணவர்கள்

திருமதி
கஜநிதி விஜயதீபன்
(நூலகர் - பொது நூலகம்
யாழ்ப்பாணம்)

திருமதி
ஜனனி விஸ்வமூர்த்தி
(நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்
யாழ்ப்பாணம்)

(CS 12807)(13.17)



## புனித யோசே வாஸ் ஆண்டு
## யாழ். மறைமாவட்ட நிறைவுதின யாத்திரை
## சில்லாலை
## 13.01.2018 சனிக்கிழமை

### அழைப்பு

**கிறிஸ்துவில் அன்புள்ள அருட்தந்தையர், அருட்சகோதரிகள், அருட் சகோதரர்கள், பொதுநிலை இறைமக்களுக்கு,**

இலங்கையின் திருத்தூதரான புனித யோசே வாஸ் ஆண்டினை சிறப்பாக நிறைவு செய்யும் முகமாக வருகிற ஜனவரி 13 ஆம் திகதி சனிக்கிழமை சில்லாலை யில் ஒழுங்கு செய்யப்படுகின்ற மறைமாவட்ட யாத்திரை நிகழ்வுகளில் தாங்களும் கலந்து எமது புனிதருக்காக இறைவனுக்கு நன்றி கூறவும், அவருடைய பரிந்துரையை மன்றாடவும் உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

நிகழ்வுகள் முற்பகல் 10 மணிமுதல் 3 மணிவரை சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்திலும், 3 மணிமுதல் 6 மணி வரை புதிதாக அமையவுள்ள புனித யோசே வாஸ் திருத்தல வளாகத்திலும் நடைபெறும்.

முற்பகல் 10 மணிமுதல் - கண்காட்சி
பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரை - புனிதயோசே வாஸ் பற்றிய திருவுரைகள்,
தர்க்கப்பிரசங்கம்.
பிற்பகல் 3 மணி - திருத்தல வளாகம் நோக்கிய பவனியும்
ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலியும்.

தூர இடங்களிலில் இருந்து வருவோருக்கான பிரயாண ஒழுங்குகள், தங்குமிட வசதிகள் மற்றும் மதிய உணவு உங்கள் பங்குத்தந்தையர்களூடாக ஒழுங்கு செய்யலாம்.

**அனைவரும் வருவீர் ! இறையாசீர் பெறுவீர் !!**

**ஆயர் இல்லம்,**
**யாழ்ப்பாணம்.** (C 12787)(14.17)

**யாழ் மறைமாவட்ட புனித யோசே வாஸ்**
**ஆண்டுக்குழு**

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வறஞ்சினி தம்பித்துரை



குடத்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வறஞ்சினி தம்பித்துரை 07.01.2018 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசையா மற்றும் செல்லமணி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் மருமகளும், தம்பித்துரையின் அன்பு மனைவியும், தயாளினி (சுவிதா), சுகந்தா, தயாபரன் (மைந்தன்), சுபானு ஆகியேரின் பாசமிகு தாயும், செல்வமலர் (செல்லக்கிளி), செல்வகுமார் (சுவிஸ்), செல்வநாயகி (சோதி), செல்வபவானி (சுவிஸ்), இராசகுமாரி (ராசி), மன்மதராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனுசன் (லண்டன்), அவர்களின் பாசமிகு மாமியும், சரோசாதேவி, தர்மராஜ் (கொலண்ட்), குபேரலிங்கம் சந்திரவதனி (சுவிஸ்), தயாகரன் (ஜேர்மனி), சிவகரன் (சுவிஸ்), குணசக்திவேல், தசேந்தினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், நிசானா, நியாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.01.2018) வியாழக்கிழமை லண்டனில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைகளுக்காக Chilterns Crematorium Whielden Lane Amersham HP 7 OND மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**குடத்தனை வடக்கு, குடத்தனை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**0776176952**

## மரண அறிவித்தல்

### Dr. சபாரட்னம் முத்துக்குமாரசாமி



தோற்றம் 29.06.1929 — மறைவு 05.01.2018

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூர், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்னம் முத்துக்குமாரசாமி 05.01.2018 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்னம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ராசகாரியர் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி(பகவதி)இன் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம்(Dental Surgeon), சுப்பிரமணியம்(Engineer), மகேஸ்வரி, மகாதேவா(Engineer of Telecom), பரமேஸ்வரி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கமலாம்பிகை, விஸ்வநாதன்(Lawyer, LSSP), Dr. ரகுநாதன், பாலசுப்பிரமணியம்(Surveyor) மற்றும் ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், விமலேந்திரன், மோகனச்சந்திரா, காலஞ்சென்ற கமலா, கிரிஜா, ஜெயந்தி, ராஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநேசன், ஸ்ரீதரன், சுதர்சன், அகிலன், மயூரிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், செழினி, லக்ஷ்மன், தேசுகி, ஜஸ்மினி, டண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக நேற்று (10.01.2018) புதன்கிழமை பி.ப 6.00 - பி.ப 9.00 க்கு Shanti Funeral Services, 184 Pinner Rd, Harrow, Middlesex, HA1 4JP, UK. இல் வைக்கப்பட்டது இன்று (11.01.2018) வியாழக்கிழமை மு.ப 9.30 - 11.00 கிரியைகள் நடைபெற்று ந.ப 12.00 - 12.45 மணிக்கு Golders Green Crematorium, 62 Hoop Ln, London NW11 7NL, UK இல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 12762) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**+442084273446 / +447905898968**

குளிர்காலத்தில குளிக்கும்போது சில்லுன்னு முதல் தடவை தண்ணியை எடுத்து...



மேல ஊத்திக்கும்போது கண்டுபிடிக்கப்பட்டதுதான் 'பிரேக் டான்ஸ்'

ஏண்டா எறும்புப் பவுடர் வாங்கிட்டு வரல்ல...



என்னண்ணே நீங்க விவரம் தெரியாத ஆளா இருங்கீங்க.. இண்டைக்கு பவுடர் வாங்கிக் கொடுத்தா நாளைக்கு லிப்ஸ்டிக் கேக்கும்...

அப்பா, குடிக்காதேண்டு சொன்னவுடன் திருத்தியவர்களை விட...



அப்பா குடிச்சிட்டு அம்மாவை அடிச்சதால குடிப்பழக்கம் வேணாம்னு நினைச்ச பசங்க அதிகம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் புத்துணர்வு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். குடும்பத்தினர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** முக்கிய செயலை பிறரை நம்பி ஒப்படைக்கக் கூடாது. சமூகத்தில் நற்பெயரை பாதுகாக்கவும். தொழில் வியாபாரம் தாமத கதியில் இயங்கும்.

**மிதுனம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழிலில் இடையூறுகளை உடனடியாகச் சரிசெய்வது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கும். திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். பணவரவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** முன்யோசனையுடன் நடப்பது நல்லது. தொழிலில் உற்பத்தி விற்பனை அளவுடன் இருக்கும். இலாபம் சுமார். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் குறிப்பறிந்து செயல்படுவர்.

**கன்னி:** இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழிலில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். உபரி பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** நற்பெயரை பாதுகாப்பதில கவனம் தேவை. தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். இலாபம் மிதமாக இருக்கும்.

**விருச்சிகம்:** தாமதமான செயல் கூட நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். இலாபம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**தனுசு:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை கிடைக்கும். சிறு செயலையும் நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து தாராள பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். மன உறுதியுடன் செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரித்தாலும் இலாபம் குறையாது.

**கும்பம்:** நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு தேவைப்படும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**மீனம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

இந்த நிமிஷம், இந்த நொடி, இந்த நாள்,
இப்படி ஒவ்வொன்றையும் எனதானது .
இந்த நிமிடம் மகிழ்ச்சியாக இருப்பேன்.. .
எந்த ஒரு வேதனையும் என்னால் தாங்க முடியும்.. .
இந்த வாழ்க்கை எனதானது.
அதில் சந்தோசத்தை தவிர வேறு எதையும் அனுமதிக்கமாட்டேன் என்று உறுதிகொள்ளுங்கள்......
உங்களைப் பார்த்து மற்றவர்களும் உற்சாகம் கொள்வார்கள்....!!...





# 750 கோடி ரூபா செலவில் விக்ரமின் அடுத்த படம்

துரவ நட்சத்திரம் படத்தைத் தொடர்ந்து, விக்ரம் அடுத்ததாக 'மகாவீரர் கர்ணா' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப்படம் இலங்கை மதிப்பில் சுமார் 750 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்படவுள்ளது என்று படக்குழு அறிவித்துள்ளது.

'ஸ்கெட்ச்', 'துரவ நட்சத்திரம்', 'சாமி2' படங்கள் விக்ரமின் நடிப்பில் அடுத்தடுத்து திரைக்கு வரவுள்ளன. இந்த நிலையில் அடுத்ததாக விக்ரம் நடிக்கவுள்ள படம் 'மகாவீரர் கர்ணா' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜேஸ் செல்வா இயக்கத்தில் இந்தப் படத்தில் விக்ரம் நடிக்கவுள்ளார். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் படப்பிடிப்புப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சின்னப்பசங்க பழிவாங்குவாங்க...



பெரியவங்க மன்னிச்சிடுவாங்க...



ஆனா ரொம்ப பெரியவங்க கண்டுக்கவே மாட்டாங்க...



# சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | 8 | | | 4 |
| 7 | | 9 | | | 6 | | | |
| | 6 | | | | | 3 | | |
| | 5 | | 8 | | 4 | | 1 | |
| | | | 1 | 5 | 2 | | | |
| | | 2 | | 6 | | | | |
| 5 | | | | | | | 8 | |
| | | | | | | 1 | 4 | 2 |
| | 8 | | | 1 | | 6 | | 3 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 8 | 2 | 7 | 1 | 6 | 4 | 3 |
| 3 | 1 | 2 | 6 | 4 | 8 | 9 | 7 | 5 |
| 4 | 7 | 6 | 9 | 3 | 5 | 2 | 8 | 1 |
| 1 | 4 | 3 | 5 | 9 | 2 | 7 | 6 | 8 |
| 6 | 8 | 9 | 7 | 1 | 4 | 5 | 3 | 2 |
| 5 | 2 | 7 | 8 | 6 | 3 | 4 | 1 | 9 |
| 7 | 3 | 1 | 4 | 5 | 9 | 8 | 2 | 6 |
| 8 | 9 | 4 | 1 | 2 | 6 | 3 | 5 | 7 |
| 2 | 6 | 5 | 3 | 8 | 7 | 1 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



## என்னைப்பற்றி நான்...

1. எனது பெயர் தமிழரசி.
2. நான் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறேன்.
3. எனது அப்பா தமிழ் மொழி, இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்.
4. அவர் தமிழ் மொழியில் கொண்ட பற்றினால் எனக்கு இந்தப் பெயரை வைத்ததாகக் கூறுவார்.
5. எனது அம்மா வீட்டின் எஜமானி.
6. எங்கள் வீட்டில் நான்தான் மூத்த பிள்ளை.
7. எனக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் இருக்கிறார்கள்.
8. வீட்டில் நாங்கள் தாத்தா பாட்டியின் செல்லப்பிள்ளைகள்.
9. எங்கள் வீட்டுப் பூந்தோட்டத்தில் மலர்ந்த பூக்களைப் பறித்து கடவுளுக்குச் சூட்டி வணங்குவேன்.
10. என்னையும் தம்பியையும் அப்பா தினமும் தனது துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு ஏற்றிச் செல்வார்.
11. பாடசாலை நேரம் தவிர்ந்த மாலை வேளையில் நான் எனது நண்பிகளுடன் சேர்ந்து விளையாடுவேன்.
12. வீட்டில் காய்கறித்தோட்டம் வைத்துள்ளோம். தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுவது என்னுடையதும், தம்பியினதும் பொழுதுபோக்காகும்.
13. இரவிலே பாடங்கள் படிப்போம்.
14. சில வேளைகளில் மணல் பரப்பிய எமது முற்றத்தில் எல்லோரும் குடும்பமாக இருந்து நிலா ஒளியை ரசிப்போம்.
15. அவ்வேளைகளில் தாத்தாவும், பாட்டியும் எமக்கு அப்புலிமாமாகதை, தென்னாலிராமன் கதை, ராசா ராணிக் கதையெல்லாம் கூறுவார்கள்.
16. எனக்கும் அப்பா போன்று தமிழ்மொழியில் மிகுந்த விருப்பம். கூடவே இசையையும் விரும்பிப் படிக்கிறேன்.
17. எதிர்காலத்தில் நான் ஒரு ஆசிரியையாக, அதுவும் "தமிழ்மொழியை விரும்பிக் கற்பிக்கும் ஆசிரியையாக வர விரும்புகிறேன்.
18. எனது பெற்றோரும் ஆசிரியர்களும் எனக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத் தந்துள்ளார்கள்.
19. அவர்கள் வழிகாட்டுதலில் நடந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லவளாக வாழ்வேன் என்று உறுதி எடுத்துக் கொண்டுள்ளேன்.

## பனிநீரில் பரிசோதனை

ஓர் ஊரில் ஒரு மனிதருக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் இளைஞர்கள். அவர்களில் இராமன் அமைதியான சுபாவம் கொண்டவன். அடக்கமானவன். நல்ல அறிவுடையவன். இளையவன் சந்திரன். முரட்டுச் சுபாவம் கொண்டவன். எப்பொழுதும் திமிராகப் பேசுபவன். குறுக்குப் புத்திகொண்டவன். அண்ணன் தம்பி இருவருக்கும் நானா நீயா அறிவாளி என்று அடிக்கடி விவாதம் ஏற்படும் ஆனால் மூத்தவன் தம்பியாயிற்றே என்று கொஞ்சம் பொறுமையாகப் போவான். ஆனால் இளையவனுக்கு பொறுமை கிடையாது. எப்போதும் அண்ணன்காரனோடு சரிக்குச் சரியாக விதண்டாவாதம் பேசுவான். அவன் அவளவுக்கு மிஞ்சிப் போனால் மட்டும் அண்ணன் கொஞ்சம் கடிந்து கொள்வான்.

ஒருநாள் வழமைபோல இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. மூத்தவன் விருப்பமாக தோட்டத்தைக் கொத்திப்பண்படுத்திக் கொண்டிருக்க, இளையவன். தமையனை வம்புக்கிழுத்துக் கொண்டிருந்தான். இதனைக் கவனித்த அவர்களது தந்தை சந்திரா, உன் முரட்டுத்தனத்துக்கு ஒரு அளவேயில்லையா? அண்ணன் என்ற மரியாதையை அவனுக்கு நீ கொடுக்க மாட்டேன் என்கிறாய். நீங்கள் இருவருமே என் பிள்ளைகள். உங்களில் ஒருவனைத் தாழ்த்தியோ அல்லது உயர்த்தியோ பேசி நான் பாரபட்சம் பார்க்க மாட்டேன். உங்களில் யார் அறிவாளி என்று நீங்கள் அறிய வேண்டும். அவ்வளவு தானே? நான் வைக்கும் ஒரு பரீட்சையில் சித்திபெறுபவனே அறிவாளி. அதன் பின்னர் இப்படிச் சண்டைபோட்டுக் கொள்ளக் கூடாது" என்று கூறினார். இருவரும் ஒப்புக்கொண்டனர். தந்தையார் இரண்டு மண் குவளைகளை எடுத்து ஆளுக்கு ஒன்றைக் கொடுத்தார். "இது பனிக்காலம் அதிகாலையில் பனி கொண்டோ கொட்டென்று கொட்டும். நீங்கள் இருவரும் உங்கள் குவளைகளில் பனி நீரை நிரப்பி காலையில் என்னிடம் காட்டவேண்டும். மற்ற விடயங்களை அதன்பிறகு சொல்லுவேன்" என்றார். "சரி" என்று கூறிய இருவரும் குவளைகளைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து சென்றனர்.

இரவு வந்தது. சந்திரன் தனது மண் குவளையை வீட்டின் கூரைமீது வைத்தான். பின்னர் படுத்துக் கொண்டே சிந்திக்கத் தொடங்கினான். அப்பாவின் இந்தப் பரிசோதனையில் நான் தான் வெற்றிபெற வேண்டும். அண்ணன் வெற்றிபெற்று விட்டால் நான் அவனுக்குப் பணிந்து நடக்க வேண்டுமே? நான் முட்டாள் ஆகிவிடக் கூடாது. குவளையைக் கூரையில் வைத்தாகி விட்டது. காலையில் குவளையில் பனிநீர் நிரம்பியிருக்கும். பின்பு பார்ப்போம்" என்று சிந்தித்துக்கொண்டே உறங்கி விட்டான்.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக கூரை மீதேறி மண் குவளையைப் பார்த்தான். அதில் சிறிய அளவு கூட பனிநீர் நிரம்பி இருக்கவில்லை. பலமாக யோசித்த சந்திரன், உடனடியாகக் கீழே இறங்கி கிணற்றிலிருந்து நீரை எடுத்து வந்து எவருக்கும் தெரியாமல் மண் குவளையில் ஊற்றி அதனை முழுவதும் நிரப்பி வைத்தான். பின்னர் எதுவும் நடவாததுபோல குவளையை எடுத்துக்கொண்டு தனது தந்தையாரிம் சென்றான். சிறிது நேரம் கழித்து இராமனும் தன் குவளையுடன் வந்தான்.

தந்தை இருவரது குவளைகளையும் வாங்கி சரீர் என்று அடிக்கும் சூரிய ஒளியில் படும்படி வைத்தார். சிறிது நேரத்தில் சூரிய ஒளி பட்டு இராமனின் குவளையில் இருந்த பனிநீர் முழுவதும் ஆவியாகிப்போனது. வெறும் குவளை காணப்பட்டது. ஆனால் சந்திரனின் குவளை நீரில் பாதியளவு ஆவியாகிச்



சென்று விட, மீதி பாதியளவு நீர் குவளையில் அப்படியே இருந்தது. அப்போது தந்தையோ "ராமா, உனது குவளையில் இருந்த நீர் முழுவதும் பனிநீர். அதனால் அது சூரிய ஒளியில் முழுவதுமே ஆவியாகிப்போய்விட்டது. ஆனால் சந்திரா, உன் குவளையில் இருந்ததில் பாதிதான் பனி நீர் அது சூரிய ஒளியில் ஆவியாகிப்போக மீதியான தண்ணீர் குவளையில் அப்படியே உள்ளது பார்த்தாயா?" என்றார். இதனைக் கேட்டு சந்திரன் தலை கவிழ்ந்தான். தந்தையாரோ இராமன் எப்படி பனி நீரைச் சேகரித்தான் என்பதைத் தம்பிக்கு கூறும்படி கூறினார். "சந்திரா நான் இரவு முற்றத்துத் தரையில் துணிகளை விரிந்து வைத்திருந்தேன். இரவு முழுவதும் பெய்த பனியினால் துணிகள் அத்தனையும் நனைந்து விட்டன. விடிந்ததும் அந்த ஈரத்துணிகளைப் பிழிந்து அவற்றில் படர்ந்திருந்த பனி நீரைக் குவளை நிறையச் சேர்த்தேன்" என்றான். இப்போது தந்தை "சந்திரா, இப்போது நீயே சொல், யார் அறிவாளி என்று" என்றார்.

"அண்ணன் தான்" என்றான் சந்திரன். மிகவும் பணிவாக.

"சந்திரா, நீயும் அறிவாளியாகலாம். முயற்சி செய். அறிவாளியாகலாம்" என்றார் தந்தை.

இப்போது சந்திரன் தனது அண்ணனுடன் அன்புடனும் மரியாதையுடனும் பழகி வருகிறான். தனக்குத் தெரியாத விடயங்களை அண்ணனிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறான். தந்தையோ அண்ணன் தம்பியரைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார்.

## செல்வந்தராக ஆக நூறு வழிகள்




அந்த நகரத்திலேயே பெரும் செல்வந்தர் அவர். நல்ல செயல்களுக்கு வாரி வழங்கும் ஈகைக்குணம் உள்ளவராக அவர் இருந்தார்.

ஒரு நாள் பூங்கா ஒன்றில் அவர் உலாவிக்கொண்டிருந்தார். அழுக்கானதும் கிழிந்ததுமான ஆடை அணிந்த பிச்சைக்காரன் ஒருவன் அவர் எதிரே வந்தான். அவன் அவரைப்பார்த்து "ஐயா! நீங்கள் எனக்கு உதவிசெய்ய வேண்டும். என் தோற்றத்தைப் பார்த்து என்னைப் பிச்சைக்காரன் என்று மட்டும் எண்ணி விடாதீர்கள். நான் ஒரு எழுத்தாளன். புத்தகம் ஒன்று எழுதியுள்ளேன்"என்றான்.

அவர் "என்ன புத்தகம் எழுதியிருக்கிறாய்?"என்றார். "செல்வந்தராக ஆக நூறுவழிகள்" என்ற நூலை எழுதியுள்ளேன் என்றான் அவன். அதைக் கேட்ட அந்தச் செல்வந்தரால் சிரிப்பை அடக்க முடியவில்லை" எழுத்தாளன் என்கிறாய். செல்வந்தராக ஆக நூறு வழிகள் என்ற புத்தகத்தையும் எழுதியிருக்கிறேனென்கிறாய். நீ எழுதிய புத்தகத்துக்கும் உனது வாழ்க்கைக்கும் எந்தத்தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லையே. பிச்சை எடுத்துவாழ்க்கை நடத்துகிறாயே"என்று கேட்டார். உடனே அவன் "என்னுடைய கோலத்தைப் பார்த்துத்தானே இப்படிக் கூறுகிறீர்கள். செல்வந்தனாக ஆவதற்கான நூறு வழிகளில் இதுவும் ஒரு வழி ஐயா" என்றான் அவன். அவனது மதிநுட்பமான பதிலுக்காக அவனுக்கு கைநிறையப் பணம் கொடுத்து அனுப்பினார் அந்தச் செல்வந்தர்.



## வழிகாட்டுவோம்





# 2018 புத்தாண்டு பலன்கள்

2017 முடிந்து 2018 பிறந்துள்ளது. இந்தாண்டு ஒவ்வொரு ராசிக்காரர்களுக்குமான பலன்கள் பற்றியும் பரிகாரத் தலங்கள் பற்றியும் விரிவாகப் பார்ப்போம்.



## தனுசு

உறுதியான சிந்தனை கொண்டவர்களே!
உங்கள் பூர்வபுண்ணியாதிபதியான செவ்வாய், இலாப வீட்டில் நிற்கும் வேளையில் புத்தாண்டு பிறக்கிறது. வருமானம் உயரும். பிரபலங்களின் பட்டியலில் இடம் பிடிப்பீர்கள். கம்பீரமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும். வெகுநாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்போது நிறைவேறும். பிள்ளைகளால் சமூகத்தில் அந்தஸ்து உயரும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். குடும்பத்தினருடன் சென்று குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனின் அலட்சியப் போக்கு மாறும்.

**பார்வைப் பலன்கள்**

ஆண்டின் தொடக்கத்தில் சூரியனும் சுக்கிரனும் ராசிக்குள்ளேயே இருப்பதால், அரசால் அனுகூலம் உண்டாகும். வி.ஐ.பி.களின் உதவியுடன் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். நவீன ரக மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். சொந்த ஊரில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

வருடம் முழுவதும் சனி ராசிக்குள் இருந்து ஜென்மச் சனியாகத் தொடர்வதால், உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. அடிக்கடி உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். வழக்குகளால் கவலை ஏற்படக்கூடும். குடும்பத்தில் அவ்வப்போது சச்சரவுகள் ஏற்படும். எவ்வளவு பணம் வந்தாலும் செலவுகளும் அடுக்கடுக்காகத் துரத்தும். முக்கிய காரியங்களை நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது சிறந்தது. இடைத் தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாறவேண்டாம். புத்தாண்டின் தொடக்கம் முதல் 2.10.18 வரை உங்கள் ராசிநாதனும் சுகாதிபதியுமான குருபகவான், இலாப வீட்டில் இருப்பதால், சவாலான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தைத் திருப்பித் தருவீர்கள். பணப்பற்றாக்குறையால் தடைப்பட்டிருந்த வீடு கட்டும் பணியைத் தொடங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும்.சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். மூத்த சகோதர வகையில் ஆதாயம் உண்டு. தடைப்பட்ட திருமணம் கூடி வரும். சிலருக்கு மழலை பாக்கியம் கிடைக்கும். ஆனால் 14.2.18 முதல் 10.4.18 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரத்திலும் மற்றும் 3.10.18 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 12ஆம் வீட்டில் மறைவதால் எதிர்பாராத பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். கனவுத் தொல்லை, தூக்கமின்மை வந்து செல்லும். கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. ஆண்டின் தொடக்கம் முதல் 13.1.18 வரை சூரியனும், சனியும் சேர்ந்திருப்பதால் தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கும். அவருடன் சின்னச் சின்ன மோதல்கள் வந்து போகும். பிதுர்வழி சொத்துப் பிரச்னையில் இப்போது தலையிட வேண்டாம்.

10.3.18 முதல் 2.5.18 வரை உங்கள் பூர்வ புண்ணியாதிபதியான செவ்வாய், சனியுடன் சேர்ந்து பலவீனமடைவதால் மனதில் இனம் தெரியாத குழப்பம் வந்து போகும். பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் இருக்கும். பூர்வீக சொத்துப் பிரச்சினை விஸ்வரூபமெடுக்கும். உடன்பிறந்தவர்கள் உங்களை தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும்.

2.5.18 முதல் 30.10.18 வரை செவ்வாய், கேதுவுடன் இணைவதால் சில நேரங்களில் மனதில் வெறுமையும் விரக்தியும் ஏற்பட்டு நீங்கும். மகளின் திருமண விஷயத்தில் அவசரம் வேண்டாம். நன்றாக விசாரித்து முடிவு எடுப்பது நல்லது.

22.4.18 முதல் 15.5.17 வரை சுக்கிரன் 6இல் மறைவதால், பேச்சால் பிரச்னைகள் வரக்கூடும். மற்றவர்கள் வீட்டு விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது.

இந்தப் புத்தாண்டு முழுவதும் ராகு 8இலும் கேது 2இலும் அமர்ந்திருப்பதால், எதையும் ஒருமுறைக்குப் பலமுறை அறிவுப்பூர்வமாகச் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்வது அவசியம். பணப் பற்றாக்குறையால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். பழைய வாகனம் வாங்கும்போது ஆவணங்களை கவனமாக சரி பார்த்து வாங்கவும்.

**வியாபரரிகளுக்கு:** இலாபம் அதிகரிக்கும். அதிக வட்டிக்குக் கடன் வாங்கி வியாபாரத்தை விரிவுபடுத்தவேண்டாம். அடுத்தடுத்து போட்டியாளர்கள் தோன்றுவார்கள். முடிந்தவரை கொடுப்பதைத் தவிர்க்கப் பாருங்கள்.

உத்தியோகத்தில் நாளுக்கு நாள் வேலைச்சுமை அதிகரித்தபடி இருக்கும். மூத்த அதிகாரிகளை திருப்திப்படுத்த முடியாமல் திணறுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு தக்க சமயத்தில் கிடைக்காது சக ஊழியர்களின் விஷயத்தில் தலையிடவேண்டாம். இழந்த சலுகைகளைப் போராடித்தான் பெறவேண்டி இருக்கும்.

**மாணவர்களுக்கு:** பாடங்களில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. அன்றைய பாடங்களை அன்றே தெளிவாகப் புரிந்துகொண்டு படித்துவிடுவது நல்லது. எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி படிக்க சிபாரிசுடன் பணமும் செலவு செய்யவேண்டி இருக்கும்.

**கலைத்துறையினருக்கு:** உங்களின் தனித்திறமையை வெளிப்படுத்த முயற்சி செய்யவும்.

இந்தப் புத்தாண்டு புதிய படிப்பினைகளைத் தருவதாகவும், வாழ்க்கையில் வெற்றி பெற எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை உணர்த்துவதாகவும் அமையும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 11.01.2018



1962 - பெருநாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 4 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

1922 - மனித உடலில் முதன் முதலாக நீரிழிவு நோய்க்காக இன்சுலின் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
1942 - இரண்டாம் உலகப்போரில் கோலாலம்பூர், ஜப்பானியரால் கைப்பற்றப்பட்டது.
1972 - கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷ் என்று மீளப் பெயர் பெற்றது.
1995 - நோர்வேயின் பிரதிநிதிகள் கொழும்பு வருகை.
2008 - மகேஸ்வரன் கொலை விவகாரத்தில் மர்மத்தை மூடி மறைக்க அனுமதிக்கமாட்டோம் என நாடாளுமன்றில் ரணில் சூளுரை.
2008 - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விலகல். அதனால் மனித உரிமைகள் கண்காணிப்பு அவசியம் என அமெரிக்கத் தூதுவர் றொபேர் ஓ பிளேக் தெரிவிப்பு.
2008 - உதயனுக்கு விடுக்கப்படும் மிரட்டல்கள் குறித்து சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்.

## நாளை

**12.01.2018**

வெள்ளிக்கிழமை

**மார்கழி 28**

திதி: ஏகாதசி பி.இ. 12.30 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.ப. 10.51 வரை
சுபநேரம்: 06.33—08.03 வரை
ராகுகாலம்: 11.03—12.33 வரை

## பக்தி எழுத்து

### நடுநிலையுடன் செயற்பட வேண்டும் அரச தலைவர்

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி ஊழல் விவகாரம் நாட்டுக்குப் பொருளாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் நாட்டின் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்திவிட்டது. அதிலும் இந்த விவகாரத்தில் தலைமை அமைச்சருக்கும் தொடர்பிருப்பதாக வெளி வந்த தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டன. தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க 'மிஸ்டர் கிளீன்' என்றே இதுவரை அழைக்கப்பட்டு வந்தார். நேர்மையானவர், ஊழலுக்கு அப்பாற்பட்டவர் என்றெல்லாம் விதந்து பேசப்பட்ட அவரும் இந்தக் குற்றச்சாட்டில் சிக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றமை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு விடயமாகத் தெரியவில்லை. முன்னைய அரசின் காலத்திலும் பெருமளவு ஊழல்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவை தொடர்பாக எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் தற்போதைய அரசினால் மேற்கொள்ளப்படவில்லை. இது நாட்டு மக்களுக்குத் துரோகம் புரிகின்றதொரு செயலாகும். நாட்டு மக்கள் என்றுமில்லாத அளவு பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் மேல்மட்ட அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் நாட்டின் பெருமளவு பொருளாதாரத்தைச் சூறையாடுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதிலும் குற்றவாளிகள் யார் என்று தெரிந்த பின்னரும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதையும் அனுமதிக்க முடியாது.

தற்போது அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்குமிடையே பனிப்போர் இடம் பெறுவதன் காரணமாக தலைமை அமைச்சர் மீதான குற்றச்சாட்டுக்கள் வெளிக்கிளம்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது. முன்னாள் அரச தலைவரும், தற்போது பதவியில் உள்ள அரச தலைவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் முன்னைய அரசின் காலத்தில் இடம் பெற்ற ஊழல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் தாமதம் நீடிப்பதாகப் பலரும் கூறுகின்றனர். இது தற்போதைய அரச தலைவரின் நேர்மையான செயற்பாடுகள் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இது உண்மையாக இருக்குமானால் அதுவும் நாட்டு மக்களை ஏமாற்றுகின்றதொரு செயலாகவே கருதப்பட வேண்டும்.

ஒரு ஜனநாயக நாட்டில் சகலரும் சமமாகக் கருதப்பட வேண்டியவர்கள். அங்கு பாகுபாட்டுக்கே இடமில்லை. இந்நிலையில் முன்பு இடம்பெற்ற ஊழல்கள், மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களை விசாரணைகளிலிருந்து விலக்கி வைப்பதும் தற்போது இடம் பெற்றவற்றைத் தூக்கிப் பிடிப்பதும் நேர்மையான செயலாகத் தெரியவில்லை.

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் J/114 பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி F.A.கிறிஸ்ரின் ஆதிரை** அவர்களின் அன்புத் தந்தை

**ஐயம்பிள்ளை சிற்றம்பலம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபததைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.** C 5431,16,17)

## மரண அறிவித்தல்

### செல்வன் சின்னத்துரை கிருஷ்ணரூபன்



பிறப்பு 18.04.1999 இறப்பு 09.01.2018

காரளவளவு, அல்வாய் கிழக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சின்னத்துரை கிருஷ்ணரூபன் 09.01.2018 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சின்னத்துரை (இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்-K.K.S)விஷ்ணுதேவிதம்பதியரின் அன்பு மகனும் தாரிணி (பிரதேச செயலகம், மாந்தைகிழக்கு) கலாஜினி, சிவரூபன் (மலேசியா), சிவாஜினி, சசிகரன் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2018) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு காரளவளவு, அல்வாய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**அல்வாய்.** (C 5486/15/17) **0771387056, 0775836419**

## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 . 08 . 1937



விண்ணில் 06 . 01 . 1994

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(உரிமையாளர் அம்பிகா டிஸ்பென்சறி)

எங்கள் குடும்பத்தலைவரே உங்கள் எண்ணங்களை உண்மையாக்குவோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய நுணுவில் சிதம்பர விநாயகரை வணங்குகிறோம்.

ஓம் சாந்தி!!!

**சரசாலை வடக்கு, சாவகச்சேரி.** (CS 12786)(12,17) **குடும்பத்தினர்.**

## உங்கள் பாதக்கமலத்தில் எங்கள் 15 ஆம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்



அன்னை மடியில் 16 . 07 . 1943

ஆண்டவன் அடியில் 11 . 01 . 2003

**அமரர் சபாபதி நாராயணன்**
(ஓய்வு பெற்ற கிராம அலுவலரும், சமாதான நீதிவானும் )

காலங்கள் கடந்தாலும் கரையாது
எங்கள் அன்பு
கண்களால் காண இயலாது
என்றாலும் உணர்வுகளால்
உணர்ந்து உங்களோடு
வாழ்கின்றோம்.
பிள்ளைகளாகிய எமக்காக
நீங்கள் செய்த தியாகத்தை
என்றும்
மறவோம் அப்பா.....

(CS/12809(14,17)

**பிள்ளையார் கோயிலடி, வடலியடைப்பு,பண்டத்தரிப்பு. மனைவி, பிள்ளைகள்.**

### விசாரணை...

'தற்போது மட்டுமல்லாது, கடந்த காலத்திலும் நாட்டில் இடம் பெற்ற அனைத்து ஊழல், மோசடிகள் பற்றியும் விசாரிக்கப்பட்டு உண்மைகள் கண்டறியப்படவேண்டும்' என்றும் அவர் கோரினார்.

பிணைமுறி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்ச்சையின் மத்தியில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது

விசாரணைக் குழுவின் அறிக்கை கூடிய விரைவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று தலைமை அமைச்சர் உட்பட கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்கள் மத்தியிலும் பொது இணக்கப்பாடொன்று காணப்பட்டது. அது தொடர்பில் எந்த முரண்பாடும் கிடையாது. ஆணைக்குழுவின் அறிக்கையானது கூடிய விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுக்கப்படவேண்டும் என்பதில் நாம் ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து உடன்படுகிறோம்.


Best Wishes



Hereby, We Congratulate our friend
Mr. Nithiyanantham Thisaiyananthan
who has taken oath in the presence of the District Court Judge, Jaffna,
as a JUSTICE OF PEACE
on 27th December 2017.
We pray to God for success in his future endeavors.
With Love, Dear Friends.
(CS 12814/15/17)



பொது நிதி தொடர்பானதும் நாடும் நாடாளுமன்றமும் கரிசனையுடையது மான விடயமாகும். மக்களும் நாடாளுமன்றமும் இந்த விடயத்தில் கொண்டுள்ள அக்கறையானது இந்த நாடாளுமன்றத்திலான விவாதம் விரைந்தவொரு சந்தர்ப்பத்தில் எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதன் மூலம் இந்த விடயம் எந்தவிதத்திலும் திசை திருப்பப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

பெரும் ஊழல் மோசடிகள் தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கையும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும். இரு அறிக்கைகளும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு விடயங்களின் அடிப்படைவரை செல்லவேண்டும். கடந்த காலத்திலும் அதேபோல், தற்போதும் இந்த நாட்டில் இழைக்கப்பட்ட அனைத்து ஊழல் மோசடிகள் தொடர்பிலும் விசாரிக்கப்பட்டு உண்மைகள் கண்டறியப்படவேண்டும்.

ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பகிரங்கமாக வெளியிடப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களும் இந்த நாட்டின் வரலாற்றில் இருந்திருக்கின்றன. பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுஅந்தஆணைக் குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் அந்த அறிக்கைகள் பகிரங்கமாக வெளியிடப்பட்டிருக்கவில்லை.

குறைந்தது இந்த அறிக்கையிலுள்ள உள்ளடக்கங்களை யாவது வெளியிட்டமைக்காக அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும், அரசுக்கும் நான் பாராட்டுத் தெரிவிக்கிறேன். முழு அறிக்கையையும் வெளியிட்டு அது தொடர்பில் விவாதமொன்றை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் -என்றார். (ற-5.61)

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னம்மா குமாரசாமி

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா குமாரசாமி நேற்று (10.01.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்புமனைவியும் காலஞ்சென்ற இரத்தினம் (கிளை முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம் சாவகச்சேரி), நாகேந்திரம் (CTB, புளியம்பொக்கனை) காலஞ்சென்ற பரமேஸ்வரி, சிவானந்தம் (இளைப் பாறிய கோட்டக்கல்வி பணிப்பாளர் தென்மராட்சி), யோகம்மா, மகேந்திரம் (கைதடி மிருக வைத்திய நிலையம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் அரியேஸ்வரி, தவமணி, நாகராசா, வசந்திகாலஞ்சென்றபுலேந்திரன், கமலேஸ்வரி ஆகியோரின் மாமியும் சகிலன், கோகிலன் (அபிஷா புடை வையகம் சாவகச்சேரி), ரூபி, தீபா, றமா, சுகல்யா, கௌசலா, சாந்தி, நகுலன் , அஜந்தன், தர்மிலா (விரிவுரையாளர்), திலீபன் (பொறியிலாளர்), சதீசன் (முகாமைத்துவ உதவியாளர்), பட்டு ,சுதா, சிவா, சசி காலஞ்சென்ற சுபாஸ், கிரிதா , கவிதா, சிவரூபன் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தென்மராட்சி) , கீதா, குகரூபன், அக்சயா, அகல்யா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.01.2018) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு வேம்பிராய் இந்து மயான்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கு. சிவானந்தம் (மகன்)**
**(ஓய்வு நிலைக் கோ.க.ப தென்மராட்சி)**

**சிற்றம்பலம் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை.**

(cs/5485)(17.8)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2980 திகதி 10.01.2018
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 03 09 10 58 K
போனஸ் இல. 29
சனிக்கிழமை ஜக்பொட் 39, 808,320/=
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2018.01.13ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## மரண அறிவித்தல்

### திருமதி ரஞ்ஜனா ஆறுமுகதாஸ்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்ஜனா ஆறுமுகதாஸ் நேற்று (10.01.2018) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.


அன்னார் இராசையா பாலதேவி தம்பதியரின் அன்புமகளும் நடராஜா நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஆறுமுகதாஸ் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பைரவி, பராபரன், பராதீபன், பத்மசுகி மற்றும் விஜிதா (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் பாலராசன், விஜயகுமாரன், பாலஸ்காந்தன், மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சண்முகதாஸ் (சுவிஸ்), சற்குணராசா (சுவிஸ்), கணேஸதாஸ் (சுவிஸ்), புனிதா, பத்மராணி, சூரியகலா, கௌரீஸ்வரி, தவநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் வர்ஜினி, சுதாஜினி (பிரான்ஸ்), அபிராமி (நெதர்லாண்ட்), ஆரணி, கல்யாணி, குமரகுருபரன், சிவசங்கரி, பார்மிலா, வீரமணிகண்டன், கீர்த்தனா, கிருஷ்டிகா, கீர்த்திகன் ஆகியோரின் அன்புமாமியும் சகனா, சரண்யா, சர்மிலன், கௌசிகன், சந்தியா, லக்ஷனா, கஸ்தூரி, கஸ்விகா, கஸ்ணியன், லாவண்யா ஆகியோரின் அன்புப்பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2018) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(cs/12813)(17.8)

## மரண அறிவித்தல்



### செல்லையா நவரட்ணம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய வீதியைப் பிறப்பிடமாகவும், பழைய பொலிஸ்நிலையம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நவரட்ணம் 10.01.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை செல்லையா செல்லம்மா தம்பதியரின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்ற முருகேசு பொண்ணு தம்பதியரின் மருமகனும் அன்னலட்சுமி (சாந்தா), கனகமணி காலஞ்சென்ற செல்வரத்தினம் (ஜேர்மனி) மற்றும் ராசரத்தினம் (கந்தையா, ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் சிவலிங்கம் (கட்டார்), மகேஸ்வரன் காலஞ்சென்ற வில்வராசா மற்றும் ஜெயந்தினி, ஜெயாநந்தினி, தயாநந்தினி, சுரேஷ், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.01.2018) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(c12818)

Galaxy Star
வெற்றி வாரம் 228 திகதி 10.01.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்: 05 29 38 44 57
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 2, 000, 000/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
2018.01.14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## மரண அறிவித்தல்

### திருமதி
### கோகிலம் (மாவதி) செல்வரத்தினம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1958.12.15 | 2018.01.09 |

வேம்படி துன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோகிலம் (மாவதி) செல்வரத்தினம் (09.01.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா செல்வரத்தினம் (மேக்கன் ரயல் மந்திகை பாதுகாப்பு ஊழியர்) அவர்களின் அன்புமனைவியும் செல்வசித்திரா, ஜெயசிறி, ஜெயப்பிரதா, செல்வசங்கர், ஜெயசுதா, செல்வரூபன், ஜெயரூபன், கோகிலராஜ், நிறோஜா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (11.01.2018) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு பிட்டுத்தூர் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேம்படி,**
**துன்னாலை தெற்கு,**
**கரவெட்டி.**

தகவல்
குடும்பத்தினர்.

(cs/12813)(17.8)

## மரண அறிவித்தல்

# திருமதி காமாட்சிப்பிள்ளை ஐயாத்துரை

***(5 ஆம் வட்டாரம், வேலணை வடக்கு)***



வேலணை வடக்கு, 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி காமாட்சிப்பிள்ளை ஐயாத்துரை நேற்று (10.01.2018) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னர் - சீனிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் கமலாசனி, தயாநிதி, ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி (லண்டன்), பாவனி (ஆசிரியை - யாழ். திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை), சிவஞானி (நளினி - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற அரசரத்தினம் மற்றும் பரமநாதன், நாகராணி, அருந்தவம், சுகுமார், யோகராஜா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் செல்லமுத்து, திருக்கேதீஸ்வரி, காலஞ்சென்ற ஆறுமுகதாஸ் மற்றும் கனகம்மா, செல்லம்மா, சிவமணி ஆகியோரின் சகோதரியும் பிரணவன், நிசாந்தி, பிரணவி, ஜனனி, சிவசுதன், கோகிலன், யாகவன், றிசி, சிபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 109, புகையிரத வீதி, யாழ்ப்பாணத்தில் இன்று (11.01.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**109, புகையிரத வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**075 042 4377, 044 745 907 0540,**
**033 755 087 413**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 12815/15/17)

## இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு இடம்பெறும் ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்சைன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**நியூட்டன் வி.க. கால்பந்தாட்டம்**

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. (ம-23)

## வீதியோட்டம்

யாழ்ப்பாணம், ஜன.11

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்களுக்கான வீதியோட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதியோட்டமானது இருபாலையில் உள்ள கலாசாலை முன்றிலில் ஆரம்பமாகி இராச வீதி வழியாக நல்லூரை அடைந்து மீண்டும் பருத்தித்துறை முதன்மை வீதி வழியாக இருபாலையிலுள்ள கலாசாலையை அடையவுள்ளது. (ம-23)

## கூடைப்பந்தாட்ட திடல் திறப்பு நிகழ்வு

யரழ்ப்பாணம் ஜன 11

சென். ஜோன்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கபட்ட கூடைப்பந்தாட்டத் திடல் திறப்புவிழா கல்லூரி அதிபர் என்.ஜே. ஞானப்பொன்ராஜா தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வாக பழைய மாணவர் அணிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான ஆட்டம் இடம்பெறவுள்ளது. (ம-23)

# உடுத்துறை பாரதி இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாhணம் ஜன 11

மருதங்கேணி பிரதேச செயலக கிராம சேவையாளர் பிரிவுக்குட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் உடுத்துறை பாரதி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் பாரதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ஒப்பந்த நீடிப்பு இல்லை பெய்லிஸ் திட்டவட்டம்



"எதிர்வரும் 2019ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிலாந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராகத் தொடர மாட்டேன்" என்று தெரிவித்தார் பெய்லிஸ்.

ஆஷஸ் தொடரில் 0:4 என்ற அடிப்படையில் படுதோல்வியடைந்து கிண்ணத்தைப் பறிகொடுத்தது இங்கிலாந்து. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"என்னுடைய ஒப்பந்தம் 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. அதன்பிறகு நான் வெளியேறுவேன். நான்கு வருடத்துக்குப் பிறகு மாற்றத்துக்கான நேரம் என்று நான் நினைக்கிறேன். புதிய பயிற்சியாளர் மற்றும் மாறுபட்ட அணுகுமுறை புதிய உத்வேகத்தை கொடுக்கும்" என பெய்லிஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# சென். அன்ரனிஸ் அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன.11

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூவாரியர்ஸ் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் அதே நிலைமைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எவையும் பதிவாகாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# பார்சிலோனாவில் பிலிப் கவுட்டினோ




லிவர்பூல் அணிக்காக விளையாடிவந்த பிலிப் கவுட்டினோவை இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 800 கோடி ரூபா கொடுத்து ஒப்பந்தம் செய்துள்ளது பார்சிலோனா.

நெய்மரின் விலகலை அடுத்து அவரின் இடத்துக்கு பொருத்தமான வீரர் ஒருவரைத் தேடிவந்தது பார்சிலோனா. லிவர்பூல் அணியின் நட்சத்திர வீரரான கவுட்டினோவை பார்சிலோனா ஒப்பந்தம் செய்யத் திட்டமிடுகிறது என்று முன்னதாகவே தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்தாகியுள்ளது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர், கவுட்டினோவை விடுவிக்கும் திட்டம் துளியும் இல்லை என்று லிவர்பூல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், இன்று நடைபெறும் ஆட்டத்தில் பார்சிலோனாவும் செல்டா அணியும் பலப்பரீட்சை செய்யவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)



## ஜோகோவிக் வென்றார்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் கூயொங் ரென்னிஸ் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஜோகோவிக் வெற்றிபெற்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 14ஆம் இடத்தில் உள்ளவரான சேர்பிய வீரர் ஜோகோவிக்கை எதிர்த்து தரப்படுத்தலில் 4ஆவது இடத்தில் உள்ளவரான டொமினிக் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:1, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் ஜோகோ விக். (ம)

# இந்தியாவுக்கு எதிராக தாக்குதல் தொடரும்

## கிப்சன் நம்பிக்கை

“இந்திய அணிக்கு எதிரான தாக்குதல்கள் தொடரும்” என்று நம்பிக்கை தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் தலைமைப் பயிற்சியாளர் கிப்சன்.



இந்திய அணிக்கு எதிராக அண்மையில் முடிவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது. அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் வெற்றிக்கு முதன்மைக் காரணியாக இருந்தனர். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கிப்சன் இவ்வாறு தெரிவித்தார்.

"வேகப்பந்து வீச்சாளர்களை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற மனநிலையுடன் செயற்படக்கூடிய பயிற்சியாளர் நான். 4 வேகப்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்கும் போது அணியின் கலவை சரியாக இருக்கிறதா? என்பதை முதலில் பார்க்க வேண்டும். எதிர்வரும் டெஸ்ட் ஆட்டங்களுக்கான சீதோஷ்ண நிலையும் 4 வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உகந்த வகையில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அது கைகூடாவிட்டால் வேறு வழியைக் கையாளவேண்டும். எதுவாகிலும் இந்தத் தொடர் முழுவதும் எப்படி 4 வேகப்பந்து வீச்சாளர்களை களத்துக்கு கொண்டு வருவது என்பதைத்தான் கவனத்தில் கொள்வோம்" என கிப்சன் மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கை அணி நேற்று அறிவிப்பு

இலங்கை - பங்களாதேஷ் சிம்பாப்வே அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள முத்தரப்புத் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 15ஆம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் மத்தியூஸ் தலைவராகச் செயற்படுவார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி விவரம் மத்தியூஸ் (தலைவர்), தரங்க, தனுஸ்க குணதிலக, குசல் மென்டிஸ், சந்திமல், குசல் ஜெனித் பெரேரா, திசர பெரேரா, அசல குணரத்ன, நிரோசன் டிக்வெல்ல, சுரங்க லக்மல், நுவன் பிரதீப், துஸ்மந்த சமீர, செஹான் மதுசங்க, அகில தனஞ்சய, லக்சன் சந்தகன், வனிது ஹசரங்க டி சில்வா.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் காயமடைந்திருந்த தனஞ்சய டி சில்வா, காயத்தில் இருந்து முழுமையாக விடுதலை பெறாததை அடுத்து அவர் அணியில் இடம்பெறவில்லை. (ம)

## கோக்லியே இலக்கு என்கிறார் பிளன்டர்



இந்திய அணியின் தலைவர் கோக்லிதான் முக்கிய இலக்கு என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிளன்டர்.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் கேப்டவுனில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெறுவதற்கு பிளன்டர் முக்கிய காரணமாகத் திகழ்ந்தார். ஒட்டுமொத்தமாக அவர் 10 இலக்குகளைக் கைப்பற்றி வெற்றிக்கு வித்திட்டார். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே பிளன்டர் இவ்வாறு தெரிவித்தார்.

"விராட் கோக்லி மிகவும் அருமையான வீரர். அவரை வீழ்த்துவதுதான் எங்களது இலக்காக இருந்தது. விராட் கோக்லியை ஆரம்பத்திலேயே வீழ்த்திவிட்டால் எங்களுக்கு வெற்றி எளிது என்று கணித்தோம். அதன்படியே இரண்டு இன்னிங்சிலும் அவரை விரைவில் வீழ்த்தினோம். அடுத்தடுத்த ஆட்டங்களிலும் கோக்லியே முக்கிய இலக்கு" என்று பிளன்டர் மேலும் தெரிவித்தார். (ம)

## சைக்கிளோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 11

பண்டத்தரிப்பு எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகம் தைத்திருநாள் மற்றும் எம்.ஜி.ஆரின் 101 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு மகாகாண ரீதியாக நடத்தத் திட்டமிட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி பண்டத்தரிப்பு சந்தியில் பொங்கலன்று இடம்பெறவுள்ள து என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)



## ஆஸியின் துணைப் பயிற்சியாளராக பொண்டிங்

ஆஸ்திரேலிய ரி-20 அணியின் துணைப் பயிற்சியாளராக பொண்டிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளராக டேரன் லீமன் உள்ளார். தனக்கு வேலைப்பளு அதிகமாக உள்ளது என்று லீமன் தெரிவித்ததை அடுத்து. அவருக்குத் துணைப் பயிற்சியாளர்களை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நியமித்து வருகிறது.

ஆஸ்திரேலிய அணி விரைவில் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு எதிராக ரி-20 முத்தரப்புத் தொடரில் விளையாடவுள்ளது. இந்த நிலையில் ஆஸ்திரேலிய ரி-20 அணியின் துணைப் பயிற்சியாளராக



பொண்டிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 2019ஆம் ஆண்டு வரை லீமன் ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராகச் செயற்படவுள்ளார். அதன் பின்னர் அவரின் இடத்தை பொண்டிங் பிரதியீடு செய்வார் என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



## தரப்படுத்தலில் ரபாடா முதலிடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின், டெஸ்ட் ஆட்டங்களுக்கான பந்துவீச்சாளர்கள் தரப்படுத்தலில் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா முதலிடம் பிடித்தார்.

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 5 இலக்குகளை ரபாடா வீழ்த்தியிருந்தார். இதையடுத்தே அவருக்கு தரப்படுத்தலில் முதலிடம் கிடைத்துள்ளது.

888 புள்ளிகளுடன் ரபாடா தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளார். அவரை விட ஒரு புள்ளி குறைவாகப் பெற்றுள்ள அன்டர்சன் இரண்டாவது இடத்தில் உள்ளார். 861 புள்ளிகளுடன் ஜடேயா மூன்றாவது இடத்தில் உள்ளார். 830 புள்ளிகளுடன் அஸ்வின் நான்காவது இடத்தில் உள்ளார். ஹசில்வூட் 814 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே பிளன்டர், கேரத், வாக்நெர், ஸ்ராக், லையன் ஆகியோர் உள்ளனர். (ம)

## உடுவில் மகளிர் கல்லூரி

க.பொ.த உயர்தரம் 2020 மாணவர்களுக்கு

க.பொ.த உயர்தரம் 2020 மாணவர்களுக்கான
**கணித, விஞ்ஞான, வர்த்தக** வகுப்புகள் யாவும்
**2018 ஜனவரி 15** திங்கட்கிழமை
ஆரம்பமாகவுள்ளன.
யாவரும் சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றீர்கள்.
அதிபர்.



## SPOKEN ENGLISH

3 மாத சனி, ஞாயிறு - வாரநாள் பயிற்சிநெறி

இம்முறை O/L எழுதியோர், வெளிநாடு செல்வோர், வீட்டுப்பெண்கள் ஆங்கிலம் பேசவிரும்புவோர் இணைந்துகொள்ளமுடியும்.

எமது நேரடிஉரையாடற்பயிற்சி மூலமான இக் கற்கைநெறியில் அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் 3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 20.01.2018 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

வாரநாள் (திங்கள், புதன்) பயிற்சி ஆரம்பம் - 17.01.2018
காலை 08.00 – 10.00

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும் - முன்பதிவுகள் ஒவ்வொருநாளும் பி.ப 4.30 வரை.
பாடப்புத்தகங்கள், வீடியோ DVD, மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்

SAAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
☎ 021 320 3313, 077 1570 486


# பார்சிலோனா அபார வெற்றி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லெவன்டே அணியுடனான ஆட்டத்தில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் மெஸ்ஸி முதல் கோலைப் பதிவுசெய்தார். 37ஆவது நிமிடத்தில் சுவாரஸ் ஓர் கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா அணி. பிளுக்விேனா 83ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.

(ம)


### To the Members of The Alumni Faculty of Medicine Jaffna
### NOTICE OF MEETING -AGM

Notice is hereby given that the 2nd Annual General Meeting of The Alumni, Faculty of Medicine, Jaffna will be held at the Board Room, Faculty of Medicine, Jaffna at 2.00 p.m. on Saturday 10th February 2018 for the following purposes.

1. To receive and adopt the report of the Committee and the Audited Accounts for the year ended 31st December 2017.

2. To elect office bearers for 2018/19.

3. To appoint an Auditor.

4. To consider any other business of which due notice has been given.

BY ORDER OF THE COMMITTEE OF MANAGEMENT
Vinayagamoorthy Elankumar
SECRETARY, THE ALUMNI FACULTY OF MEDICINE JAFFNA.

(cs/12795)



சுங்கப்பரிசோதகர் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு
வியாழன், வெள்ளி நடைபெறும்.
ஆரம்பம் :
வியாழன் (இன்று)
பி.ப 3.00 - 6.00
076 688 3394
D.M.I
ஆரியகுளம் சந்தி.


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 . 04 . 1955



உதிர்வு 03 . 01 . 2008

அமரர்
## பரமலிங்கம் உதயகுமாரன்
(உதயாஸ் செரமிக்ஸ், யாழ்ப்பாணம்)
(திதி : 11.01.2018)



ஆண்டுகள் பத்து உருண்டோடினாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆசைமுகம் மறைந்தாலும்
நினைவலைகள் அழியாது
ஆசையுடன் எங்களை வாழவைத்த
அன்புத் தெய்வமே
ஆசை அப்பாவே உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# உடன் தேவை



நல்ல நிலையில் உள்ள மாட்டு வண்டில்
உடன் தேவை.
தொடர்புகளுக்கு:
**021 493 0000**



MaxBonus சேமிப்புக் கணக்கு
**60%**
மேலதிக வட்டி

தற்போது உங்களது வழக்கமான வட்டிக்கு
மேலாக 60%
மேலதிக வட்டியையும்,
இலவச ஆயுட் காப்புறுதித் திட்டத்தையும்
பெற்று அனுபவியுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு 0114 711 411 www.nationstrust.com
அல்லது அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சி-PQ118 | பிச் ரேடின் A(lka) | நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வைசெய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

Nations Trust Bank
Nations MaxBonus


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.